அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் முழுமையான சுகாதார பாதுகாப்புத்தன்மை கோண்டது.

பிரத்தியேகமான விசேட கிருமி எதிர்ப்புத் தன்மை கோண்ட இரசாயன கலவை மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க சிறப்பு நிறப்பூச்சைக் (பேயின்ட்) கோண்டு நமது பத்திரிகை அச்சிடப்படுகின்றது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN WEEKLY

தமிලන් සතිඅන්තය

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

## நக்கல்நமசிவாயம்

கூடுதலா ஆக்கள் உள்ள இடங்களில தான் கொரோனா பரவுமெண்டா இனி யூ.என்.பி. கட்சியில யாருக்கும் கொரோனா வராது என்னங்கோ...



மலர் : 01, இதழ் : 09 சார்வரி வருடம், ஆவணி மாதம், 07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (23.08.2020) ஹிஜ்ரி - 1442 முஹர்ரம் பிறை-03, 0115886187 பக்கங்கள் 16 விலை ரூ.30

## ‘வெடி’மணியம்



கிபிர் அடிச்சு ஓய்ஞ்சாலும் “செல்லடி” ஓயாத கதைபோல;

தேர்தல் முடிஞ்சு வேற அலுவலைப்பாப்பம் எண்டாலும்...

எங்கட ஆக்களின் பிரச்சினை ஓய்ஞ்சபாடில்லை!

“துணிவிருந்தால் என்னைக்கள்ளன் எண்டு இப்ப சொல்லுங்கோ பாப்பம்” எண்டு சுமந்திரன் சவால் விட்டிருக்கிறார்.

குற்றம் சாட்டின சசிகலா ரவிராஜ் குத்துக்கரணம் அடிச்ச பிறகு;

கூட நிண்டு கூவினவை துணிஞ்சு சொல்லுவினம் எண்டு நான் நினைக்கயில்லை!

“நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யுங்கோ. நானும் திருப்ப எண்ணச்சொல்லுறன்” எண்டுறார் சுமந்திரன்.

நீதிமன்றத்துக்கு சசிகலா போகமாட்டார் எண்டு தெரிஞ்சுகொண்டுதான்;

சுமந்திரன் உப்பிடி நெஞ்சை நிமித்தி சவால் விடுகிறார் எண்டு சாவகச்சேரி சந்தையில பிலாப்பழம் விக்கிற மனிசி ஒண்டு புறுபுறுக்குது.

கூட்டமைப்பு தேசியப்பட்டியல் விவகாரம் அதன் அரசியல்குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தர் தேசியப்பட்டியல் அறிவிச்ச முறை பிழை எண்டு அரசியல்குழு முடிவெடுத்து;

இந்தப்பிரச்சினையை விசாரிக்க மத்தியகுழுவுக்கு பரிந்துரை செய்து இருக்கினம்.

கூட்டமைப்பின் மத்தியகுழுக்கூட்டம் வாற 29ம் திகதி நடக்குதாம்.

கூட்டமைப்பில 3 ஆசனங்களோட இருக்கும் ரெலோ இந்தக்கூட்டத்தில் முக்கிய முடிவுகளை அறிவிக்குமாம்.

கூட்டத்தில கன “குழப்பங்கள்” “கூச்சல்கள்” “அடிபாடுகள்” வரலாம் எண்டு சனம் கதைக்குது.

இதுக்கிடையில் இந்த தேர்தலில் கூட்டமைப்பின் தோல்வி குறித்து ஆராய ஒரு “சுயாதீனக்குழுவை” நியமிச்சிருக்கினமாம்.என்னத்துக்கு குழு?

பருத்தித்துறையில சந்தையில மரக்கறி விக்கிற பொன்னம்மாக்காவிட்ட கேட்டாலே தெளிவா காரணங்களை சொல்லுவா!

கஜேந்திரகுமார், கஜேந்திரன் இரட்டையர்கள் நல்லூரில் உள்ள திலீபனின் நினைவிடத்தில் முதல்கிழமை மெழுகுதிரி!
அடுத்தகிழமை முள்ளிவாய்க்காலில தீபம்!
எண்டு ஒரே “அமர்க்களம்”!

ஒரு கிழமையா முள்ளிவாய்க்காலில் செத்த சனத்தை நிம்மதியா நித்திரைகொள்ளவிடாமல்;

விக்கினேஸ்வரன் குறுப்பும் கஜேந்திரகுமார் குறுப்பும் ஒரே கரைச்சல்!

முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில்...

“தயவுசெய்து எங்களை நிம்மதியா உறங்கவிடுங்கள். அரசியல்வாதிகள் உள்ளே வரவேண்டாம்” என்று ஒரு பதாகை எழுதிவைக்கவேணும் எண்டு;

தன்ர குடும்பத்தில மூண்டுபேரை பறிகுடுத்த பொடியன் ஒருத்தன் சொன்னவன்.

உண்மையா பாதிக்கப்பட்ட சனத்தின்ர கதையை ஆர் கேக்கினம்?

வெள்ளையும் சொள்ளையுமா பிக்கப்பில் இறங்கி வரும் அரசியல்வாதிகளை “ஆராத்தி” எடுக்கும் ஒரு ஈனக்கூட்டம் இருக்கும் வரை;
எங்கட சனத்துக்கு நிம்மதியில்லை!

“தேசியப்பட்டியல்” எண்டாலும் பறுவாயில்லை நாடாளுமன்றம் போனால் காணும் எண்ட நிலையில் கஜேந்திரன்.

இனிமேல் ரண்டு பொலிசோட “பிக்கப்பில” கஜேந்திரன் திரிவதைப்பாக்க காணக்கண்கோடி வேண்டும் ராசா!

கட்சியுக்குள்ள “கடும் குழப்பம்” ஒண்டு ஓடுது எண்டு பரவலா...

09 »

விசேட செய்தி!

# தேர்தல் முறைமை மாற்றத்தால் தமிழ் - முஸ்லிம் கட்சிகளுக்கு பேரிடி!

## விருப்பு வாக்கு வெட்டுப்புள்ளி 8 வீதமாகிறது

- நமது அரசியல் செய்தியாளர் -

அரசின் புதிய உத்தேச அரசியலமைப்பு திருத்தத்தில் வரவுள்ள தேர்தல் முறைமை மாற்றத்தால் விருப்பு வாக்குகள் வெட்டுப்புள்ளி 8 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது.

பொதுத்தேர்தலில் மாவட்டமொன்றில் அளிக்கப்படும் மொத்த வாக்குகளில் செல்லுபடியாகும் வாக்குகளிலிருந்து 5 வீதத்தை பெற்றால் மாத்திரமே விருப்பு வாக்குகள் கருத்திற் கொள்ளப்படுவதுடன் அந்தக்கட்சிக்குரிய ஆசன ஒதுக்கீடும் கருத்திற் கொள்ளப்படும்.

இந்த முறைமையின் காரணமாகவே சிறிய கட்சிகளின் நாடாளுமன்ற வாய்ப்பு இலகுவாக கிடைக்கின்றது.

ஜே . ஆர் . ஜெயவர்தனவின் ஆட்சிக்காலத்தில் இந்த வெட்டுப்புள்ளி 12.5 வீதமாக இருந்தது.

இது சிறுபான்மை கட்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக கூறி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் செய்த தலையீட்டையடுத்து முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் அது 5 வீதமாக குறைக்கப்பட்டது.

இந்த பின்னணியில் புதிய அரசியலமைப்பினை கொண்டுவரும் முயற்சியில் இறங்கியுள்ள அரசு அதனூடாக தேர்தல் முறைமையில் மாற்றம் செய்து மேற்படி வெட்டுப்புள்ளியை 8 வீதமாக அதிகரிக்க தீர்மானித்துள்ளது.

இது தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாமென கருதப்படுகிறது.

## 8 மணிநேர மின்துண்டிப்பு சதிவேலை

### மின்சார சபை தொழிற்சங்கங்கள் சாடல்!

முழு நாட்டையும் ஒரே இடத்திலிருந்து கட்டுப்படுத்தக் கூடிய தானியங்கி மின் கட்டுப்பாட்டு நிலையம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்டிருந்த போதும் நாசகார சதி வேலை காரணமாகவே கடந்த 17 ஆம் திகதி ஏற்பட்ட மின்தடையை சீர்செய்ய பல மணிநேரம் சென்றதென மின்சாரசபை தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

2015 செப்டெம்பர் மற்றும் 2016 பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இவ்வாறான திடீர் மின்தடை ஏற்பட்டபோது அது தொடர்பில் ஆராய்ந்த விசேட குழுவின் சிபாரிசுக்கமைய,..

02

## தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா உறுதி!

### – அமைச்சர் நிமல்



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றப்படும். தொழில் அமைச்சர் என்ற வகையில் இப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவேன் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

02



படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

முன்னாள் நீதியரசர் இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனும் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும் பால்ய நண்பர்கள் - பின்னர் சம்பந்திகளாகினர். புதிய நாடாளுமன்றத்தின் கன்னியமர்வில் கலந்து கொண்ட பின்னர் இருவரும் சந்தித்துக் கொண்டபோது நாடாளுமன்ற உணவகத்தில் எடுக்கப்பட்ட படமிது.



ஜனாதிபதியின் கொள்கை பிரகடனம், நாடாளுமன்றத்தில் வாக்களிப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனையடுத்து நாடாளுமன்றம் எதிர்வரும் 27ம் திகதி காலை 9:30 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## நாடாளுமன்ற விவாத நேர ஒதுக்கீட்டில் அநீதி

### ஆளும் தரப்புக்கு 60 வீதம் எதிர்த்தரப்புக்கு 40 வீதம்!

லக்ஷ்மன் கிரியெல்லவின் கேள்வியால் சபையில் சர்ச்சை

02

## எம்.பி.க்களுக்கான செயலமர்வு புறக்கணிப்பு: சஜித் பிரேமதாஸ அதிருப்தி!



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கலந்துகொள்ளாமை குறித்து அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கடும் அதிருப்தியினை வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தின்போது கடந்த வியாழன் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ள சஜித் பிரேமதாஸ எம்.பி.க்கள் ஓரணியில் நின்று எதிர்க்கட்சியின் கொள்கை நிலைப்பாட்டை எடுத்திருக்க வேண்டியது...

02



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் வயது முதிர்ந்த எம்.பி.யான இரா. சம்பந்தன், வயதில் குறைந்த எம்.பி.யான ஜீவன் தொண்டமான் ஆகியோர் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கடந்த வியாழக்கிழமை அளவளாவும்போது எடுக்கப்பட்ட படங்கள்.



அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு சாவுமணி

- பிரசன்னா காசிலிங்கம்



தமிழர்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவகையில் அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டாலும், குறைந்தபட்ச அரசியல் பரவலாக்கலின் உயிர் நாடித்துடிப்பாகக் காணப்படும் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்குப் புதிய அரசியலமைப்பு மூலம் சாவுமணி அடிக்கவுள்ளது புதிய அரசாங்கம்.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான அடிக்கல்லாக 19 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையில் கூடிய அமைச்சரவை கடந்த புதன்கிழமை அனுமதி வழங்கியுள்ளது. அத்தோடு, 20 ஆவது திருத்தச் சட்டத்தை உருவாக்குவதற்கும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். “தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு புதிய அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுக்கவில்லை. உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை முன்வைத்து, மக்களை குழப்பமடையச் செய்ய வேண்டாம். புதிய அரசாங்கம் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி அதன் ஊடாக அரசியல் நலன்களை அடைந்துகொள்ள முயற்சிக்கின்றார்கள்” என்று அவர் கடந்த புதன்கிழமை குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல், ஒன்பதாவது நாடாளுமன்ற கன்னி அமர்வில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சந்திரகாந்தன், புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கையில், “13 ஆவது திருத்தச் சட்டத்தை பலவீனப்படுத்த விடமாட்டேன். இச்சட்டத்தின் ஊடாக மாகாண சபை மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். அதற்காக அரசாங்கத்திற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு வெற்றிபெற்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு உடும்புப் பிடியாக இருப்பது கண்கூடு. அதேபோல், ஜனாதிபதியும் இதே நிலைமையில்தான் காணப்படுகின்றார். தேர்தல்கால பிரசாரங்களில், 13 மற்றும் 19 ஆவது திருத்தச் சட்டங்களை நீக்குவதுதான் இவர்களின் பிரதான வாக்குறுதிகளாக இருந்துள்ளன.

அதேநேரம், இந்தியப் பசுபிக் சமுத்திரத்தில் வல்லரசு நாடாகத் திகழும் இந்தியாவால் அறிமுகப்படுத்திய 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதை மோடி தலைமையிலான அரசாங்கம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்குமா என்பதும் கேள்விக்குறி. மாறாக, கடந்த காலங்களைப்போல் ஈழத் தமிழர்களின் நம்பிக்கையில் மண்ணை தூவி விடுமா என்பதும் சந்தேகத்துக்குரியது.

ஈழத் தமிழர்களின் விருப்பு வெறுப்பு அறியாமல் அவசர அவசரமாக இந்திய அரசாங்கத்தால் திணிக்கப்பட்டதாகக் கருதப்படுவதுதான் 13 ஆவது திருத்தச் சட்டம். 1980 களில் அரசியல் உரிமைக்காக அரசாங்கத்தின் மீது பல தமிழ் அமைப்புக்கள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தன. விடுதலைப் புலிகளின் போராட்டத்தை அடக்குவதற்காக இந்திய அமைதிப்படை நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுத் தமிழ் மக்கள் மீது பல அட்டூழியங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அதன் பிற்பாடு இந்திய அரசாங்கத்தினால் மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்கும் வகையில், தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற போர்வையில் 13 ஆவது திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடுகின்றது என்று இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்த நிலையில், அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் இடையில் 1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் 27 ஆம் திகதி 13 ஆவது திருத்தச் சட்ட ஒப்பந்தம் கொழும்பில் வைத்து கைச்சாத்திடப்பட்டது. இச் சட்டத்தின் பிரகாரம் 1988 இல் மாகாண சபை அறிமுகப்படுத்தப்பட்டது. 33 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இதில் குறிப்பிட்டுள்ள பெரும்பாலான அதிகாரங்கள் நடைமுறையில் இல்லாதவையாகவும் தமிழர்கள் தம் உரிமைகளை அனுபவிக்க இயலாத நிலையிலும் காணப்படுகின்றனர்.

இச்சட்டத்தில் பகிரப்பட்ட அதிகாரங்களாக, மாகாண மட்டத்தில் ஓர் மாகாணப் பொலிஸ் படை, அரசாங்கக் காணிகளைக் கையாளும் அதிகாரம் போன்றன வழங்கப்பட்டிருந்தன. இவ்விரண்டு அதிகாரங்களையும் பிடுங்கி எடுப்பதற்குத்தான் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீத்துப்போகச் செய்வதற்கு தென்னிலங்கை பிரயத்தனம் செய்கின்றது.

இத் திருத்தச் சட்டத்தை நீக்கினால் பல்வேறுபட்ட பிரச்சினைகளை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும். அதிகாரப் பகிர்வு நீக்கப்பட்டால் பலவீனமான அரச நிர்வாகம் தோற்றம்பெறும். இச்சட்டத்தில் உருவாக்கப்பட்டதே மாகாண சபை. இதனால், எடுத்த எடுப்பில் தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கவும் முடியாது. இதனைவிட இந்தியாவை மீறியும் இச்சட்டத்தை நீக்குவது என்பதும் இலகுவான விடயமல்ல.

கடந்த 2010 இல் ஆட்சியில் ஏறிய மஹிந்த ராஜபக்ஷ, புதிய அரசியலமைப்பு உருவாக்கும் முயற்சியில் இச்சட்டத்திலும் கைவைத்திருந்தார். 13 பிளஸ் என்பதை 13 மைனஸ் என குறிக்கும் வகையில் அமைய வேண்டுமென இவர் கருதினார். இதனை ஆட்சேபித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், அப்போது இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த சிவசங்கர் மேனனிடம் முறையிட்டிருந்தார். இவ்விவகாரம் பிரதமர் மோடிக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில், 13 ஆவது திருத்தச் சட்டத்தை மாற்றியமைக்கும் முயற்சிக்கு இந்தியா கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. இதனால், இச்சட்டத்தை மாற்றியமைக்கும் முயற்சியை அவர் கைவிட்டிருந்தார்.

புதிய அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கக் கூடாது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் இராதாகிருஸ்ணன் கோரிக்கை முன்வைத்துள்ளார். அதேபோல், பல தமிழ் அரசியல்வாதிகளும் இக்கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றார்கள்.

அறுதிப்பெரும்பான்மையோடு வெற்றிபெற்ற இந்த அரசாங்கத்தில், புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நல்ல சந்தர்ப்பம் அமைந்துள்ளது. இந்த ஆட்சியில் வரலாற்றுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், ஒன்பதாவது நாடாளுமன்ற கன்னி உரையில் கொள்கைப் பிரகடனம் தொடர்பாக உரையாற்றிய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, “அரசியலமைப்பில் மாற்றம் செய்வதற்காக நாம் கோரிய மக்கள் ஆணை எமக்குக் கிடைத்துள்ளது. அனைவரும் இணைந்து நாட்டிற்குத் தேவையான புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவோம்” என்று தெரிவித்துள்ளார். ஜனாதிபதியும் பிரதமரும் குறிப்பிட்டுள்ளதுபோல், சிறுபான்மையினர் பாதிப்புறாத வகையில் புதிய அரசியலமைப்பில் அதிகாரப் பரவலாக்கம் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இல்லாவிடின், சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக, இந்திய அரசாங்கத்தின் எதிர்ப்பையும் மீறி 13 ஆவது திருத்தச் சட்டத்தில் அரசாங்கம் கைவைத்து, புதிய அரசியலமைப்பை முன்னெடுக்குமாயின் அது வரலாற்றுப் பிழையாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.



# வாழைச்சேனை–சமூக நீர் வழங்கல் பிரச்சினைக்கு தீர்வு கோரி மக்கள் கவனயீர்ப்புப் பேரணி






(வாழைச்சேனை)

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேசத்தில் பல்வேறுபட்ட இடங்களில் நிலக் கீழ் நீர்மட்டம் குறைவடைவதனால் சமூக நீர் வழங்கல் பிரச்சினை ஏற்படுவதாகவும் இதற்கான தீர்வு கோரி பிரதேச மக்களினால் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு போராட்டமொன்று வெள்ளிக்கிழமை வாழைச்சேனையில் பிரதேச சபைக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டது.

‘சோரம் போகாதே பாலைவனம் ஆக்காதே...’, ‘உறிஞ்சாதே உறிஞ்சாதே நிலத்தடி நீரை உறிஞ்சாதே...’, ‘ஐஸ் ஆலையை மூடு...’, வாழ்வதா? நீரின்றி சாவதா?.., ‘நீரை விற்று ஆதாயம் தேடாதே...’ ‘தவிசாளரே தயக்கம் ஏன்?’ என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை கையில் ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்து கொண்டோர் கோஷங்களை எழுப்பினார்கள்.

வாழைச்சேனை புதுக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பமான மேற்படி கவனயீர்ப்பு பேரணி வாழைச்சேனை பிரதான வீதி வழியாக கோறளைப்பற்று பிரதேச சபையை சென்றடைந்து அங்கு தமது கோரிக்கை அடங்கிய மகஜரை தவிசாளர் திருமதி ஷோபா ஜெயரஞ்சித்திடம் கையளித்தனர்.

இதன்போது கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டோரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு உரிய பதில் வழங்க முடியாமல் தவிசாளர் அவ்விடத்தினை விட்டு விலகிச் சென்றதையடுத்து, தவிசாளர் தமக்கு சரியான பதிலை வழங்கவில்லையென போராட்டத்தில் கலந்துகொண்டோர் கவலை தெரிவித்தனர்.

பின்னர் அங்கிருந்து பிரதேச செயலகம் சென்று தமக்கு நீதி வேண்டி கோஷம் எழுப்பினார்கள். இதன்போது பிரதேச செயலாளர் எஸ்.தனபாலசுந்தரத்திடம் குறித்த விடயம் தொடர்பாக மகஜர் கையளிக்கப்பட்டது. மகஜரை பெற்றுக்கொண்டவர். குறித்த நிலக் கீழ் நீர் வற்றுதல் தொடர்பான விடயமானது பொது மக்களுக்கு பெரிதும் தீங்கானதாகவுள்ளதால் பிரதேச மக்கள் பாதிக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் குறித்த விடயத்திற்கு சம்பந்தப்பட்டோர் மற்றும் பொது அமைப்புக்களை அழைத்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டு தீர்வு பெற்றுத் தருவதாகவும் பிரதேச செயலாளர் இதன்போது தெரிவித்தார். இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

கோறளைப்பற்று பிரதேசத்தில் கடந்த சில வருடங்களாக நிலக் கீழ் நீரானது குறைவடைந்து வருகின்றது.எனினும் இவ்வருடத்தின் மே மாதத்தில் இருந்து வழமைக்கு மாறாக கிணற்று நீரானது வற்றிபோகின்றது. இதனால் பொதுமக்கள் தமக்கு போதியளவு நீரின்றி சிரமப்படுகின்றனர்.

இதற்கு காரணமாக பிரதான வீதி புதுக்குடியிருப்பு வாழைச்சேனையில் அமைக்கப்பட்ட இரண்டு பனிக்கட்டித் தொழிற்சாலைகள், சுத்திகரிப்பு நீர் விற்பனை நிலையம்,பிரதான வீதி கறுவாக்கேணியில் அமைந்துள்ள பனிக்கட்டி தொழிற்சாலை, பிரதான வீதி கிண்ணையடியில் அமைக்கப்பட்டுள்ள மற்றுமொரு பனிக்கட்டி தொழிற்சாலை மற்றும் சபையின் நூலக வளவினுள் அமைந்துள்ள நீர் விநியோக தள அமைவிடம் போன்றவற்றால் நிலத்தடி நீர் அதிகம் உறிஞ்சப்படுவதனால் பிரதேசத்தில் நீர்மட்டம் வற்றி குடி நீர் வசதியின்றி போவதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்ற விவாத...

நாடாளுமன்றத்தின் இரண்டாவது அமர்வு வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கு கூடியது. இதன்போது நாடாளுமன்றத்தில் பேசுவதற்கான நேர ஒதுக்கீடு தொடர்பில் கேள்வி எழுப்பிய பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆளும்தரப்பு, எதிர்தரப்பு நேர ஒதுக்கீடானது வழமைக்கு மாறாக இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார். அதாவது, கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் பேசுவதற்கான நேர ஒதுக்கீடானது, ஆளும் தரப்புக்கு 40 சதவீதமும் எதிர்த்தரப்புக்கு 60 சதவீதமும் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், இந்த நேர ஒதுக்கீடானது ஆளும் தரப்புக்கு 60 சதவீதமும் எதிர்தரப்புக்கு 40 சதவீதமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், மீளாய்வு செய்யவேண்டுமென்றும் கிரியெல்ல எம்.பி. சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

## தோட்டத் தொழிலாளர்...

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். ”பொதுத்தேர்தலின்போது பெருந்தோட்ட மக்கள் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினர். இதன்காரணமாகவே ஐ.தே.கவின் வாக்கு வங்கியை சரிக்ககூடியதாக இருந்தது. எனவே, தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு தொடர்பில் வழங்கப்பட்ட உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும். பெருந்தோட்ட தொழிலாளர்களை நாம் மறக்கமாட்டோம்.” என்றார் அமைச்சர் நிமல்.

## 8 மணிநேர மின்துண்டிப்பு..

ஒரே இடத்திலிருந்து நாட்டின் தேசிய மின் கட்டுப்பாட்டை செய்யக்கூடிய நிலையமொன்று 2018 ஆம் ஆண்டில் பத்தரமுல்லையில் நிறுவப்பட்டது.

இதனால் திடீர் மின்தடை ஏற்பட்டால் அதனை சீர்செய்ய அதிகபட்சம் இரண்டு மணி நேரமே செல்லுமென குறிப்பிட்ட இலங்கை மின்சாரசபை பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் மாலக்க விக்கிரமசிங்க, மின் கட்டுப்பாட்டு நிலையத்தின் செயற்பாடுகள் சில பொறியியலாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக சாடியுள்ளார்.

இதேவேளை, இந்த மின்தடை குறித்து ஆராய மின்சக்தி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு அதன் அறிக்கையில் பல முக்கிய விடயங்களை குறிப்பிட்டுள்ளதாக சொல்லப்பட்டது.

மின்தடை விவகாரத்தில் யாராவது சதிவேலைகளை செய்திருந்தால் அவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்க அரச உயர்மட்டம் தீர்மானித்துள்ளதாக அறியமுடிந்தது.

## எம்.பி.களுக்கான...

அவசியமென்று வலியுறுத்தியுள்ளார்.

அரசை விமர்சித்து உரைகளை ஆற்றும்போதும் கருத்து வெளியிடும்போதும் நாம் பொதுவான நிலைப்பாட்டிலிருந்து கொண்டு செயற்படவேண்டும்.

ஆனால், அது தொடர்பில் நடத்தப்பட்ட செயலமர்வில் எம்.பி.க்கள் கலந்து கொள்ளாமையால் எமது கொள்கைகள் குறித்து சரியான தீர்மானத்திற்கு வரமுடியாமல் போனது.

இதற்கு நேரமும் பணமும் செலவானதே மிச்சம் என்றும் அதிருப்தி வெளியிட்டுள்ளார் சஜித் பிரேமதாஸ.

# விக்னேஸ்வரனின் உரையால் நாடாளுமன்றத்தில் சர்ச்சை: ஹன்சார்ட்டிலிருந்து சில பகுதிகளை நீக்கவும் கோரிக்கை!

வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை ஹன்சார்ட்டிலிருந்து நீக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி தரப்பிலிருந்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, விக்னேஸ்வரனின் கருத்தானது இலங்கையின் இறையாண்மைக்கு தீங்கு விளைவிக்கும் என்று குற்றஞ்சாட்டியே இந்த கோரிக்கையை அவர் சபாநாயகரிடத்தில் முன்வைத்துள்ளார்.

இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தபோது உறுதிமொழி அளித்த விக்னேஸ்வரன், தனது முதல் உரையில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் அவர்களின் தேசம் என்ற அடிப்படையில் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒவ்வொரு செயலுக்கும் அதன் எதிர்வினை இருக்கும் என்றும் அவர் கூறி, இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் கருத்துகளை வெளியிட்டதாகவும் மனுஷ நாணயக்கார சுட்டிக்காட்டினார்.

தமிழ் மொழி முதலாவது மொழியென விக்னேஸ்வரன் குறிப்பிட்டது தவறானது, அதை நீக்குங்கள் என்றும் கேட்டுக்கொண்டார். அது குறித்து கவனம் செலுத்துவதாக சபாநாயகர் தெரிவித்தார்.



# வாகநேரியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் மரணம்



(வாழைச்சேனை)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள வாகநேரியில் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தொன்றில் 16 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் ஆலய உற்சவத்தில் கலந்துகொண்டு தமது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும்போது வேகக் கட்டுப்பாட்டை மீறி பாதையை விட்டு விலகி விபத்திற்குள்ளானதால் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சுற்றுலா விடுதி வாகநேரியைச் சேர்ந்த நா.ததுஷன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த விபத்து தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# பஸ் மோதி ஒருவர் படுகாயம்; சாரதி கைது!

தென்மராட்சி - கொடிகாமம் சந்தியில் கடந்த வியாழக்கிழமை இரவு 7.20 மணியளவில் பாதசாரி கடவையில் நடந்துசென்ற குடும்பஸ்தரொருவர் பஸ் மோதியதில் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து தங்காலை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. இதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்தில் கொடிகாமம், நாகநாதன் வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இரவிச்சந்திரன் (வயது 45) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

விபத்தை ஏற்படுத்திய பஸ் சாரதி உடனடியாக கொடிகாமம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பஸ்ஸும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. பஸ்ஸில் சென்ற பயணிகள் பிறிதொரு பஸ்ஸில் அனுப்பிவைக்கப்பட்டனர்.

# தேவன்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் காரியாலயம் திறப்பு



(மன்னார் நகர்)

மடு கல்வி வலயத்திற்குட்பட்ட தேவன்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட அதிபர் காரியாலய கட்டிடம் கடந்த வியாழக்கிழமை வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

வடமாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்ட இக்கட்டிட திறப்பு விழா பாடசாலையின் அதிபர் பி.டியூட்சன் தலைமையில் இடம்பெற்றதுடன், விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் ஆகியோர் கலந்துகொண்டு வைபவ ரீதியாக திறந்துவைத்தனர்.

இந்நிகழ்வில், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் என பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழன் தமிழன்
தமிழன் தினசரி மற்றும் வாராந்த பத்திரிகையில் 6.2cm X 3cm அளவில் சிறுவிளம்பரங்களை பிரசுரித்திட 600 ரூபா மட்டுமே.
தொடர்புகளுக்கு:
077 693 0739, 076 139 3805

# திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது; பொருட்களும் மீட்பு!

(வவுனியா)

வவுனியாவில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவரை வவுனியா தலைமை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து திருடப்பட்ட ஆடுகள் மற்றும் மோட்டர்களை மீட்டுள்ளதாக தெரிவித்தனர்.

அந்தவகையில் சமயபுரம் பகுதியில் நெல் அரைக்கும் ஆலையொன்றில் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான நான்கு மோட்டார்களை திருடிய குற்றச்சாட்டு மற்றும் காத்தார்சின்னக்குளம், ஆச்சிபுரம் பகுதிகளில் ஆடுகளை திருடிய குற்றச்சாட்டுகளில் தொடர்புடைய இருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து திருடப்பட்ட மோட்டர்களும், மூன்று ஆடுகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த கைது நடவடிக்கை தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி பீ,ஆர்.மானவடுவின் வழிகாட்டலில், உபபொலிஸ் பரிசோதகர் ஆர்.திசாநாயக்க தலைமையில், சார்ஜட்ன்களான திலீப, திசாநாயக்க, கான்ஸ்டபிள்களான உபாலி, பிரியங்கர ஆகியோரைக்கொண்ட பொலிஸ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்

## பல்கலை. கலைப்பீட மாணவர் ஒன்றியம் கோரிக்கை

பல்கலைக்கழக மாணவர்களுக்கான அடிப்படை உதவிகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென பல்கலைக்கழக பேரவையிடமும் துணைவேந்தர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமும் கோரிக்கை விடுத்துள்ளதாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மாணவர் ஒன்றியம் இதனைத் தெரிவித்துள்ளது.

"கொரோனோ அபாய காலத்தில் பல்கலைக்கழகத்தில் கற்றல் செயற்பாடுகள் நடைபெறாததால் விடுதிகளிலும் வாடகை வீடுகளிலும் தங்கியிருந்த மாணவர்கள் வெளியேறியிருந்த நிலையில், தற்போது அதற்கான வாடகைகளை தருமாறு உரிமையாளர்கள் கோருகின்றனர்.

பல்கலைக்கழகத்தில் மிகவும் வறுமைக்குட்பட்ட மாணவர்களே கல்வி கற்கின்ற நிலையில், இந்த வாடகைத் தொகையைக்கூட செலுத்தமுடியாமல் அவதிப்படுகின்றனர். இதற்கான தீர்வொன்றையும் வழங்கவேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் என பல இடங்களிலுமிருந்து வந்து கல்வி கற்கின்ற மாணவர்கள் மிக வறுமை நிலையிலையே உள்ளனர். அதேநேரம், பல்கலைக்கழகத்திலும் அடிப்படை வசதிகள் இல்லாமல் அவதிப்படுகின்றனர். இவற்றைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ள வேண்டும்'' - என மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.



கொழும்பு முகத்துவாரம் புளுமெண்டல் பிரதான வீதியின் புனரமைப்பு நடவடிக்கைகள் மிகவும் மந்தகதியில் முன்னெடுக்கப்படுவதாக பிரதேச மக்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

கொழும்பிலுள்ள பிரதான வீதியொன்றை முழுமையாக 5 மாத காலம் முடக்கி இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

வீதியின் புனரமைப்புப் பணிகள் காரணமாக நாளாந்தம் குறித்த பகுதியில் பல கிலோமீற்றர் தூரத்திற்கு வாகன நெரிசல் ஏற்படுகின்றது.

இதனால் வாகனச் சாரதிகள் மாத்திரமன்றி, வீதியை பயன்படுத்தும் மக்களும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

குறித்த வீதி மூடப்பட்டுள்ளமையால் அந்தப் பகுதியில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, வர்த்தகர்களுக்கான வியாபாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உரிய தரப்பினர் கவனம் செலுத்தி விரைவில் வீதியை திறக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# காட்டு யானைகளின் அட்டகாசத்தால் அசௌகரியங்களுக்குள்ளாகும் மக்கள்



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பொதுமக்கள் மற்றும் தோட்டச் செய்கையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

குறிப்பாக செட்டி குளம், நீலியாமோட்டை, கனகராயன்குளம், புளியங்குளம், நெடுங்கேணி, காஞ்சூர மோட்டை, மெனிக்பாம் போன்ற பகுதிகளில் யானைகளின் தாக்கம் மிகவும் அதிகரித்த நிலையில் உள்ளது. இதனால் விவசாய, தோட்டச் செய்கையாளர்கள் வெகுவாக பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.



ஒவ்வொரு இரவும் வருகைதரும் யானைக் கூட்டங்கள் பயன்தரும் பயிர்களை நாசம் செய்வதுடன், இருப்பிடங்களையும் சேதப்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யானைகளின் தொல்லைகளுக்கு நிரந்தர தீர்வு காணுமாறு பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மாவட்டத்தின் பிரதான வீதிகளில் பகல் நேரங்களில் வந்துநிற்கும் யானைகளால் பயணிகளும் அசௌகரியங்களுக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, புளியங்குளம் - நெடுங்கேணி பிரதான வீதி, மதவாச்சி - மன்னார் வீதி, பூவசரங்குளம் - செட்டிகுளம் வீதிகளில் மாலைவேளைகளில் யானைகள் வந்து நிற்கின்றமை அண்மைய நாட்களாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் அவ்வீதி வழியாக போக்குவரத்து செய்கின்ற பயணிகள், வாகனச் சாரதிகள் எனப் பலரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதுடன். அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ள நிலை ஏற்பட்டுள்ளது.



புதிய சக்தியுடன் முன்னோக்கி
RDB புனர்ஜீவன
கடன் திட்டம்
Covid 19 தொற்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால்
பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முகம் கொடுத்த பெறுமதிமிக்க எமது வாடிக்கையாளர்களுக்கு
சலுகைகள்
■ சந்தைப்படுத்தல் பிரச்சினைகள், தொழிற்படு மூலதன பிரச்சினை காரணங்களினால்
★ தொழில்முயற்சி வீழ்ச்சிக்கு முகம் கொடுத்தவர்களுக்கு
★ கடன் மீளச் செலுத்த சிரமத்திற்கு உள்ளானவர்களுக்கு
★ நலிவடைந்த தொழில்முயற்சிகளை மீண்டும் கட்டியெழுப்ப மூலதன பற்றாக்குறையானவர்களுக்கு
■ அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில் புரிவோரின் நுகர்வுத் தேவைகளுக்கு
தற்போதைய தவணை பெறுமதிக்கே கூடியளவு கடன் ஒன்றை பெற்றுக் கொள்ள
கடனின் மீளச் செலுத்தும் காலத்தை அதிகரித்துக் கொள்ள
குறைந்த வட்டியில் புதிய கடன் ஒன்றை பெற்றுக் கொள்ள
★ 12 மாதங்கள் வரை சலுகைக் காலம்
★ குறைந்த ஆவணங்கள்
★ துரித சேவை
பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அழைக்கின்றோம்
RDB புனர்ஜீவன
தன்னம்பிக்கையுள்ள இலங்கையருக்காக
ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank
0112 42 52 62 | www.rdb.lk

# ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தின் மீதான விவாதத்தின்போது ஆற்றிய உரைகள்

## பாதாள உலகக் குழுவினரை அடியோடு அழிப்போம்

### நாடாளுமன்றில் செஹான் சேமசிங்க சூளுரை



பாதாள உலகக் குழுவினர் அடியோடு அழிக்கப்படுவார்கள் என்றும் ஒரு இலட்சத்து 61 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுமென்றும் சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம் மீதான விவாதத்தின் போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மக்கள் வழங்கிய அதிகாரத்துக்கான கொள்கைப் பிரகடனம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மக்களின் சகல பிரச்சினைகளுக்குமான தீர்வுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களை விட சிறந்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பட்டதாரிகளுக்கு கடந்த அரசாங்கம் வேலைவாய்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை.

கட்சி பேதமின்றி சகல பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். 5 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க கோட்டாபய ராஜபக்ஷ அவரது கொள்கைப் பிரகடனத்தில் ஒப்புக்கொண்டிருந்தார்.

அதுதொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்திருந்தாலும் 61 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கையை நடைமுறைப்படுத்தியுள்ளது. இன்னும் இரண்டு மாதங்களாகும்போது, மேலும் ஒரு இலட்சம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றாத அல்லது சித்திபெறாத மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம். அதன்போது, ஒரு இலட்சத்து 61 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுத்து வரலாறு படைப்போம்.

மக்கள் மீண்டும் மீண்டும் கேட்கும் சகல தீர்வுகளும் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. காணி உரிமை தொடர்பான நிலையான காணி உறுதிப்பத்திரத்தை வழங்குதல், நாடுமுழுவதும் தற்போது இடம்பெறும் யானைக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதலிலிருந்து மக்களின் உயிரை பாதுகாத்தல், வேலைவாய்ப்பு பிரச்சினைகளுக்கான தீர்வுகள் போன்றன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், இன்று சகல நகரங்களும் போதைப்பொருள் வியாபாரிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இவர்களுக்கு கடந்த அரசாங்கத்தின் ஆதரவு கிடைத்தது. எதிர்த்தரப்பில் இருந்துகொண்டு இது தொடர்பில் தொடர்ச்சியாக கேள்வி எழுப்பினோம்.

ஆகவே, போதைப்பொருள் வியாபாரிகளைப் போன்று பாதாள உலகக்குழுக்களையும் அடியோடு அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு பெரும்பான்மைப் பலத்தை வழங்குவதற்காக தமது வாக்குரிமையை வழங்கிய சகல மக்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். அரசாங்கத்தின் சகல உறுப்பினர்களும் மக்களின் வரத்துக்கு மதிப்பளித்து முழு முயற்சியுடன் செயற்பட தயாராகவிருக்கிறோம் - என்றார்.



## ரணிலை சுற்றியிருந்தவர்களே நாட்டை வீழ்ச்சியடைய செய்தார்கள்

### சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் காட்டம்



முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இன்று நாடாளுமன்றத்தில் இல்லை. அவர் எனது பாடசாலை நண்பர். அவரை நான் எதுவும் குறை கூறப் போவதில்லை. அவரை சுற்றியிருந்தவர்களே நாட்டை வீழ்ச்சிக்கு கொண்டுசென்றுள்ளனர் என்று சபை முதல்வரும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார். கொள்கைப் பிரகடனம் மீதான விவாதத்தின் போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் எதிர்ப்புக்குள்ளாகிய, நான்கரை வருடங்கள் நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது என்ற ஏற்பாட்டை உருவாக்கி அதனூடாக அரங்கேற்றிய நாடகத்தினால் புதிய நாடாளுமன்றத்தை அமைத்துக்கொள்வதற்கு நான்கரை வருடங்கள் காத்திருக்கவேண்டியிருந்தது. சகலதையும் மறந்துவிட்டார்கள்.

சுதந்திரத்துக்கும் சுயாதீனத்துக்கும் எதிராக செயற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மக்களை கட்டுப்பாட்டுக்குள் வைக்கவே முயற்சித்தது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தோற்கடிக்கப்பட்டபோது, 7 சதவீத பொருளாதார வளர்ச்சி வீதத்துடனேயே நாடு நல்லாட்சி அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால், கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் 11 சதவீத பொருளாதார வீழ்ச்சியை சந்தித்துள்ளது. ரணிலை சுற்றியிருந்தவர்களே நாட்டை வீழ்ச்சியடையச் செய்தார்கள் - என்றார்.

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு 12 பேர் நியமனம்: டக்ளஸ் - ஹக்கீம் - செல்வம் ஆகியோரும் தெரிவு!

நாடாளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்களாக 12 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் தெரிவு தொடர்பான யோசனையை சபை முதல்வரான தினேஷ் குணவர்தன நேற்று வெள்ளிக்கிழமை முன்வைத்தார்.

9ஆவது நாடாளுமன்றத்தின் தெரிவுக்குழு உறுப்பினர்களாக நிமல் சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, டக்ளஸ் தேவானந்தா, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவங்ச, பிரசன்ன ரணதுங்க, லக்ஷ்மன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக்க, ரவூப் ஹக்கீம், விஜித ஹேரத் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

செயற்குழுவின் முதல் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களின் பிரச்சினைகளில் இந்தியா மௌனம் காப்பது பொருத்தமானதல்ல

### 13ஆவது திருத்தம் தற்போதுவரை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்கிறார் சிறிதரன் எம்.பி.



சிங்கள மக்களிடமும், தலைவர்களிடமும் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பென்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் இந்தியா மௌனம் காப்பது பொருத்தமானதல்ல என்றும் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு 13இற்கு அப்பால் சென்ற தீர்வு வழங்கப்படும் என்று இந்தியாவுக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள போதிலும், 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தற்போதுவரை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது என்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்ட கொள்கைப் பிரகடனம் மீதான விவாதம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது. இதன்போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அக்கிராசன உரை ' தொடர்பில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டாலும், 70 ஆண்டுகளுக்கு மேலாக புரையோடிப் போயிருக்கின்ற தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி பேசாமல் தவறவிட்டமை மனவருத்தத்துக்குரியது. நாட்டின் முக்கியமான பிரச்சினை தொடர்பில் நாட்டின் தலைவர் பேசாமல்விட்டது துரதிர்ஷ்டவசமாகவே பார்க்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய இனம் கடந்த 70, 80 வருடங்களாக பல இனப்படுகொலைகளுக்கும் அழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்ட இனம். அதனால்தான் அவர்கள் நீண்டகால போராட்டத்துக்கு தமது வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தார்கள். அவர்களின் வாழ்க்கையில் போராட்ட வடிவங்கள் மௌனிக்கப்பட்டிருந்தாலும் இன்னும், தாங்கள் இந்த நாட்டுக்குரியவர்கள் என்ற எண்ணம் அவர்களிடம் உருவாகாமல் இருக்கிறது. நாட்டில் கொண்டுவரப்படும் பல்வேறு சட்டங்களும், சிங்கள மக்களுடைய மனநிலைகளும், அவர்களை வழிநடத்துகின்ற சிங்களத் தலைவர்களுடைய எண்ணங்களுமே இன்னும் இந்த நாட்டை வேறுபட்ட நிலையில் வைத்திருக்கின்றது.

குறிப்பாக, இன்றைய அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையோடு, பெரும்பான்மைப் பலம் இருப்பதாக கருதி மமதையோடு இதனை நடத்த முனைவார்களானால் மீண்டும் இந்த நாடு இனவாத ரீதியான சகதிக்குள் தள்ளப்படும் என்பதற்கு வரலாறு பாடம் கற்றுக்கொடுக்க வேண்டியதென்ற அவசியமில்லை.

ஏனென்றால், நீண்ட நெடும் வரலாற்றுப் பாடங்களை அவர்கள் கற்றுக்கொண்டுள்ளார்கள். இரண்டு தேசிய இன மக்கள் இருந்தாலும், அவர்கள் தமக்கென்று வெவ்வேறு அரசியலையும் பொருளாதாரத்தையும் கொண்டிருக்கிறார்கள்.

இந்த உண்மைகளை அனுசரித்து ஏற்கனவே நடந்திருந்தால் நாடு பொருளாதார அபிவிருத்தியை எட்டுவதில் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. அபிவிருத்தி என்பது ஒரு மாயச்சொல்லாக இருக்கிறது. அபிவிருத்திக்கு முதல், நாட்டில் ஓர் இணக்கத்தை ஏற்படுத்தவேண்டும். மக்களிடையே உறவை ஏற்படுத்துவதோடு, சகலரும் நாட்டின் பிரஜைகள் என்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும்.

இவற்றை மக்க ளிடையே ஏற்படுத்தும் வரை நாட்டில் அபிவிருத்தி என்ற சொல் ஓர் இனத்தின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்ப்பதாக அமையாது என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

1956ஆம் ஆண்டில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவந்தபோது, "இருமொழிகள் ஒரு நாடு ஒரு மொழி இருநாடுகள்" என்று கூறிய சிரேஷ்ட அரசியல்வாதியும் சட்டத்தரணியும் சரித்திர ஆசிரியருமான கொல்வின் ஆர். டி. சில்வா, ஜே.ஆர்.ஜெயவர்தன நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி பதவியை உருவாக்கியபோது, ஜே.ஆர்.ஜெயவர்தனைவை பார்த்து, "உங்களுடைய காலத்தில் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டுமானால் நீங்கள் நடைமுறைப்படுத்துங்கள். ஆனால், நீங்கள் போகும்போது இந்தச் சட்டத்தை இரத்துச்செய்து நாடாளுமன்ற அதிகாரம் நிலைத்து நிற்க வழிவகுத்துவிட்டுச் செல்லுங்கள். உங்களுக்குப் பின்னர் இந்தச் சட்டத்தை ஒருவரும் நடைமுறைப்படுத்த மாட்டார்கள். இதனை அவர்கள் கொடூரமாக நடைமுறைப்படுத்தக்கூடும்" - என்று தெரிவித்ததாக வரலாறு குறிப்பிடுகிறது.

போர்க்காலத்தில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதச்சட்டம் இன்னும் நீக்கப்படவில்லை. சிறைக்கைதிகள் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான போராட்டம் மூன்று ஆண்டுகளை நெருங்குகின்றது. சொந்த மண்ணில் வாழ்வதற்கு காணி விடுவிப்புக்காக மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். தமிழர்களுக்கு இன்னும் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படவில்லை.

தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் வாழ்வுக்காகவும் முதல்முதல் பல்வேறுபட்ட தீர்வுத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறு திட்டங்கள் முன்வைக்கப்பட்ட போதெல்லாம், சமஷ்டி அடிப்படையிலான தீர்வு, அதற்கான முன்னேற்றங்களை தந்தை செல்வா கொண்டுவர முற்பட்டபோதெல்லாம் அவற்றை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. 1949ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி சமஷ்டி கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் தந்தை செல்வநாயகம், "தமிழ்பேசும் சுயாட்சி மாகாண அலகையும் சிங்கள சுயாட்சி மாகாண அலகையும் உள்ளடக்கி இரண்டுக்கும் பொதுவான மத்திய அரசுக்கு வழிசெய்யும் சமஷ்டி யாப்பொன்றை இலங்கைக்கு கொண்டுவரவேண்டும்.

சிறிய தமிழ் பேசும் தேசம் அழிந்த அல்லது பெரிய தேசத்தால் சிதைக்கப்பட்டு போவதை தவிர்ப்பதற்கான ஆகக்குறைந்த ஏற்பாடாக இதுவே அமையமுடியும். சமஷ்டி அரசியலமைப்புத்தான் அடைவதற்கு சிறந்த - தகுந்த ஏற்பாடு. அதனால் எவருக்கும் குறிப்பாக, சிங்களவர்களுக்கு கூட அநீதி இழைக்கப்பட மாட்டாது" என்ற அடிப்படையில் தமது கருத்தை அவர் முதன்முதலில் முன்வைத்திருந்தார்.

இவ்வாறான கருத்து முன்வைக்கப்பட்டிருந்தாலும் கூட சிங்கள பிரதிநிதிகளிடையே அந்த எண்ணங்கள் இல்லாமல் செல்வது மனவருத்தத்துக்குரியது. தமிழ் மக்களுக்கு எதிரான போரை வெற்றிக்கொள்வதற்கு உலக நாடுகள் பாரிய உதவிகளை வழங்கியிருந்தன. அதன்போது இலங்கையும் உலக நாடுகளுக்கு பல்வேறு உத்தரவாதங்களை வழங்கியிருந்தது.

குறிப்பாக, இந்தியாவுக்கு வழங்கப்பட்ட உத்தரவாதம், இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கிருஷ்ணா இலங்கைக்கு வந்தபோதுகூட, தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழ்மக்களுக்கான பிரச்சினைகளுக்கு 13இற்கு அப்பால் சென்று தீர்வுகளை வழங்குவோம் என்று கூறியிருந்தார். ஆனால், இதுவரையில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் முறையாக நடைமுறைப்படுத்தவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானதாகும் என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து இதில் குறுக்கிட்ட நாடாளுமனற உறுப்பினர் நிமால் லன்ஸா, 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இவர்கள் இடமளிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த சிறிதரன் எம்.பி., எவருக்காகவும் நாங்கள் பேசவேண்டிய அவசியம் இல்லை. நானொரு தமிழ் மக்களின் பிரதிநிதியாக இந்தச் சபையில் எனது கருத்தை முன்வைப்பதற்கான தேவை எனக்கிருக்கிறது. தங்களுடைய இருப்புகளை தக்கவைப்பதற்காக எவரும் பேசவேண்டிய தேவையில்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டபோது தமிழர் தரப்பாக அந்த ஒப்பந்தத்தில் இந்தியாவே கையொப்பமிட்டிருந்தது. ஆகவே, தற்போதும் இந்தியா மௌனம் காப்பது மக்களுக்குப் பொருத்தமானதல்ல. இந்தியாவுக்கு இந்தக் கடமையிருக்கிறது. தற்போதுள்ள அரசாங்கத்துக்கு பெரும்பான்மைப் பலம் இருக்கிறது. எதையும் செய்யக்கூடிய 150இற்கும் மேற்பட்ட ஆசனங்கள் இருக்கின்றன - என்றார்.

## 19ஐ அவசரமாக நீக்குவது ஏன்?

### சுயாதீன ஆணைக்குழுக்களும் நீக்கப்படுமா என்று வினவுகிறார் லக்ஷ்மன்



எதிர்த்தரப்பின் முழு ஒத்துழைப்புடனே 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது. அவ்வாறிருக்கையில் ஏன் அவசரமாக இந்த அரசியலமைப்புத் திருத்தம் நீக்கப்படுகிறது என்றும் சுயாதீன ஆணைக் குழுக்கள் நீக்கப்படுமா என்பது தொடர்பிலும் அரசாங்கத் தரப்பு பதிலளிக்கவேண்டும் என்றும் எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொள்கைப் பிரகடனம் மீதான விவாதத்தின் போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு 2015ஆம் ஆண்டு மக்கள் ஆணை கிடைத்தது. அதற்காக சட்ட ஆலோசனைகளுக்கமைய நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்கு செல்லவேண்டியிருந்தது.

ஆயினும், புதிதாக நியமிக்கப்பட்ட அரசாங்கம் என்பதால் மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்கு செல்வதில் பிரச்சினை ஏற்பட்டது. அதனால், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்காமல் அதில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் குறைப்பதற்கு தீர்மானித்தோம். அதற்கமையவே 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

மேலும், நிறைவேற்று ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்களை பாதியாகக் குறைத்து அந்த அதிகாரங்களை பிரதமருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. சகலருக்கும் அது தெரியும்.

அந்த அரசியலமைப்புத் திருத்தத்தை சமர்ப்பித்தபோது சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவை வழங்கியிருந்ததே அதிசயம். ஒவ்வொரு அத்தியாயமும் திருத்தியமைக்கப்பட்டபோது இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரவு தெரிவித்தார்கள்.

உண்மையில் இதுவொரு கேள்விக்குறியான விடயம். 19ஆவது அரசியலமைப்புத் திருத்த வரைபை சமர்ப்பித்தபோது ஐக்கிய தேசிய முன்னணிக்கு 45 ஆசனங்களே இருந்தன. எந்த பயமுமின்றி எதிரத்தரப்பின் ஆதரவைப் பெற்று நிறைவேற்றப்பட்ட இந்த அரசியலமைப்புத் திருத்தத்தை ஏன் அவசரமாக நீக்குகிறீர்கள். இதற்கு அரசாங்கத் தரப்பினர் பதில் வழங்க வேண்டும்.

அதேபோன்று 19ஐ நீக்குவதானால் இயல்பாகவே சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாமல்செய்யப்படும். அவ்வாறாயின், சுயாதீன ஆணைக்குழுக்கள் நீக்கப்படுமா என்பதற்கு சபை முதல்வர் தினேஷ் குணவர்தன பதிலளிப்பார் என எதிர்பார்க்கிறேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடனத்தின்போது சுயாதீன ஆணைக்குழுக்கள் நீக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். அது உண்மையா என்பதற்கு பதில் எனக்கு வேண்டும். இந்த அரசியலமைப்புத் திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டபோது ஒவ்வொரு அத்தியாயங்களும் விவாதிக்கப்பட்டன. அரசாங்கம் இன்று அவற்றை மறந்துவிட்டது. அதேபோல், ஒரு நாடு ஒரு சட்டம் என்று ஜனாதிபதி கூறுகிறார்.

இது எந்தளவுக்கு வெற்றிகரமானதாக இருக்குமென்று தெரியவில்லை. பொதுச் சட்டங்கள் இருக்கின்றன. அதனை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், தனியார் சட்டங்களும் இருக்கின்றன. யாழ்ப்பாணம், மத்திய நாடு, கிழக்கு, தெற்கு பிரதேசங்களில் வெவ்வேறு சட்டங்களையும் முஸ்லிம் மக்களது சட்டங்களையும் கடைப்பிடிக்கின்றனர்.

இந்தச் சட்டங்களை எம்மால் நீக்கமுடியாது. அவ்வாறு நீக்க முயற்சித்தால் பாதகமான நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளன - என்றார்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.


# கல்முனை மாநகர சபை ஊழியருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகக்கூறி ஆர்ப்பாட்டம்





(ஷிஹான் பாருக்)

கல்முனை மாநகர சபையில் ஊழியராக கடமையாற்றியவருக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளதாக தெரிவித்து அவரது குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்து நகரசபை ஊழியர்களால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக் கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது;

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது அரசியல் கட்சி ஒன்றுக்கு ஆதரவு வழங்கியதாகக்கூறி அதே மாநகர சபையில் கடமையாற்றும் மற்றுமொரு ஊழியரால் தாக்குதலுக்குள்ளான நபருக்கு உரிய தரப்பினர் நியாயத்தைப் பெற்றுக்கொடுக்காமல் தாக்குதலுக்குள்ளான நபரை வேலையிலிருந்து நீக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப்போராட்டம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

கடந்த வெள்ளியன்று கல்முனை பஸார் ஜும்மா தொழுகையின் பின்னர் பேரணியாக இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு, கல்முனை மாநகர சபையின் முன்றலுக்கு சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் இது விடயத்தில் நியாயம் வழங்குமாறு கோரி கோஷங்களை எழுப்பினர்.

மேலும், இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு கல்முனை தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுஜீத் பிரியந்தவும் பிரசன்னமாகி இருந்தார். அத்துடன், தாக்குதலுக்குள்ளானவர் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்றுள்ள நிலையில், அவரும் குடும்ப உறுப்பினர்கள் சகிதம் இணைந்து தனக்கு ஏற்பட்ட அநீதிக்கு நியாயம் கோரி இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



**Covid - 19 தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் விரைவில் குணமடைந்து வீடு திரும்பவேண்டி கூட்டுப்பிரார்த்தனை கடந்த வியாழன் மாலை சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வு இலங்கை தமிழ்க் கலைஞர்கள் சங்கம் மற்றும் இலங்கை நெய்னார் சமூகநல காப்பக ஏற்பாட்டில் இலங்கை பாடகர், ஒளிபரப்பாளர் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) இர்பான் முஹம்மத் தலைமையில் இடம்பெற்றது. இதில் இலங்கை நெய்னார் சமூகநல காப்பகத் தலைவர் இம்ரான் நெய்னார், கலைஞர் ஸ்ருதி பிரபா, நிகழ்ச்சி தயாரிப்பாளர் ஆனந்தராஜ், ராஜஸ்வர். ஜெய்கணேஸ், மோகன் மற்றும் இர்ஷாத் மவுலானா ஹஸ்னி முஹம்மத் போன்ற பல முக்கிய பிரபலங்கள் கலந்துகொண்டனர்.**

# தொடர்ச்சியான வெற்றிப்பாதையில் பயணிக்கும் லங்கா சதொச



இலங்கையின் மிகப்பெரிய அரசதுறை சில்லறை வியாபார வலையமைப்பான லங்கா சதொச, 2020 ஜூன் வரையான காலப்பகுதிக்குள் வரலாறு காணாத அதியுயர் வருவாயான 17.62 பில்லியன் ரூபா பெறுமதியை எட்டியுள்ளது. லங்கா சதொச வரலாற்றில் பதிவான அதியுச்ச வருவாய்த்தொகை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. 2019ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் விற்பனை வருவாய் 23 சதவீத்தால் வளர்ச்சியடைந்துள்ளதோடு இது இலங்கையில் அரசதுறை நிறுவனமொன்றினால் அடையப்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அடைவாகும்.

அரசதுறை நிறுவனங்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச, தனது இணையதள அங்காடியான www.lankasathosa.lk எனும் இணையதளத்தை இப்போது தனது வாடிக்கையாளர்களுக்காக அறிமுகம் செய்துள்ளது. வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் இப்புதிய இணையதள அங்காடி அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இலங்கையில் வளர்ந்துவரும் தொழில்நுட்ப ஆர்வமுடைய வாடிக்கையாளர் தலைமுறைக்கு சேவை வழங்கும் நோக்கோடும், வளர்ச்சியடையும் இணைய சேவைகளுக்கான தேவைகளை பூர்த்திசெய்யும் எதிர்பார்ப்போடும் இந்த இணையதள அங்காடி அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் கூட்டிணைப்புடன் குறுகிய காலத்தில் இந்த இணையதள அங்காடி உருவாக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச, நாடளாவிய ரீதியில் 400இற்கும் மேற்பட்ட கிளைகளுடன் வாடிக்கையாளர்களுக்கு மிகக் குறைந்த விலையில் அத்தியாவசிய பொருட்களை வழங்குகிறது. வாடிக்கை யாளர்களுக்கு விரைவாகவும் செயல்திறன் மிக்க வகையிலும் விநியோகம் செய்யக்கூடிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், முதற்கட்டமாக மேல்மாகாணம் மற்றும் கண்டி நகர வாடிக்கை யாளர்களுக்கு இலவசமாக விநியோகம் செய்ய உத்தேசித்துள்ளோம் - என வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் கலாநிதி நுஷாட் பெரேரா தெரிவித்தார்.

இணையதள அங்காடியின் சேவையை மேலும் ஒழுங்கமைக்கும் விதமாகவும், இலங்கையில் வளர்ச்சியடைந்துவரும் இணைய சந்தையில் முன்னோக்கிச் செல்லவும் நவீன வசதிகளுடன் கூடிய களஞ்சியசாலைத் தொகுதி அண்மையில் ஊறுகொடவத்தையில் திறந்துவைக்கப்பட்டது விசேட அம்சமாகும்.

தொடர்ச்சியான வெற்றிப்பாதையில் பயணிக்கும் லங்கா சதொச, அரசதுறை நிறுவனங்களுக்கு மத்தியில் அதிசிறந்த தரம் மற்றும் விழுமியங்களுடன் வினைத்திறனுடன் செயற்பட உறுதிபூண்டுள்ளது.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் களேபரம்: மணிவண்ணன் தரப்பை விரட்டியது கஜேந்திரகுமார் அணி!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்திற்கு சென்ற மணிவண்ணனின் ஆதரவாளர்களை விரட்டிவிட்டு, கட்சி அலுவலகத்தை பூட்டியது கஜேந்திரகுமார் அணி.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்வீட்டு சண்டையால் கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. முன்னணியின் அமைப்பாளர் பொறுப்பிலிருந்து மணிவண்ணனை கஜேந்திரகுமார் அணி நீக்கியது. அதற்கு சில காரணம் சொல்லப்பட்டாலும், உண்மையான காரணங்கள் வேறாக இருந்தன .

இந்நிலையில், தன் மீதான குற்றச் சாட்டுக்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பை மணிவண்ணன் வெள்ளிக்கிழமை யாழிலுள்ள கட்சி அலுவலகத்தில் ஏற்பாடுசெய்தார்.

எனினும், தற்போது அங்கு சென்ற மணிவண்ணனையும், ஆதரவாளர்களையும் கஜேந்திரகுமார் அணி அலுவலகத்தைவிட்டு வெளியே விரட்டியது. அத்துடன், அலுவல கத்தையும் பூட்டு போட்டு பூட்டிவிட்டு அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டனர்.





# மலையக வீட்டுத்திட்டத்தில் மோசடி: நாடாளுமன்றில் ஜீவன் குற்றச்சாட்டு

மலையகத்தில் தனிவீட்டுத் திட்டத்தில் 4,000 வீடுகள் கட்டப்பட்டன என்று கூறப்பட்டபோதிலும், கண்காணிப்புக் குழு மூலம் ஆராய்ந்து பார்த்ததில் 500 வீடுகளே கட்டப்பட்டுள்ளன. இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் – என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் உரையாற்றுகையில்,

“மலையகத்திலுள்ள ஆறு பிரதான வைத்தியசாலைகளிலும் போதுமான வசதிகள் இல்லை. பாடசாலைகளும் முழுமையாக அபிவிருத்திசெய்யப்படாமல் உள்ளன. இவை தொடர்பில் ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், நாம் இன்று தமிழர்கள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லையென கூறிக்கொண்டிருக்கிறோம். இனம், மதம் கண்ணுக்கும் காதுக்குமே தவிர வயிற்றுக்கல்ல என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

மலையகம் என்றாலே தோட்டத் தொழில் மட்டும்தான் என சிலர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர்.



ஆனால், விவசாயம் உட்பட பல தொழில்கள் அங்கு உள்ளன. வைத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் என பலர் உருவாகியுள்ளனர். எனினும், மலையகம் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கு என்ன காரணம்? தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் அவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படவில்லை என்பதுவே காரணமாகும்.

ஆனால், மக்களின் உண்மையான பிரச்சினைகள் எவை என்பதை ஜனாதிபதி கண்டறிந்துள்ளார். சிலோன் டீ என்ற உற்பத்தி சரிவை சந்தித்துள்ளது. அதனை மீண்டும் கட்டியெழுப்பவேண்டும். இதனை ஜனாதிபதி தனது கொள்கை விளக்கவுரையில் குறிப்பிட்டிருக்கின்றமையையிட்டு நான் பெருமையடைகிறேன். சிறுதோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளார். மேலும், இன்று மலையகத்தில் காரணமெதுவுமின்றி பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. அதனை மீள திறக்கவும் அல்லது அந்த தொழிற்சாலைகளில் ஏனைய சுயதொழில் ஏற்பாடுகளை செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று நிறையபேர் வெளிநாடுகளுக்குச் சென்று கஷ்டப்படுகின்றனர். அவர்களுக்கு உள்நாட்டில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படவேண்டும்.

மலையகத்தில் 4,000 வீடுகள் கட்டப்பட்டன என்று கூறப்பட்டது. ஆனால், கண்காணிப்புக் குழுமூலம் ஆராய்ந்தோம். 500 வீடுகளே கட்டப்பட்டுள்ளன. ஏனைய வீடுகள் இன்னும் முழுமை பெறவில்லை. அரசியல் இலாபத்துக்காக திட்டங்கள் வகுக்கப்பட்டனவே தவிர, நாட்டின் பொருளாதாரத்தைக் கவனிக்கவில்லை. அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என பழமொழியொன்று உள்ளது. எனவே, வீட்டுத் திட்டத்தில் ஊழல் செய்தவர்களை கட்டாயம் சட்டத்தின் முன் நிறுத்துவோம்.

எனது தந்தை ஆறுமுகன் தொண்டமான், தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் கொள்கைகளுக்கமைய நாம் அனைவரும் இலங்கையர் என்ற வகையில் ஒற்றுமையாக செயற்படுவோம். அவர்களின் வழியில் எனது பயணம் தொடரும். வாக்களித்த மக்களுக்கு நன்றி” - என்றார்.

# தந்தையை போலவே பொய்யுரைக்கிறார் ஜீவன்: தனிவீட்டுத்திட்ட மோசடி குறித்து திகா பதிலடி!

நாம் 400 வீடுகளைக்கூட கட்டவில்லை என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். டன்சினன் தோட்டத்தில் 350 வீடுகளும், பொகவந்தலாவயில் 350 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டன. இவை இரண்டைக் கூட்டினால் கூட 500ஐ தாண்டிவிடுகின்றது. எனவே, இராஜாங்க அமைச்சருக்கு கண் குறைபாடு அல்லது கணக்கில் ‘வீக்’ போல தெரிகிறது. தனது அப்பாவை போலவே பொய் சொல்கிறார் - என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கூறிய கருத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் பதிலடி கொடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“உண்மையில் இந்தக் கொள்கை பிரகடன உரையிலுள்ள பல விடயங்கள் சாதாரண மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அமைந்துள்ளன. நாட்டில் கைத்தொழில், சுயதொழில், விவசாயத்துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது. அவற்றுக்கு தனித்தனியே இராஜாங்க அமைச்சுகள் உருவாக்கப்பட்டுள்ளமை வரவேற்கவேண்டிய விடயமாகும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கிய நாட்டு மக்களுக்கு ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தின்படி செயற்பட்டால் பொறுப்பான



எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் அதனை வரவேற்போம்.

ஜனாதிபதி கூறியதுபோல சாதாரண மக்களுக்கான வைத்தியசாலை வசதிகள், குடிநீர், மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு அடிப்படை வசதிகள் செயல்வடிவில் முன்னெடுக்கப்படுகிறதா என்பதில் நாம் அவதானத்துடன் இருப்போம்.

காணி பிரச்சினை பற்றி ஜனாதிபதி கூறினார். நான் அமைச்சராக இருந்த காலத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை பெற்றுக்கொடுக்கப்பட்டது. அதனை தங்குதடையின்றி இந்த அரசாங்கம் முன்னெடுக்கும் என எதிர்பார்க்கிறேன்.

சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தும் கட்டுபொல் செய்கை நிறுத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளதை வரவேற்கிறேன். ஆனால், இது செயற்பாட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

சிலோன் டீ என்ற சின்னத்திற்கு உள்ள மதிப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி கூறியது மகிழ்ச்சியளிக்கிறது. அதே போன்று அந்த தேயிலைத்துறையில் பணியாற்றும் எமது தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தேர்தலில் மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கியுள்ளதால் 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆனால், 19ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள ஜனநாயகத்தை பாதுகாக்கும் சரத்துகளை சேர்த்துக்கொண்டு யாப்பு திருத்தம் செய்யப்படவேண்டும்.

சுயாதீன ஆணைக்குழுக்கள், தகவல் அறியும் சட்டம், அரசியல் யாப்பு கவுன்சில் போன்ற ஜனநாயகத்தை உறுதிசெய்யும் ஏற்பாடுகளை நீக்கக்கூடாது. மேலும், தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டால் அது நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையக்கூடாது.

எனவே, நாட்டு மக்கள் எதிர்பார்ப்புடன் வழங்கிய மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை நாட்டு மக்களின் நன்மைக்காக அரசாங்கம் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

எனது அரசியல் வாழ்வில் மூன்றாவது முறையாகவும் நுவரெலியா மாவட்ட மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றுக்கு தெரிவாகி உரையாற்றக் கிடைத்தமைக்கு நுவரெலியா மாவட்ட மக்களுக்கு முதலில் நன்றி கூறிக்கொள்கிறேன்” – என்றார்.




# சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட சுருட்டுகளுடன் 10 பேர் கைது!

(நோட்டன் பிரிட்ஜ்)

சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட சுருட்டுகளை தோட்டப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு விற்பனைசெய்த பத்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 32 ஆயிரத்து 684 சுருட்டுகளையும் மீட்டுள்ளதாக ஹட்டன் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் அனுமதியின்றி சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட 32,684 சுருட்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், ஒரு சுருட்டு பத்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் விற்பனை செய்யப்பட்ட சுருட்டுகளில் லேபல் எதுவும் ஒட்டப்பட்டிருக்கவில்லை எனவும் மேலதிக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.



இந்தக் கைது சம்பவமானது கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது;

ஹட்டன் மதுவரி திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது, குறித்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், ஹட்டன், தலவாக்கலை,கொட்டகலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# டிக்கோயா ஆற்றில் அழுகிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு

(நோட்டன் பிரிட்ஜ்)

காசல்ரி நீர்த்தேக்கத்துடன் இணையும் ஹட்டன் டிக்கோயா ஆற்றில் ஆணின் சடலமொன்று மீட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

டிக்கோயா தேயிலை தொழிற்சாலைக்கு அருகிலுள்ள ஆற்றிலே வெள்ளியன்று குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.



ஆற்றில் குப்பை கொட்டுவதற்கு சென்ற ஒருவரே நீரில் சடலமொன்று கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

35 தொடக்கம் 40 வயதுக்குட்பட்ட குறித்த ஆண் யாரென்பது இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என்பதுடன், சடலம் அழுகிய நிலையில் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட ஆண் நீரில் அடித்துச்சென்று உயிரிழந்தாரா, நீர்த்தேக்கத்தில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டாரா அல்லது எவராவது கொலைசெய்து நீர்த்தேக்கத்தில் வீசி எறிந்தார்களா என்பது தொடர்பாக பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலத்தை ஹட்டன் நீதிமன்ற நீதவான் பார்வையிட்டதன் பின்னர் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக ஹட்டன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# அடிக்கல் நாட்டியும் 8 வருடமாக செப்பனிடப்படாத சாமிமலை ஓல்டன் வீதி

(மஸ்கெலியா)

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட சாமிமலை ஓல்டன் தோட்ட சிங்காரவத்தைக்கு செல்லும் பிரதான வீதி கடந்த 20 வருட காலமாக செப்பனிடப்படாமல் காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

கடந்த 8 ஆண்டு காலப்பகுதியில் அவ்வப்போது ஆட்சியிலிருந்த அமைச்சர்கள் பலமுறை அடிக்கல் நாட்டியும் அதற்கான வேலைகள் எதுவும் இதுவரை முழுமை பெறாமலேயே உள்ளன.

அவ்வாறு அடிக்கல் நாட்டுவதற்கு செலவான தொகையை கொண்டு 200 மீற்றர் தூரம் கொங்கிரீட் பாதை செய்திருக்கலாம். மேலும், ஒவ்வொரு தடவையும் தங்களது புகைப்படங்கள் அடங்கிய பதாகைகள் வைத்ததுடன் வீதி அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகையையும் பதிவிட்டுள்ளனர். அதுமட்டுமன்றி, வீதி ஆரம்பிக்கும் இடத்திலிருந்து 100 மீற்றர் தூரம் வரை செப்பனிட்டமையும் அதன் பின்னர் கைவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, வீதி பாரிய குண்டும்குழியுமாக உள்ளதால் அங்கு வாழும் 300இற்கு மேற்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக புகார் தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்டோர் ஒதுக்கிய நிதியினூடாக அந்த வீதியை செப்பனிட வழிசெய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அரச நிறுவனங்களில் நிதிச் செயற்பாடுகளை முறையாக கடைப்பிடிக்க சப்ரகமுவ மாகாண ஆளுநர் நடவடிக்கை

(இரத்தினபுரி)

சப்ரகமுவ மாகாணத்திலுள்ள அனைத்து அரச நிறுவனங்களிலும் நிதிச் செயற்பாடுகளை முறையாக கடைப்பிடிக்கவேண்டும் - என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண அரச நிறுவனங்களின் கணக்காளர்கள் மற்றும் நிதி விடயத்திற்கு பொறுப்பானவர்களுக்கான செயலமர்வு ஒன்று கடந்த 20ஆம் திகதி இரத்தினபுரி மெனரிபிட்டிய கல்வி அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.





இது குறித்து மாகாண ஆளுநர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அரச நிறுவனங்களில் கணக்காளர்கள் நிதி ஆலோசகர்களாக செயற்படுதல், அத்தோடு நாட்டின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் முழுமையான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்குதல், அரச சொத்துகளை பாதுகாத்தல் என்பவற்றுக்குத் தேவையான ஆலோசனைகளைப்பெற்று கணக்காளர் பிரிவு அதிகாரிகள் செயற்பட வேண்டும்.

சப்ரகமுவ மாகாணத்திலுள்ள தணிக்கை மற்றும் பொது தணிக்கைத்துறைக்கு நாங்கள் எங்களது முழு ஆதரவையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்பட்டுவரும் செழிப்பின் பார்வையில் நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றார்.

இதன்போது சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ரஞ்சனி ஜயகொடி, நிதி விடயத்துக்குப் பொறுப்பான பிரதி பிரதான செயலாளர் பிரியத்தா விஜேசுந்தர உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# பலாங்கொடை கீனகஹெல்லயில் காணப்படும் கல்குவாரியால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு - பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

(பலாங்கொடை)

பலாங்கொடை, நெல்லிவல, கீனகஹெல்ல பிரதேசத்தில் காணப்படும் கல்குவாரியால் அப்பிரதேச சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதாகக் கூறி அப்பிரதேச மக்கள் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த கல்குவாரி தொடர்பாக மக்கள் தெரிவித்த கோரிக்கைக்கமைவாக, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகின்றதா என்பதை ஆய்வுசெய்வதற்காக அரச அதிகாரிகள் வெள்ளிக்கிழமை அங்கு வந்தபோதே, அப்பிரதேச மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆய்வுசெய்வதற்காக புவியியல் ஆய்வு பணியகம், மத்திய சுற்றுச்சூழல் ஆணையம் மற்றும் பலாங்கொடை பிரதேச செயலக அதிகாரிகள், கீனகஹெல்ல பகுதியிலுள்ள கல்குவாரியால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து ஆய்வுசெய்தனர்.

அப்போது அப்பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், அப்பகுதியில் கல்குவாரி நடத்துவதால் ஊற்று நீர் வற்றிவிட்டதாக குறித்த அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

கல்குவாரியை ஆய்வுசெய்வதற்காக வந்த இரத்தினபுரி மாவட்ட புவியியல் பணியகத்தின் அதிகாரியொருவர் குவாரியை ஆய்வு செய்யவேண்டும் என்றால் பத்திரிகையாளர்களை அவ்விடத்திலிருந்து அகற்றவேண்டும் என்று என்று கூறினார்.

ஆய்வு நீதியான முறையில் நடத்தப்பட்டால் ஊடகவியலாளர்கள் ஏன் அகற்றப்பட வேண்டும் என்று கிராம மக்கள் அப்போது அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பினர். இதனால் அவ்விடத்தில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டமையால், பிரதேச செயலகத்னூடாக கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படும் என்றும், கல்குவாரி தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்படாது என்றும் தெரிவித்த அதிகாரிகள் அவ்விடத்தைவிட்டு அகன்றனர்.





பிரதேச மக்கள் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், இந்த கல்குவாரி நடவடிக்கைகள் காரணமாக அப்பிரதேசத்தில் சுமார் 300 குடும்பங்களுக்கு குடிநீர் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல் வயல்கள் வறண்டு கிடக்கின்றன என்றும் கூறியதுடன், இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி தீர்வைப் பெற்றுத்தருமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

# பொது இடத்தில் கட்டிடம் அமைப்பதால் மஸ்கெலிய வர்த்தகர்கள் பாதிப்பு

(மஸ்கெலியா)

மஸ்கெலியா நகரில் கடைகளுக்கிடையே தீ பரவாமல் இருப்பதற்காக ஒதுக்கப்பட்ட 22 இடங்களில் ஒரு சிலதே இன்னும் பாவனையில் உள்ளன. ஏனையவை ஒருசில வர்த்தகர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன என வர்த்தகர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

குறித்த தீ பரவாமல் இருப்பதற்கான இடைவெளியை அதற்கான சகல வசதிகளையும் முன்னைய பிரதேச சபை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எஞ்சியுள்ளவற்றை மக்கள் பாவனைக்காக திறந்துவிடவேண்டிய பொறுப்பும் தற்போதைய சபைக்கு உள்ளது. இருந்தபோதும் தற்போது பிரதான வீதியில் அமைந்துள்ள தீ பரவாத இடைவெளியிலுள்ள பாரிய கற்கள் உடைக்கப்பட்டு அவ்விடத்தில் நிரந்தர கட்டிடம் அமைக்கும் பணி இடம்பெற்று வருவதாக வர்த்தகர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மேலும், அவ்வாறான கற்கள் உடைக்கும்போது நில அதிர்வு ஏற்படுவதாகவும் எதிர்காலத்தில் அவ்வாறான அதிர்வால் கட்டிடங்கள் சரிந்து விழ வாய்ப்புள்ளதாகவும் கூறுகின்றனர். மேலும், இவ்வாறான இடத்தை, நிரந்தர கட்டிடம் அமைக்க எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது ஒரு பயர் கெப் என தெரிந்திருக்கவில்லையா என கேள்வி எழுப்புவதோடு, இவ்வாறான கட்டிட அமைப்பை உடன் முன்வந்து தடைசெய்ய வேண்டும் எனவும் வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிழக்கின் ஆட்சியை தமிழர் ஆதரவுடன் கைப்பற்ற அரசாங்கம் திட்டமிடுகின்றது

## அதற்காகவே வியாழேந்திரனுக்கு பதவி என்கிறார் ஹரீஸ் எம்.பி.

(சாய்ந்தமருது)

"எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் ஆதரவுடன் கிழக்கின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுவருகிறது. இந்நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வகிபாகம் என்பது ஆட்சியை நிர்ணயிக்குமளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்" - என அக்கட்சியின் பிரதித் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களின் வெற்றிக்காக உழைத்த கட்சி செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக ஒழுங்குசெய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பு மருதமுனை சமூக வள நிலையத்தில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்;

"பொதுத் தேர்தல் முடிந்த கையோடு கிழக்கின் ஆட்சியை பொதுஜன பெரமுன கைப்பற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டை பசில் ராஜபக்ஷ வெளியிட்டிருக்கிறார். கிழக்கு மாகாணத்தில் பொதுஜன பெரமுன கூட்டணியின் பங்காளிகளாக இருக்கின்ற பிள்ளையான், கருணா, அதாஉல்லாஹ் என்று அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்த வாக்கு வங்கியானது ஐக்கிய மக்கள் சக்தி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளின் ஒட்டுமொத்த வாக்கு வங்கியைவிட குறைவாகவே இருக்கிறது.

இந்நிலையில், நடைபெறப்போகும் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் எமது முஸ்லிம் காங்கிரஸின் வகிபாகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இத்தேர்தலில் நாங்கள் ஆட்சியை கைப்பற்றுவதற்கான யுக்தியை மிகவும் கவனமாக கையாளவேண்டியுள்ளது. இது விடயத்தில் நாங்கள் சமூக ரீதியாக சிந்திக்கவேண்டுமே தவிர, தனிநபர்களின் நலன்களை முன்னிறுத்துவதற்கு அனுமதிக்க முடியாது.





எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கிழக்கை கைப்பற்றவேண்டும் என்பதற்காக இந்த மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களை திருப்திப்படுத்துவதற்கான முயற்சிகளில் இந்த அரசாங்கம் ஈடுபட்டுவருவதை அவதானிக்க முடிகிறது. வியாழேந்திரனுக்கு இராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ள அதேவேளை அதாஉல்லாஹ்வுக்கு எந்த அமைச்சுப் பதவியும் வழங்கப்படாமல் அவர் இந்த அரசாங்கத்தினால் ஓரங்கட்டப்பட்டிருக்கிறார். இது தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தி, அவர்களது ஆதரவுடன் கிழக்கின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான அரசின் முக்கிய யுக்தியாகும்.

இதற்கு மத்தியில் எமது கட்சியும் முஸ்லிம்களும் எவ்வாறான அரசியல் தந்திரோபாயங்களை வகுத்துச் செயற்படப்போகிறோம் என்பதுதான் இன்று எமக்குள்ள பிரச்சினையாகும். நாங்கள் சமகால அரசியல் யதார்த்தங்களை புரிந்து செயற்படவேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறோம்.

இனிவரும் காலங்களில் இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு எனது அரசியல் செயற்பாடுகள் மிகவும் கடுமையானதாக இருக்கும் என்பதை சொல்லிவைக்க விரும்புகின்றேன். நான் இவ்வாறு சமூக ரீதியாக பேசுகின்றபோது கட்சியைவிட்டுப் போகப்போகிறேன் என்று எவரும் நினைத்துவிடாதீர்கள். இவ்வாறான கதைகள் வருகின்றபோது எமது கட்சிப் போராளிகளும் பொதுமக்களும் மிகவும் தெளிவாக இருக்கவேண்டும் - எனவும் ஹரீஸ் எம்.பி. வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் மருதம் விளையாட்டுக் கழக பிரதிநிதிகளால் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

## சட்டவிரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்டோர் கைது!



(வாழைச்சேனை)

மட்டக்களப்பு- கிரான் பெண்டுகள் சேனைப் பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

இதன்போது 11 பேர் கைதுசெய்யப்பட்டதுடன், மண் அகழ்வுக்கு பயன்படுத்திய உழவு இயந்திரங்களையும் கைப்பற்றி வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வுப் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் இதனைத் தடுக்கும் நடவடிக்கையில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.




## மட்டக்களப்பில் நவீனப்படுத்திய இறைச்சிக் கடைத் தொகுதி மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட கல்லடி பொதுச் சந்தையின் நவீனமயப்படுத்தப்பட்ட இறைச்சிக் கடைத் தொகுதி மக்களின் பாவனைக்காக கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபையின் குறுங்கால வேலைத்திட்டத்தினூடாக குறித்தொதுக்கப்பட்ட 1.1 மில்லியன் ரூபா நிதியில் விஸ்தரிக்கப்பட்ட மேற்படி இறைச்சிக் கடைத் தொகுதியை மக்களின் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வானது மாநகர ஆணையாளர் கா.சித்திரவேல் தலைமையில் இடம்பெற்றது.

சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டலின்கீழ் கழிவகற்றல் வசதிகளுடன் நவீனமுறையில் வடிவமைக்கப்பட்ட இந்த ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சிக் கடைகளை உள்ளடக்கிய கட்டிடத்தை மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பொதுச் சந்தையின் பாவனையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## கல்முனையில் பொது இடங்களில் சுற்றித்திரியும் மனநோயாளர்களினால் பொதுமக்கள் அச்சம்

(பாண்டிருப்பு)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பொது இடங்களில் சுற்றித்திரியும் மனநோயாளர்களால் வீதியில் பயணம்செய்யும் மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் அசௌகரியங்களுக்கு உள்ளாகிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சமீபகாலமாக கல்முனை பிரதேசத்தில் வீதிகளில் கண்டபடி நடமாடும் மனநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கல்முனை பஸ் தரிப்பு நிலையம், பொதுச் சந்தை, நூலகம், ஆலயங்கள், பள்ளிவாசல்கள், பூங்காக்கள், கடற்கரைப் பிரதேசம் மற்றும் பொதுமக்கள் பொழுதுபோக்கிற்காக ஒன்றுகூடும் இடங்களில் மனநோயாளர்களின் தொல்லையும் அதிகரித்துள்ளது.

இதனால் சிறுவர்கள், மாணவர்கள் உட்பட அனைவரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துவருகின்றனர். வீதியில் செல்லும் மாணவிகளிடமும் தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் பிள்ளைகளிடமும் மனநோயாளர்கள் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர். இதனால் மாணவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

மனநோயாளிகளைப் பராமரிப்பவர்கள் முறையாகப் பராமரிக்காது அவர்களை வீதிகளில் உலாவவிட்டுள்ளதனாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கல்முனை பிரதேசத்தில் சுற்றித்திரியும் மனநோயாளிகளைப் பிடித்து உரிய மனநல சிகிச்சைப் பிரிவுகளில் ஒப்படைத்து சிகிச்சை வழங்க மனிதாபிமானம் மிக்கவர்களும் மாநகர சபையினரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42, தொலைபேசி : 0115 88 61 87
விளம்பரம் : 077 693 0739
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

# விக்கியின் பாய்ச்சல்!

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் புதிய நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் நாடாளுமன்ற சபையில் சபாநாயகருக்கு வாழ்த்தை தெரிவித்து ஆற்றிய சிறு உரை அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் கன்னியமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றபோது சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவுசெய்யப்பட்டார். அவரை வாழ்த்தி கட்சித் தலைவர்கள் பலரும் உரையாற்றினார்கள். அங்கு உரையாற்றியவர்களில் விக்கினேஸ்வரனின் உரை பின்வருமாறு அமைந்தது.

*வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தேசம் என்ற அடிப்படையில் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். அவர்களின் உள்ளார்ந்த உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு வரலாறு பற்றிய தவறான கண்ணோட்டங்கள் களையப்பட்டால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் இந்த நாட்டில் உதயமாகும்.*

*இன்றைய அரசாங்கம் மிகவும் பலமான நிலையில் இருக்கிறது. மறைந்த ஜே.ஆர்.ஜெயவர்தனவின் கீழ் யானைப் பலத்துடன் 1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தை ஏற்படுத்தி இன்று ஒரே ஒரு உறுப்பினர் என்ற அளவுக்கு அதன் பலம் சுருங்கிவிட்டுள்ளது. அதே பிழையை தற்போதைய பொதுஜன பெரமுன அரசும் விட்டு அதே பாதையை தெரிவுசெய்யாது என்று நம்புகின்றோம்.*

*எமக்கு இப்பொழுது மிகவும் பலமான ஒரு அரசாங்கம் அமைந்துள்ளது. 1977ஆம் ஆண்டு இதேமாதிரியான ஒரு அரசாங்கம் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் கீழ் இருந்தது. அந்த ஆட்சியின்போதே 1983ஆம் ஆண்டு கலவரம் இடம்பெற்றது. அந்த காலத்து யானையாக இருந்து இன்று தனி ஒரு உறுப்பினராக குறுகிப்போயுள்ள பாதையை இந்த அரசாங்கமும் நிச்சயமாக எதிர்காலத்தில் தொடரக்கூடும். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்யமாட்டார்கள் என்று நம்புகிறேன். கடந்த காலத்தில் நாம் விட்ட பிழைகளிலிருந்து பாடம் படித்து எல்லா சமூகங்களும் ஒருவருக்கு ஒருவர் மதிப்புடனும் சமனாகவும் உணருகின்ற வகையிலும் இலங்கை தாய்நாட்டின் பிள்ளைகள் நாம் என்ற இறைமையுடனும் பெருமையுடனும் நடைபோடும் வகையிலுமான சமாதானமும் செழிப்பும் மிக்க ஒரு காலத்தை ஏற்படுத்துவார்கள் என்றும் நம்புகிறேன்.*

*சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உள்ளார்ந்த உரிமைகளை அங்கீகரிப்பதுடன் கடந்த காலம் பற்றிய தவறான வரலாற்று கண்ணோட்டங்களை களைந்தால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் உதயமாக முடியும்.*

இவ்வாறு குறிப்பிட்ட விக்கினேஸ்வரனின் உரை இலங்கையின் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் அதனால் தமிழர்கள் அனுபவித்த இன்னல்களை மட்டும் கூறவில்லை. அதற்கப்பால் தமிழர்களின் உரிமைகளை கோடிட்டு காட்டியிருக்கிறார். விக்கியின் உரைக்கு விமர்சனங்கள் எழுந்து அவரின் உரையின் முக்கிய பகுதிகள் ஹன்ஸார்ட்டிலிருந்து நீக்கப்படவேண்டுமென்ற குரல்களும் எழுந்துள்ளன.

குறிப்பாக தமிழர்களுக்குத் தீர்வு தருவதாக அடித்துக்கூறிய சஜித் தரப்பின் எம்.பி. ஒருவரே இதற்கு எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளார்.

ஆனால், விக்கினேஸ்வரன் கூறியதில் என்ன தவறு? தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் இல்லையா? தமிழர்களின் உரிமைகளை ஜனநாயக மக்கள் மேடையான நாடாளுமன்றத்தில் கூறாமல் எங்கே கூறுவது? தமிழர்களின் உரிமைகளை கூறுவதற்கே முடியாவிடின் அவர்கள் என்ன செய்வது?

அரசியல் விமர்சனங்கள் இருந்தாலும் விக்கினேஸ்வரன் எம்.பி.யின் நாடாளுமன்ற பாய்ச்சல் உரிமைகோரும் தமிழர் மனதில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. தமிழர்கள் ஆயுதத்தை காட்டியோ அல்லது அச்சுறுத்தல் விடுத்தோ தமது உரிமைக்குரலை எழுப்பவில்லை. சாத்வீக முறைமையில் உரிமைகளை கேட்பதும் தவறென்றால் சுட்டிக்காட்டுவதும் பிழையென்றால் அவர்கள் என்னதான் செய்வார்கள்? விக்கியின் உரையின் சாராம்சத்தை ஏற்க மறுக்கும் இவர்கள்தானா தமிழ் பேசும் மக்களுக்கு தீர்வை வழங்கப்போகிறார்கள்? இவற்றை நோக்குகையில் விக்கியின் நாடாளுமன்றப் பாய்ச்சல் சரிதான் என்றே சொல்லத் தோன்றுகிறது.

**"தமிழன்" பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**

# பின் அணியாகிறதா முன்னணி?

கடந்த வாரம் முழுவதும் வடக்கின் அரசியல் சுறையாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியே மையம் கொண்டிருந்தது. 2010ஆம் ஆண்டு வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக செயற்பட்டுவந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கூட்டமைப்பு தன் கொள்கையிலிருந்து விலகிவிட்டது எனத் தெரிவித்து அதிலிருந்து பிரிந்துசென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற கட்சிகளின் கூட்டணியை உருவாக்கினர். அக்கூட்டணியின் தேர்தல்கால சின்னமாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் தெரிவானது. அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், பொன்னம்பலம் குடும்பத்தாருடையது என்பது நாடறிந்த செய்தி. முன்னணி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இடம்பெற்ற மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு இரண்டில் படுதோல்வியடைந்தனர். இறுதியாக இடம்பெற்ற தேர்தலில் தேசியப் பட்டியல் ஆசனத்தோடு சேர்ந்து இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை முன்னணி பெற்றுக்கொண்டிருக்கிறது.

முன்னணி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றான – தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசியல் அணியாகத் தம்மையே பிரகடனம் செய்துவருகின்றது. ”இரு தேசங்கள் ஒரு நாடு” என்ற கொள்கையை முன்வைத்து அரசியல் பேசும் முன்னணி, நாடாளுமன்றத் தேர்தல்களில் மட்டுமே போட்டியிடுவோம், அது மட்டுமே தம் கொள்கை எனவும், நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தின் ஊடாக சர்வதேச சமூகத்துடன் தமிழர் சார்பில் பேசும் அதிகாரத்தைப் பெறமுடியும் எனவும் பரப்புரை செய்துவந்தது. தொடர்ச்சியாக இரண்டு தேர்தல்களில் தோல்வியடைந்த பின்னர், இனி எந்தத் தேர்தலையும் தவறவிடக்கூடாது எனத் தெரிவித்து, உள்ளூராட்சி தேர்தலிலிருந்து தன் அரசியல் பயணத்தைத் தொடங்கியது. அதன்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பிட்டளவு அதிகாரத்தை உள்ளூராட்சி சபைகளில் நிலைநிறுத்தியும் கொண்டது. ஆனால், இங்குதான் முன்னணியின் முதலாவது கொள்கை சறுக்கல் ஏற்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் மட்டுமே தமிழர்களுக்கு தேவையானது, மற்றையது அனைத்தும் புறக்கணிக்க வேண்டியது எனத் தெரிவித்துவந்த முன்னணி கமுக்கமாகக் களமிறங்கியமை கடுமையான விமர்சனத்திற்குள்ளாகியது. அதேவேளை, இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், ஈ.பி.டி.பியினதும் ஏகபோக கட்டுப்பாட்டில் இருந்த பிரதேச சபைகளுக்குள் முன்னணியின் ஆட்களும் களமிறங்கினர். பலவீனமான சபைகள் உருவாகின. இன ஒற்றுமையை தன் கொள்கையை வரிந்துகொண்ட முன்னணியினாலேயே பல பிரதேச சபைகள் பிளவுண்டன. இங்கேதான் முன்னணிக்குள்ளும் குழப்பங்கள் ஏற்பட்டன. பிரதேச சபையின் அதிகாரத்தில் குறிப்பிட்டளவு அதிகாரத்தைப் பெற முடிந்தவுடன், முன்னணி கட்டுக்கடங்காத ஆதரவாளர் தளத்தைப் பெற்றது. இதுவரை காலமும் "நோட்டீஸ்" ஒட்டக்கூட ஆள் அற்று இருந்த கட்சிக்கு இவ்வாறு திடீர் ஆதரவுத்தளப் பெருக்கம் ஆரவாரத்தை ஏற்படுத்தியது. ஒவ்வொரு உறுப்பினரும் தம் ஆதரவுத்தளத்தை மேலும் மேலும் அதிகரிக்க "இறங்கி வேலை செய்தனர்". இவ்வாறு இறங்கி வேலை செய்தலின்போது கட்சியின் கொள்கை, கோட்பாடுகள், செயற்பாடுகள் எல்லாம் காற்றில் பறந்தன.

ஆதரவாளர் தொகை, புலமை அடிப்படையில் இரண்டாம் நிலைத் தலைவர்கள் முன்னணிக்குள்ளே உருவாகினார்கள். முன்னணியின் முதல்நிலைத் தலைவர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், செல்வராஜா கஜேந்திரனும் அமைதியாக இருக்க இரண்டாம் நிலைத்தலைவர்கள் தம் ஆதரவுத்தளத்தைப் பெருக்கிக்கொள்ள வெறித்தனமாக உழைத்தனர். ஒரு கட்டத்தில் யாழ். மாநாகர சபையை ஈ.பி.டி.பியுடன் இணைந்து கைப்பற்றக்கூட இந்த இரண்டாம் நிலைத் தலைவர்கள் திட்டமிட்டனர். இங்கிருந்தே உட்கட்சிப் பூசல்கள் ஆரம்பமாகின. முதல்நிலைத் தலைமைகள் எந்தப் பக்கமும் சாயாது அமைதி காக்க, இரண்டாம் நிலைத் தலைமைகளான மணிவண்ணன், சுகாஷ், காண்டீபன் ஆகியோர் தம் ஆதரவாளர்களை வைத்து கருத்துச் சண்டையை ஆரம்பித்தனர்.

அவரின் ஆளை இவரின் ஆட்கள் துரோகி என்பதும், இவரின் ஆட்களை அவர் றோவின் ஆட்கள் என்பதுமாக வசைவுகள் தொடங்கின. பிரதேச சபை வெற்றியுடன் இந்த வசைவுகள் முனகல்களாக இருந்தபோதிலும், கடந்த நாடாளுமன்றத் தேர்தல்களின்போது அவை வெளிப்படையாகவே முன்வைக்கப்பட்டன. வேட்பாளர்கள் ஒன்றாக இணைந்து பரப்புரையில் ஈடுபட்டபோதிலும், ஆதரவாளர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு ”அவருக்குப் போடாதையுங்கோ. அவர் துரோகி, அவர் இந்தியாவின் ஆள்” என சாமம் சாமமாகப் பரப்புரை செய்தனர். பகலில் கூடிக்குழாவினர். பகலில் கூட்டாக இணைந்து துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். இரவில் தனித்தனியாக தம் படத்தை மட்டும் பொறித்துத் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். இவை அனைத்தும் முன்னணியின் தலைமைக்குத் தெரிந்திருந்தபோதிலும் "கப்ஷிப்". இதற்குள் அதிகளவு இளைஞர்களின் செல்வாக்கைப் பெற்றிருந்த சட்டத்தரணி மணிவண்ணன், யாழ்ப்பாணத்தில் தனக்கு 70 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் கிடைக்கும் எனவும், அவ்வாறு கிடைக்காவிட்டாலும் தனக்கே தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தி வந்தார். ஆதரவாளர்களுக்கும் கூறிவந்தார்.

தேர்தல் முடிவுகள் அதற்கு சாதகமாக அமையாமல்போக, முன்னணியின் நிகழ்வுகளைத் தவிர்த்தார். முன்னணியின் வெற்றிக்கான நன்றி தெரிவிப்பு நிகழ்வு இணுவிலில் ஏற்பாடாகியிருந்தபோது, இனந்தெரியாத நபர்கள் அதற்குள் நுழைந்து மக்களை மிரட்டித் துரத்திய சம்பவம் கூட இடம்பெற்றது. இதுபோன்ற சம்பவங்கள் தமிழ்த் தேசியத்தின் பெயரால் கடந்த காலங்களில் ஒருபோதும் இடம்பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

சமநேரத்தில் சமூக வலைத்தளங்களில் முன்னணியின் ஆதரவாளர்கள் தங்களுக்குள்ளேயே துரோகிப் பட்டங்களை வழங்கிக்கொண்டார்கள். இதுவரை முன்னணியை விமர்சிப்பவர்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த துரோகிப்பட்டத்தை முதன்முதலாகத் தன் தலையிலும் அணிந்துகொண்டது முன்னணி. இந்தச் சண்டைகளைப் பார்த்துக்கொண்டிருந்த புலம்பெயர் தமிழர்களான முன்னணியின் ஆதரவாளர்கள், கடந்த காலத்தில் முன்னணிக்கு வழங்கிய நிதி தொடர்பில் கணக்கறிக்கைகளைக் கேட்கத் தொடங்கினர். யார் யாருக்கு எவ்வளவு நிதி வழங்கப்பட்டது என்ற விபரங்களைப் பொதுவெளியில் பகிரங்கப்படுத்தினர். தேசம், தேசியம் என்ற பெயரில் இடம்பெற்ற வியாபாரம் முதன்முதலாக அம்பலப்படவே கஜேந்திரர்கள் முதலுக்கே மோசம்போன நிலைமைய உணர்ந்து அறிக்கை வெளியிட்டனர். இவ்வளவு குழப்பங்களுக்கும் காரணமான மணிவண்ணனை அவரின் பொறுப்புகளிலிருந்து நீக்குவதாக அறிவித்தனர். அதன் பின்னர் மணிவண்ணன் தன் ஆதரவாளர்களுடன் தனி வழி செல்லத் தொடங்கியிருக்கிறார்.

நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்று இரண்டு வாரங்களுக்குள் இவ்வளவு கலவரங்களுக்குள்ளான முன்னணியோ, அதன் தலைமைகளோ, தம் கொள்கையைத் தெளிவாக மக்கள் முன் வைக்கத் தயாரில்லை. தம் இருப்பிற்கு ஆபத்து ஏற்படுத்துவர்களை கட்சியின் பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டுப் பயணத்தைத் தொடரவே முயற்சிக்கின்றனர். முன்னணிதான் மாற்று அணி என நம்பி வந்த மக்களைத் தெருவில் விட்டு, நாடாளுமன்றத்திற்கு கிளம்பிவிட்டனர் கஜேந்திரர்கள்.

இதனால்தான் பின் அணி ஆகிறது முன்னணி.

**- ஜெரா -**

i ig l h l



# அபிவிருத்தி தேடும் இலங்கை

## – எதை நோக்கிய பயணம்?



ஒரு மனிதனின் ஆளுமை என்பது அவனுடைய அறிவிலும் திறமையிலும் மாத்திரம் தங்கியிருக்கும் விடயம் அல்ல. அந்த அறிவையும் திறமையையும் கொண்டு அவன் இந்தச் சமூகத்தில் எவ்வாறு தன்னை வெளிக்காட்டுகின்றான் என்பதில் தான் தங்கியிருக்கின்றது. அதேபோன்றுதான் ஒரு நாட்டின் உயிர்ப்பு என்பது அதனுடைய அபிவிருத்தியிலும், அம் மக்களின் வாழ்க்கை தர முன்னேற்றத்திலும் தங்கியிருக்கினறது.

மக்கள் ஒரு நாட்டின் ஆட்சியிலும், அபிவிருத்தியிலும் தன்னுடையதும், தனது பிள்ளைகளுடையதுமான முன்னேற்றம் நிம்மதி அனைத்தும் தங்கியிருக்கின்றது என்ற எதிர்பார்ப்பில் தான் வேட்பாளர்களின் பிரசாரத்திற்கும் வாக்குறுதிக்கும் தங்கள் வாக்குகளை அர்ப்பணித்துள்ளனர். நாடாளுமன்றம் மற்றும் புதிய அமைச்சரவை என்பன எவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்ள காத்திருக்கின்றன என்ற எதிர்பார்ப்பும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் எத்தகைய திட்டங்கள் அமுல்படுத்தப்பட இருக்கின்றன என்ற ஆவலும் வெளியில் ஒவ்வொரு குடிமகனிடமும் பொதிந்து கிடக்கின்றது.

இப்போது முழுமையான அதிகாரத்துடன், நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறை ஆகிய இரண்டிலும் தமது அதிகாரத்தை பெற்று ஆட்சியமைத்திருக்கும் பொதுஜன பெரமுன அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எத்தகைய விடயங்களை நடைமுறைப்படுத்த போகின்றன என்ற கேள்வி சர்வதேச அளவில் காணப்படுகின்றது. ஆட்சிக்கொள்கை எத்தகையதாக இருக்கப்போகின்றது, சர்வதேசத்துடன் எத்தகைய உறவை கொண்டிருக்க போகின்றோம் என்பவற்றை போல எத்தகைய அபிவிருத்திக் கொள்கையை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நாம் அனுபவிக்கப் போகின்றோம் என்பது கூட முக்கியமானதாகவே அமைகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது முன்னெடுத்த அபிவிருத்தித் திட்டங்களுக்கும் கடந்த நல்லாட்சிக் காலத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த அபிவிருத்திகளுக்கும் இடையில் காணப்பட்ட குறைபாடுகள் என்ன என்பதை அலசுவதன் மூலம், இம்முறை ஆட்சியமைத்துள்ள பொதுஜன பெரமுன எத்தகைய அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை கண்டறியக்கூடியதாகவிருக்கும்.

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்தில் இருந்த காலத்தில் இடம்பெற்ற அபிவிருத்திகள் அனைத்துமே பாரிய நிதி முதலீட்டில் முன்னெடுக்கப்பட்டவை. கடன்களாகவும், நன்கொடைகளாகவும், வளங்களை பங்கிட்டு ஒப்பந்தங்களாகவும் சர்வதேசத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளின் பொதுத் தன்மை என்னவென்றால் அனைத்தும் கண்கூடாக காணக்கூடிய அபிவிருத்திகளாக அமைந்தன. வீதி நிர்மாணம், அதிவேக பாதைகள், வர்த்தக மையங்கள், விடுதிகள் அமைத்தல், துறைமுக நகரம், துறைமுகம், விமானநிலையம், மேம்பாலங்கள் என அமைந்த அனைத்திலும் உடனடியாக கண்களுக்கு புலப்படக்கூடிய அபிவிருத்திகளும், சௌகரியங்களும் தென்பட்டன. இதனால் பாமர மக்களுக்கு அந்த அபிவிருத்திகள் கண்கூடான சான்றுகளாக அமைந்தன. இதேவேளை, கடன்கள், சர்வதேசத்திடம் இலங்கை மண்டியிட்டிருந்த விதம் என்பவற்றை ஒப்பிட்டு நோக்குமிடத்து தூரநோக்கிலான நிலையான அபிவிருத்திகளின் தன்மை குறைவாகவே காணப்பட்டது.

அதேவேளை, கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற அபிவிருத்திகள் என்றால் அவை கட்டிட நிர்மாணங்கள் சார்ந்ததாக இல்லாது மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நிலையான அபிவிருத்திகள் சார்ந்த திட்டங்களாக அமைந்திருந்தன. நிலையான அபிவிருத்தியை மையமாகக்கொண்டு தூரநோக்கின் அடிப்படையில் மேற்கொண்ட திட்டங்களின் காரணமாக மக்களுக்கு கண்கூடான அபிவிருத்திகள் என கேட்டால் இவைதான் என சுட்டிக்காட்டும் வகையில் எவையும் அமைந்திருக்கவில்லை. எனவே, மக்களுக்கு ஒரு அரசாங்கத்திடம் அவர்கள் எதிர்பார்த்த எந்தச் செயற்பாடுகளும் கிடைக்கவில்லை என்ற விரக்தி ஏற்பட்டதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை அல்லவா? ஆனால், அதன் மறுபக்கம் என நோக்குமிடத்து சர்வதேசத்திடம் இலங்கையை கூறுபோட்டார்கள் என்றோ, பாரிய தொகையை முதலீடாக இட்டு செயற்படாத ஒரு அபிவிருத்தியை மக்களிடம் காட்டினார்கள் என்றோ குற்றச்சாட்டுக்கள் இல்லை. மேலும், பாரிய கடன் சுமை என்ற அடிப்படையிலும் எந்த நாட்டிடமும் இலங்கை கூறுபோடப்படவில்லை. இந்த நன்மைகள் கண்ணெதிரே தோன்றாவிட்டாலும், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மோசமடையவில்லை என்பதுதான் யதார்த்தம்.

எவ்வாறானபோதும், இரண்டு ஆட்சிகளிலும் இடம்பெற்ற தவறுகள் என்று ஒரே வீச்சில் பார்த்துவிட்டால், தூரநோக்கிலான நிலையான மென்போக்கான அபிவிருத்திகளை 2010 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் காணமுடியவில்லை. கடன்களாலும், ஒப்பந்தங்களாலும் நிரப்பப்பட்ட அபிவிருத்திகளும் கட்டுமானங்களுமாகத்தான் அனைத்தும் காணப்பட்டன. அதேபோன்று 2015இன் பின், பாரிய முதலீட்டுத் தொகையிலான அபிவிருத்திகள் இடம்பெறவில்லை. ஒவ்வொரு ஆட்சியிலும் ஒன்றை செய்கின்றார்கள், மற்றொன்றை விட்டுவிடுகின்றார்கள் என்பதாகத்தான் அமைந்திருந்தன.

அந்த வழக்கம் இல்லாது, ஏககாலத்தில் நிலையான அபிவிருத்திகளுக்கான திட்டங்களும் வகுக்கப்படும் அதேவேளை, உடனடி பயன் தரக்கூடிய திட்டங்களும் வகுக்கப்பட வேண்டும். அப்போதுதான் தொழில் வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம், சிறந்த நிதிப்பரம்பல் இவை யாவும் தோற்றுவிக்கப்பட்டு, நிலையான பொருளாதாரத்திற்கும், வாழ்க்கைத் தர முன்னேற்றத்திற்கும் வாய்ப்புகள் திறக்கப்படும். அவ்வாறு வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்போதுதான் அரசாங்கம் மேற்கொள்ளும் தூரநோக்கிலான திட்டங்களும் பயன்தரும். இல்லாதவிடத்து, தூரநோக்கில் எதிர்பார்த்த திட்டங்கள் வெற்றி அளிக்கும் காலப்பகுதியில் பாரிய இடைவெளி ஒன்று மக்களுக்கும், அத்தகைய திட்டங்களுக்கும் இடையில் காணப்படும்.

எளிமையாக கூறுவதானால், ஒரு சராசரி ஆணின் ஒரு நாள் வருமானம் என்பது ஆயிரம் ரூபவாகக் கூட இல்லாதபோது அதற்கான வழிவகைகளை ஏற்படுத்தாது இருபது ஆண்டுகளின் பின்னர் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட பணப்பரிவர்த்தனையை தோற்றுவித்து இலஞ்ச ஊழல் அற்ற நாட்டை கட்டியமைக்க திட்டமிட்டால் அந்த 20 ஆண்டுகளில் ஆயிரம் ரூபா கூட சம்பளம் பெறமுடியாத அந்த ஆணின் பிள்ளைகளின் கல்வி, போஷாக்கு சுகாதார மட்டங்கள் எத்தனை மோசமானதாக இருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். அப்படி ஒரு குழந்தை வளர்ந்து சரியான கல்வி மற்றும் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியாது நிற்கும்போது நாம் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை ஆரம்பித்திருப்போம்.

இங்கு அது தொடர்பான தேவையையும், புரிந்துணர்வையும் அந்த இளைஞன் பெற்றிருப்பான் என்று எதிர்பார்த்தாலோ, அரசாங்கத்தை ஆட்சியாளர்களை விமர்சிக்காது அதை பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொள்வான் என எண்ணினாலோ நாம்தான் முட்டாள்கள் என பொருள். மக்களின் மனநிலை என்பது தனது வாழ்க்கைப் போராட்டத்தைப் பொறுத்தது. ஆகவே, உடனடி பயன், நீண்டகால பயன் இப்படி இருவிதமான அபிவிருத்திகளும் ஒருங்கே மேற்கொள்ளப்படல் அவசியம்.

அதேவேளை, ஒரு நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கும்போது தொழில் வாய்ப்புகள் சமமாக பகிரப்படும் நிலையையும் கருத்திற்கொள்வது அவசியமாகின்றது. அவ்வாறு இல்லாது குறித்த சில பகுதிகளுக்கு மாத்திரம் பாரிய திட்டங்களுக்கான இடங்கள் ஒதுக்கப்படும் போது மக்கள் தொழில்வாய்ப்பிற்காக அந்த இடங்களுக்கு நகர வேண்டிய தேவை ஏற்படுவதன் காரணமாக தனிமனித செலவீனங்களும், சூழல் மாசுகள் ஏற்படுவதற்கும் காரணமாக அமைகின்றன. முடிந்த அளவிற்கு இயற்கை வளங்கள் பற்றிய புரிதலை வளர்த்துக்கொண்டு அதற்கேற்ப அவ்வவ் பகுதிகளில் திட்டங்கள் ஒருங்கே முன்னெடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பாக, தோட்டப்பயிர்ச்செய்கை, தெங்கு பயிர்ச்செய்கை, மீன்பிடி மற்றும் கடல் தொழில், ஆடைக் கைத்தொழில், விவசாயம், பனை உற்பத்திகள், தொழிற்சாலைகள், உற்பத்தியகங்கள் இவை அனைத்தும் அரசாங்கத்தினால் கவனிக்கப்பட்டு நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு கொண்டு சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், உற்பத்திகளை ஊக்குவிக்கும் அரசாங்கம், விநியோகத்திலும் அக்கறை காட்டுவது காலத்தின் தேவையாக உள்ளது.

ஆகவே, இந்த விடங்களை கருத்திற்கொண்டு அனைத்துப்பகுதிகளுக்கும் சேரவேண்டிய முறையான திட்டங்களும் அபிவிருத்திகளும் ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கை இந்த அரசாங்கத்தின் மீது ஒரு சராசரி பிரஜையான என்னிடமும் இருக்கின்றது. அடுத்த ஐந்து ஆண்டுகள், ஜனாதிபதியினதும், பிரதமரினதும், அமைச்சரவையினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் திட்டங்கள், நகர்வுகள், செயற்பாடுகள், எதை நோக்கி அமையப்போகின்றன என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**- யாக்யா -**

## ‘வெடி’மணியம் தொடர்ச்சி

*கதைக்கிறாங்கள்.*

*“கத்தரிக்காய்”மலிஞ்சு திண்ணைவேலி சந்தைக்கு வந்து கூவிக்கூவி விக்கினம்!*

*மணிவண்ணனுக்கு ஆதரவா பருத்தித்துறையில் பதாகைகள் கட்டியிருக்கினம்.*

*கவுணாவத்தை வேள்விக்கு எதிரான வழக்கில் மணிவண்ணன் வாதாடினார். கோயில் விசயம், அதுகும் வேள்வியில கைவைக்காத ராசா எண்டு படிச்சு படிச்சு சொன்னம்.*

*அரசன் அன்றுகொல்வான் . தெய்வம் நின்றுகொல்லும் என்று சொல்லுவினம்.*

*வைரவர் கஜேந்திரன் வடிவில வந்து “ஆப்பு” இறுக்கிப்போட்டார்.*

*மணிவண்ணன் கஜேந்திரனுக்கு ஒரு “படையலை” போட்டால்;*

*பிரச்சினை ஓவர்!*

*ஆனால் அண்மையில் கஜேந்திரகுமார் அவுஸ்ரேலியா “சூம்” கூட்டத்தில;*

*“பிரச்சினை சுமூகமாக தீர்க்கப்பட வாய்ப்பில்லை ராசா” எண்டுதான் சொல்லுறார்.*

*தமிழரசுக்கட்சியின் கறியில சசிகலா ரவிராஜ் “கறிவேப்பிலை” எண்டால்;*

*தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கறியில் மணிவண்ணன் “கறிவேப்பிலை”!*

*கதையோட கதையா இஞ்சால விக்கினேசுவரன் படை பட்டாளத்தோட முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தில் விளக்கேத்தின “கூத்தை” சொல்ல மறந்திட்டன்.*

*பாதுகாப்புக்கு ஒரு பொலீஸ்.குடை பிடிக்க இன்னொரு பொலிஸ்.*
*தண்ணிப்போத்தல் காவ இன்னொரு ஆள். போட்டோ எடுக்க நாலுபேர்.கால் கழுவிவிட இன்னொருத்தர் எண்டு ஐயா கலக்கிட்டார் போங்கோ!*

*“கூத்து” முடிய குடுத்த பேட்டியிலதான் சொதப்பிட்டார்.*

*“டெமொக்கிறசி democracy எண்டதுக்கு தமிழ் என்ன?” எண்டு கேட்டு தடமடிச்ச ஐயாவை பாக்க பரிதாபமாக்கிடக்கு!*

*ஆனாலும் கொட்டையும் பட்டையுமா வெள்ளையும் சொள்ளையுமா விக்கி ஐயா நாடாளுமன்றத்தில் ஆத்தப்போகும் “சொற்பொழிவை” பாக்க ஆவலாக இருக்கிறம்.*

*முக்கியமாக ஐயாவின் பேச்சில் “இனப்படுகொலை” இல்லையெண்டால் சனம் கடுப்பாகிடும்.*

*தேர்தல் முடிஞ்சு ரண்டு கிழமையாகுது. UNP விசயகலாவின் கதையே இல்லை. ஆள் எங்கையெண்டும் ஒரு தகவலும் இல்லை. வடக்கில் விசயகலாவின் கட்சியும் விசயகலாவும் துடைத்து எறியப்பட்டிருக்கு. தோல்வி அடைஞ்சதும் விசயகலா தலைமறைவாகிவிட்டார்.*

*சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியலில் ஒரு தமிழனுக்கும் இடமில்லை. ஏழுபேரில ஒருத்தருக்கு கூட குடுக்கயில்லை!*

*போனமுறை எங்கட ஆக்கள் “சஜித்துக்கு போடு” எண்டு முக்கித்திரிஞ்சதை நினைக்க எரிச்சல் வருகுது.*

*கொழும்பில பிச்சைக்காரர் ஒருத்தற்ற வங்கிக்கணக்கில் 14 கோடி ரூபா. சிறையில் இருக்கும் போதைப்பொருள் யாவாரி மேர்வின் ஜனாவின்ர காசாம் இது.இனிமேல் கொழும்பில பிச்சை எடுக்கிறது வலு கஸ்ரம்!*

*மைத்திரிக்கும் ரணிலுக்கும் சனாதிபதி ஆணைக்குழு அழைப்பாணை விடுத்திருக்கு.*
*“ஏப்ரல் குண்டுத்தாக்குதல்” தொடர்பான விசாரணைக்குத்தான் உவை ரண்டுபேரையும் கூப்பிட்டிருக்கினம்.*

*பாவம் ரண்டுபேரும் தேர்தல் முடிவுகளால் நொந்துபோய் இருக்கிறநேரம் பாத்து;*
*பனையால விழுந்தவனை மாடு மாதிரி மகிந்த மிதிக்கிறார் எண்டு சனம் கதைக்குது!*

*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கத்தை கொன்ற வழக்கில் உள்ளுக்கை இருக்கும் பிள்ளையான் இந்த தேர்தலில் அதிக விருப்பு வாக்கில் வெற்றி!*
*அது அறிஞ்ச விசயம்.*

*அறியாத விசயம் என்னண்டால்;*

*பிள்ளையான் நாடாளுமன்றத்தில் கன்னி அமர்வில் கலந்துகொள்ள மட்டக்களப்பு உயர்நீதிமன்றம் அனுமதி குடுத்திருக்கு!*

*உதைவிட இன்னுமொரு சங்கதியையும் சொல்லவேணும்.*

*மரணதண்டனை வழங்கப்பட்ட இன்னொருத்தரும் இந்தமுறை நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருக்கிறார். இரத்தினபுரியில் அவருக்கு ஒண்டரை லச்சம் விருப்பு வாக்குகள். அவரும் கன்னி அமர்வுக்கு வாறாராம்.*

*எங்கட சிறிலங்கா வாக்காளர்கள் கொஞ்சம் விசித்திரமான ஆக்கள்தான்!*

*நாடாளுமன்றத்தில் இருக்கும் 225 ஆசனங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக 48 கதிரைகளில் எங்கட ஆக்கள் இருக்கப்போகினம்.*

*கடந்த 43 ஆண்டுகளாக உதில ஒரு கதிரையை நிரந்தர குத்தகைக்கு எடுத்து இருந்த ரணில்;*

*இந்தமுறை இருக்கமாட்டார் என்பதும் அவரது கட்சி துடைத்தளிக்கப்பட்டதும் கடவுள் குடுத்த தண்டனை!*

*19ஆம் திருத்தச்சட்டத்தை தூக்கி குப்பையில போடப்போகினமாம். பதிலுக்கும் 20 வரலாம். 25 வரலாம்.*
*எது வந்தாலும் ஏன் எண்டு ஆரும் கேக்கமுடியாது!*

*ஏனெண்டால் மகிந்தவிட மூண்டில் ரண்டு இருக்கு. அதை வைச்சு என்னவும் செய்யலாம். ஒருத்தரும் அவற்ற வளவுப்படலையை ஆட்ட முடியாது.*

*Keenie meenie services என்ற இங்கிலாந்தின் தனிப்பட்ட இராணுவ அமைப்பு 1986 களில் சிறிலங்கா இராணுவத்தோடு சேர்ந்து இயங்கியுள்ளது.*

*நாசமறுப்பாங்கள்...!*
*அந்தக்காலப்பகுதியில் பல “படுகொலைகளை” சிறிலங்கா ஆமியோட சேர்ந்து செய்ததாக தகவல்கள் வெளியாகியிருக்கு!*

*இந்த நிலையில் இனப்படுகொலைக்கு உலகம் எங்களுக்கு நீதியை பெற்றுத்தரும் எண்டு நாங்கள் நம்புறது முட்டாள்த்தனம் தான். ஆனாலும் தொடர்ந்தும் போராடிய இனங்களுக்கு நீதி கிடைச்சிருக்கு எண்டதால ஈழத்தமிழினமும் தொடர்ந்தும் நீதி கேட்டுப்போராடும்.*

*ஒரே ஒரு எலெக்சன்தான் நடந்துமுடிஞ்சிருக்கு. ஆனால் எல்லாக்கட்சிகளிலும்*
*“வெட்டுக்குத்து”!*

*கோத்தாவின் “ ஒப்பிறேசன் பார்லிமெண்ட்” இராணுவ நடவடிக்கை வெற்றி!*

*எல்லாக்கட்சியும் “அவுட்”!*

*முக்கியமான கட்சித்தலைவர்கள் பலர் போட்டுத்தள்ளப்பட்டுள்ளார்கள்.*

*அடுத்த “ ஒப்பிறேசன் மாகாணசபை” இராணுவ நடவடிக்கைக்கு “கோதா றெஜிமெண்ட்” தயாரா இருக்காம்!*


*என்னது மாகாணசபைத்தேர்தலோ?*

*“பிச்சை வேண்டாம் நாயைப்பிடி” எண்டு தமிழ்த்தேசிய கட்சிகள் ஓடுகினம் எண்டு சனம் சொல்லுது.*

*பிச்சல்கள்... புடுங்கல்கள்...*
*வெட்டுக்குத்துகள் எல்லாம் நீங்கி தமிழ்த்தேசிய கட்சிகள் சுகம்பெற எல்லாம் வல்ல கதிர்காமக்கந்தன் துணை!*

*அரோகரா!!!!*

*#வெடிமணியம்*



# ஆயிரம் நிலவோடு அறிமுகமான வானம்பாடி!

**Soulful Peaceful Beautiful...** இதுதான் 'பாடும் நிலா' பாலுவின் குரலைக் கேட்டு வளர்ந்த என் போன்றோரின் வாழ்க்கையில் **SPB** என்ற மூன்றெழுத்தின் அர்த்தம்!

எஸ்.பி.பி. ஓர் அதிசயப்பிறவி. கர்நாடக சங்கீதம் கற்காமலே இசையில் சாதனைகள் நிகழ்த்திய – பொறியியல் படித்த இளைஞன். எல்லாமே கேள்வி ஞானம்தான். மெல்லிசைக் கச்சேரிகளில் பாடுவதையும் பாட்டுப் போட்டிகளில் பரிசுகளை வாங்கிக் குவிப்பதையும் ஆர்வத்தோடு செய்தவர். அவைதான் அவருக்கு எம்.ஜி.ஆர்., சிவாஜி, என்.டி.ஆர்., நாகேஸ்வர ராவுக்குப் பாடும் வாய்ப்பை வாங்கிக் கொடுத்தது. எந்தப் பாடகனுக்கும் ஆரம்பத்தில் உச்ச நட்சத்திரங்களுக்குப் பாட வாய்ப்பு கிடைப்பதில்லை. ஆனால், எஸ்.பி.பி. தமிழில் எம்.ஜி.ஆர். பாடலைப் பாடி அறிமுகமானவர்.

இப்படி மிக இளம்வயதில் மெச்சூர்டான 'ஆயிரம் நிலவே வா' பாடலைப் பாடியவர், **'Reverse Aging'** என்பார்களே... ஆரம்பத்தில் வயதான பாடகர்களுக்கே உரிய இறுக்கமான குரலிலும், வயதாக வயதாக மலைத் தேனடையைப் பிளந்ததைப்போல எல்லோருக்குமானதாய் நாலாபுறமும் வடிந்து தேனினும் இனித்தது அவர் காந்தக் குரல்!

எஸ்.பி.பி.யின் பாடல்களைக் கேட்காமல் தமிழர்கள் யாரும் காதலித்திருப்பார்களா என்று தெரியாது. "ரொமான்டிக் பாடல்களைப் பாடுறதுக்கு எனக்குள்ள தாக்கத்தை உண்டாக்கியது லெஜண்ட் முகமது ரஃபி சார். அவர் பாடல்களை கண்ணை மூடிக்கிட்டுக் கேட்டுப் பாருங்க. அவர் ஏதோ தன் காதலிகிட்ட சிரிச்சுப் பேசிட்டு இருக்கிற மாதிரியே தோணும். அவரோட பாதிப்புதான் என்கிட்ட இருக்கு. அதனாலகூட ரொமான்டிக் பாடல்களில் என் குரலில் காதல் நிரம்பி வழியலாம்!" என்று ரஃபியைச் சிலாகிக்கும் பாலுவும் காதல் திருமணம் செய்தவர்தான்.

சங்கீதத்தோடு இங்கிதமும் தெரிந்தவர் பாலு. எந்த இடத்திலும் அவர் உணர்ச்சிவயப்பட்டுப் பேசி யாரையும் காயப்படுத்தியதே இல்லை. உயிரைக் கொடுத்துப் பாடிய பாடல், படத்திலிருந்து தூக்கப்பட்ட சம்பவங்களும் இருக்கின்றன. இப்போதுபோல அப்போது ரெக்கார்டுகளிலும் இடம்பிடிக்காமல் குப்பைகளுக்குப் போகும் அந்தப் பாடல்களுக்காக அவர் சண்டை போட்டதுமில்லை.

தன்னை நம்பிவந்த பல இளம் இசையமைப்பாளர்களுக்கு உயிரைக் கொடுத்துப் பாடி அவர்களுக்குப் பெரிய பிரேக் கொடுத்திருக்கிறார். இவரைப் பிடித்துப்போய் கடைசிவரை இவரைத்தவிர வேறு யாரையும் பாட வைக்காமல் தங்கள் கரியரில் **Single Singer Wonder** ஆகப் பயன்படுத்தி இசையமைத்தவர்கள் பலர். அதேபோல ஏ.ஆர். ரஹ்மானுக்கும் வேறுவிதமான அனுபவம் நடந்திருக்கிறது.

'ரோஜா' படத்தின்போது சாமியார் மடத்திலுள்ள என் பஞ்சதன் ரெக்கார்டிங் ஸ்டூடியோவில் அப்போ அவ்ளோ வசதியெல்லாம் இருக்காது. பாடகர்கள் பாடும் அந்தக் கண்ணாடி அறைக்குள் எஸ்.பி.பி. சாரால் வசதியாக நின்றுகூட பாட முடியாது. அவ்வளவு சின்னதாய் இருக்கும். ஆனாலும், புன்சிரிப்போடு மூன்று நாட்கள் வந்து பொறுமையாகப் பாடிக் கொடுத்துட்டுப் போனார்" என்கிறார் ரஹ்மான்.

'சங்கராபரணம்' படத்துக்காக முதல் தேசிய விருதை வாங்கிவிட்டு, 'எனக்குக் கர்நாடக சங்கீதம் தெரியாது' என்று பாலு சொன்னபோது கர்நாடக சங்கீத மேதைகளே ஆடிப்போனார்கள். அதேபோல இராண்டாவது தேசிய விருதை 'ஏக் துஜே கேலியே' படத்துக்காக வாங்கியபோது, 'எனக்கு இந்தி தெரியாது' என்றபோது, 'கியா..!' என ஷாக் ஆனது பொலிவுட்.

சாரீரம் சரீரம் எல்லாமே இசையால் நிரம்பியவர் எஸ்.பி.பி. ஒரேநாளில் அசுரத்தனமாக 19 பாடல்களைப் பாடி கம்போஸ் செய்ததெல்லாம் இன்றளவும் யாரும் மிஞ்சமுடியாத சாதனை. அதேபோல் ஒரு பாடகர் இசையமைப்பாளராக உருமாறி பல படங்களுக்கு இசையமைத்ததும், டப்பிங் ஆர்ட்டிஸ்ட்டாக இந்தியா முழுவதும் 13 நடிகர்களுக்குக் குரல் கொடுத்திருப்பதும் ஓல்டைம் ரெக்கார்ட்தான்!

ஐஸ்க்ரீமில் செர்ரி போல நடிப்புத் திறமை என்பது அவர் நமக்குக் கொடுத்த ஸ்வீட் சர்ப்ரைஸ். மிக நல்ல நடிகர்!

"ஒரு பாடகன் என்பவன் கிட்டத்தட்ட நடிகன்தான். என்ன, மைக் முன்னாடி நடிக்கிற நடிகன். நான் பாடசாலை நாட்களிலேயே மேடை நடிகன்தான். இயல்பாக நடிப்பேன். அதனால் நடிப்பது சிரமமாக இல்லை. ஆனால், நல்ல அப்பா, நல்ல அண்ணன், நல்ல டொக்டர் என ஒரே மாதிரி ரோல்கள் செய்வது பிடிக்கல. தெலுங்கில் தணிகல பரணியின் இயக்கத்தில் 'மிதுனம்' படத்துல கிடைச்சது மாதிரியான சவாலான கேரக்டர்களை எதிர்பார்த்துட்டு இருக்கேன்" என்று தன் நடிப்பார்வத்தையும் 74 வயதில் வெளிக்காட்டியவர் பாலு.

எஸ்.பி.பி.யை எல்லோருக்கும் பிடிக்கக் காரணமே அவரின் எளிமைதான். எவ்வளவு உயரங்கள் போனாலும் சிகரங்கள் தொட்டாலும் அவர் எல்லோரிடத்திலும் அன்பாகவே இருக்கிறார். எளிதில் அணுகும் மனிதராக இருக்கிறார்.

"நான் உங்களை ரொம்ப நேரம் காக்க வெச்சிட்டேனோ... ஐ ஆம் ரியலி ரியலி ஸாரி.." – கைகளைக் கூப்பியபடி தன்னைச் சந்திக்க வந்த நிருபனின் கைகளைப் பற்றி, "என்ன சாப்பிடுறீங்க?" என்று வாஞ்சையோடு கேட்கும்போதே அவன் வானத்தில் மிதந்து கொண்டிருப்பான். பேட்டியில் போகிற போக்கில் பிடித்த ஐஸ்க்ரீம் 'கஸாட்டா' பற்றி சப்புக்கொட்டியபடி பேசுவார். குரலுடைந்து இனி பாடவே முடியாது என்று டொக்டர்கள் கை விரித்ததையும், மீண்டு வந்ததைப் பற்றியும் கண்ணீரோடு நிருபனிடம் பகிர்ந்துகொள்வார், ஒரு பாசக்கார பெரியப்பாவைப் போல!

சூப்பர் சிங்கர் நிகழ்ச்சிகளில் எவ்வளவு வற்புறுத்தினாலும் அவர் யாரையும் திட்ட மாட்டார். "ஏன் திட்டணும்... முடிந்தளவு பொசிட்டிவிட்டியை விதைப்போமே?" என்பார்.

தான் பிஸியாக கமல் – ரஜினி என உச்ச நட்சத்திரங்களுக்குப் பாடிக்கொண்டிருந்த போதுகூட, சக பாடகரான மனோவை வளர்த்துவிட மெனக்கெட்டார். "பாலுண்ணா எப்பவும் மத்தவங்க நல்லாயிருக்கணும்னு நினைக்கிறவர். நான் பாடுன பாட்டுல பாதி அவர் சிபாரிசு செஞ்சதுதான். ரஜினிக்கு 'எங்கிட்ட மோதாதே நான் ராஜாதி ராஜனடா' அப்படிப் பாடினதுதான். யாருக்கு அப்படி ஒரு மனசு வரும்" என்று மனோவே நெகிழ்ந்து சொல்கிறார்.

கொடுத்ததை அப்படியே பாடுபவர் அல்ல பாலு. சின்னச் சின்ன விளையாட்டுகள் மூலம் பாடலை செழுமைப்படுத்தும் இரசாயன வித்தைகள் தெரிந்தவர். அவர் தாண்டிவந்தது தலைமுறைக் கலைஞர்களை மட்டுமல்ல, பல தலைமுறை இரசனைகளையும்தான். எல்லா தலைமுறை ரசனைக்கும் ஈடுகொடுத்து மயக்கியது எஸ்.பி.பி.யின் குரல்.

எம்.ஜி.ஆர்., ரஜினி, கமல், விஜய், அஜித், எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா, ரஹ்மான், அனிருத், கண்ணதாசன், வாலி, வைரமுத்து என்று காலங்கள் கடந்து பயணிக்கும் பாடலின் குரல் பாலுவுடையது. காலங்களைக் கடந்த அந்தக் குரல் இன்னும் பல காலங்களைக் கடந்தும் ஒலிக்கும், நிலைக்கும், நிறைக்கும், இசைக்கும்!

(நம்மையெல்லாம் இன்பத்திலும் துன்பத்திலும் இசையால் இன்புறவைத்த ஒரு நல்ல கலைஞன் நலம்பெறவேண்டி நாமும் பிரார்த்திப்போம்)

*நலம் வாழ எந்நாளும்*
*என் வாழ்த்துக்கள்*
*தமிழ் கூறும் பல்லாண்டு*
*என் வார்த்தைகள்*
*இளவேனில் உன் வாசல் வந்தாடும்*
*இளந்தென்றல் உன் மீது பண்பாடும்*

*நலம் வாழ எந்நாளும்*
*எம் வாழ்த்துக்கள்.....*

[நன்றி – விகடன்]

---



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்



# சீத்துவக்கேடு

## 54

உந்த வாக்கு வாதத்துக்குப் பிறகு அடுத்த நாள் காலமை நித்திரைப் பாயல எழும்பி உள்ள வேலையளை முடிச்சு ஆச்சி ஊத்தி பேணியில குடுத்த கோப்பியை குடிச்சுக் கொண்டே அப்பு தன்ரை கள்ளுக் கதையைத் தொடங்க, அப்பு எப்பிடியும் கள்ளிலை ஒரு ஆராய்ச்சி முடிச்சுப் போட்டுத்தான் விடுவார் எண்டது எனக்கு விளங்கிப் போட்டுது.

நீ நேற்றுக் கனக்கக் கதைச்சனி எண்டு போட்டு ராத்திரி சூடாமணி நிகண்டை எடுத்து விடிய விடிய படிச்சனான் கண்டியோ. அதில கள்ளுக்கு ஒண்டு ரெண்டு பெயரில்லை நாப்பத்திஎட்டுப் பெயர் கிடக்கு. அந்தப் பாட்டைச் சொல்லுறன் கேள் எண்டார் அப்பு.

"அரியல் பாடலி தேன் மட்டேயரிட்ட
மேசுண்டைதொண்டி முருகுசாயனமே
கௌவைமுண்ட கஞ்சாதிசாலி
பிரசமாதவமே மேதை மிழிசேறு தணியன்
மாரி சுரை மது சுமாலி மாலிசுலோகியே
சொல் விளம்பி
நற வொடாசவமே தொப்பிடுனையிக்கு
ஞாளி குந்தி வெறிவெடிசாறு பானம்
விகுணியேசோபம் வேரி
மறவி தேஞ்சவிகைதேறன்மகரந்த
மதிரையாம்பல் அறிவழி படுவாறெட்டுங்
கள்ளினுக்கமைத்தபேரே"

உனக்கு பாட்டின்ரை பொருள் விளங்கிச்சோ அதாவது அரியல், பாடலி, தேன், மட்டு, அரிட்டம், சுண்டை, தொண்டி, முருகு, சாயனம், கௌவை, முண்டகம், சாதி, சாலி, பிரசம், மாதவம், மேதை, பிழி, சேறு, தணியல், மாரி, சுரை, மது, சுமாலி, மாலி, சுலோகி, சொல்விளம்பி, நறவு, ஆசவம், தொப்பி, நன, இக்கு, ஞாளி, குந்தி, வெறி, வெடி, சாறு, பானம், விகுணி, சோபம், வேரி, மறவி, தேம், சுவிகை, தேறல், மகரந்தம், மதிரை, ஆம்பல், படு எண்டு பெயர்களாம்.

இவ்வளவு பெயர் கள்ளுக்கு இருக்கெண்டால் அது எங்கட பழந்தமிழரின்ரை வாழ்க்கையோட பொருளாதாரத்தோட எவ்வளவு இறுக்கமா பிணைஞ்சிருக்க வேணும் எண்டு உனக்கு விளங்குதே எண்டுவார் .

ஆலம்பெரி சாத்தனார் "நீத்தல் ஓம்புமதி–
பூக் கேழ் ஊர்
இன் கடுங் கள்ளின் இழை அணி நெடுந் தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்"
(நற்றிணை 1) எண்டு சோழரின்ரை ஊரின்ரை வளம் கள்ளிலை இருக்கெண்டு சொல்லுறார்.

நீயும் உந்த மற்ற ஊர்ப் பெண்டுகள் மாதிரி கனக்க கதைக்கிறாய் உங்கை கள்ளை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எண்டு எல்லா நிலங்களிலையும் இருந்த எங்கட ஆக்கள் நல்லா குடிச்சிருக்கிறாங்கள் எண்டு எங்கட இலக்கியங்கள் சொல்லுது.

அதமாதிரி பனை மரம், தென்னை மரம், அத்தி மரம், அரச மரம், ஈச்ச மரம், வேம்பு, சப்பாத்தி எண்டு எல்லா மரங்களிலையும் இருந்தும் தேன், நெல்லரிசி, பழங்கள், பூவகைகளில இருந்தும் கள்ளு எடுத்தவங்கள் எண்டு சித்த மருத்துவ சுவடிகளிலையும் பழைய இலக்கியங்களிலையும் சொல்லப்பட்டிருக்குது கண்டியோ.

அதுமட்டுமே கள்ளை எடுக்கப் பாவிக்கிற பொருளைப் பொறுத்து – அது இருக்கிற முதிர்ச்சி நிலையைப் பொறுத்து – சுவையைப் பொறுத்து – கலங்கல் தன்மையைப் பொறுத்து பலவகையாப் பிரிச்சு அவங்கள் பேசி இருக்கிறாங்கள். நெல்லரிசியிலை இருந்து எடுக்கிற கள்ளை நறவு எண்டும் தேனிலை இருந்து எடுக்கிற கள்ளை தேறல் எண்டும் பூக்களிலை இருந்து எடுக்கிற கள்ளை பூக்கமழ் தேறல் எண்டும் சொல்லுறாங்கள்.

சுவையை வைச்சுக்கொண்டு அருங்கள் இன்கடுங்கள் கடுங்கள் வெங்கள் எண்டும் கலங்கி இருந்தா கலங்கல் எண்டும் தெளிஞ்சிருந்தா தேறல் எண்டும் சொல்லி இருக்கிறாங்கள். அதுமட்டுமே சாராயத்தை அழுங்காப்பால் எண்டும் வெளிநாட்டிலை இருந்துவந்த கள்ளை தேங்காந்தாரம் எண்டும் சொல்லி இருக்கிறாங்கள் கண்டியோ எண்டுவார்.

"நிலம்புதைப் பழுனிய மட்டின் தேறல்' எண்டு கபிலர் (புறம் 120) சொல்லுற மாதிரி மூங்கில் குழாயிலை கள்ளை அடைச்சு வைச்சால் நல்லா காரம் ஏறும் இல்லாட்டில் முதிர்ச்சி அடையும் கண்டியோ. அதுமாதிரி ஒரு வருசம் வரை ஊற வைக்கிற கள்ளை தலையாயது இல்லாட்டில் முதுகள் எண்டும் ஆறு மாதம் வரை ஊற வைக்கிற கள்ளை இடையாயது இல்லாட்டில் நாட்கள் எண்டும் ஒரு மாதம் வரை ஊற வைக்கிற கள்ளை கடையாயது இல்லாட்டில் இளங்கள் எண்டும் சொல்லுறது எண்டு பழைய புத்தகங்களிலை கிடக்குது விளங்கிச்சா எண்டுவார்.

தேனை மூங்கில் குழாய்களில அடைச்சு வைச்சு பதப்படுத்தி எடுக்கிற மதுவை தேக்கள் தேறல் எண்டு சொல்லுவினம்.

இந்த தேக்கள் தேறலை குடிச்சு குறவர்கள் குறிஞ்சிக் குமரன் முருகனைப் பாடி ஆடினவை எண்டு திருமுருகாற்றுப் படையில நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல் ( 195) சொல்லப்பட்டிருக்குது.

இந்த தேறலைப் பற்றி மலைபடுகடாம், அகநானூறும் சொல்லுது.

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் "வாங்குஅமைப் பழுனிய தேறல் மகிழ்ந்து" எண்டு புறநானூறிலை (129) சொல்லுறார். "நனை முதிர் தேறல் நுளையர்க்கு ஈயும்" எண்டு குடவாயிற் கீரத்தனாரும் (அகம் 366) "ஊழ்படு பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்" (அகம் 2) எண்டு கபிலரும் சொல்லுகினம்.

"திருந்தமை விளைந்த தேக்கள் தேறல்" (522) எண்டு பெருங்கௌசிகனார் மலைபடுகடாமில சொல்லுறார் கண்டியோ எண்டுவார். அப்பு சொன்ன பாட்டுகளைக் கேட்டு ஆச்சி இப்ப கள்ளுக் குடிச்சு வெறி வந்த ஆள் மாதிரி விறைச்சுப் போய் இருந்தா.

*(தொடரும் )*

# தூறல்கள்...

## கொஞ்சமாவது பேசுங்கள்

குரலைத் தொலைத்த
புல்லாங்குழல் விறகாய் மாறி
எரியும் நேரம்
மரத்தை தொலைத்த
தென்றல் காற்று
மரணம் தேடி அலையாதா...?
நீரைச் சுமந்து
நீந்திய மேகம்
தாரை தாரையாய்
அழும் நேரம்
யாரைத் தேடி பயணம் செய்யும்
யாதும் உனக்கு புரியாதா...?
உறவைப் பிரிந்த
எந்தன் உள்ளம்
உலையைப் போல கொதித்திருக்க
உந்தன் நினைவு அதனில் வெந்து
பொங்கி வடியுது கவியாக
இரவின் பொழுதில்
தூக்கம் மறந்து
இதயம் நோக
ஏக்கம் சுரந்து...
உந்தன் ஓசை
எங்கே என்றே
உயிரும் காயுது வலியாக...!
கொஞ்சிப் பேச கொஞ்ச நேரம்
கெஞ்சிக் கேட்டது
என் தவறே...!
நெஞ்சில் பூத்த
நெருஞ்சி முள்ளாய்
எண்ண வைத்தாய்
எனது காதலை...!

கஞ்சத் தனத்தில்
அன்பு தந்தால்
மிஞ்சிருக்காம
மிச்ச அன்பு...?
பஞ்சம் வந்த
பாலை நிலையாய்
பழகிப் போனது
பாசப் பண்பு...!
ஈரத்தை பிரியாத
மீனாக என் கண்கள்...!
ஈரத்தை அறியாத
இரும்பாக உன் மனதா...?
தாரத்தை அறியாமல்
இரும்பாக உன் மனதா
தாரத்தை எண்ணாமல்
தாட்டியம் தான் இருந்தால்
தாங்கிட முடியாமல்
தளர்ந்திடுமே இல்லறம்...!
தூரத்தில் நீயிருந்தால்
தும்மலாக நான் வருவேன்
நேரத்தை எனக்காக
நேசத்தோடு செலவு செய்...!
பாரத்தை பகிர்ந்ததாக
பரவசத்தை நான் அடைய
பாசத்தை உன் பேச்சில்
படையலாக விருந்து வை...!
பாசத்தை உன் பேச்சில்
படையலாக விருந்து வை...!

ந.இராஜ்குமார்
தமிழ்நாடு



## அப்பா

குழந்தையாய் இருக்கையில் நான் கொஞ்சி விளையாடும்
ஒரு பொம்மையாய் இருந்தாய்.

நான் கொஞ்சம் வளர வளர
நீயே என் உலகம் ஆகினாய்!

உன் காலில் செருப்பு இல்லாத போதும்
எனக்கு கொலுசு வாங்கி மாட்டினாய்!

உன் நெஞ்சம் நிறைய வலிகள் இருந்த போதும்
என்னை மார்பில் தூங்க வைப்பாய்!

பள்ளிக்கூடம் முடியும் நேரம்
வாசலில் காவல் காத்து நிற்பாய்!

வீடு போய் சேரும் வரையும்
என் விரல் பிடித்தே நடப்பாய்!

நான் பருவம் எய்தி வயசு வந்த பின்பு
கூச்சம் இன்றி தொட்ட கை உனதே..!

உன் பெயரின் அருகில் என் பெயரை எழுதி
அந்த தாள்களை சேர்த்து வைத்த நாட்கள் இனிதே..!

நான் ஆடை மாற்றும் வேளைகளில்
கதவை மூடி கொள்வாய்!

உன்னை போல் என்னை பாதுகாக்க
எவரும் இங்கு இல்லை!

உன் நரை முடிகளை பிடுங்கி
உன் வயதை குறைத்து ரசிப்பேன்!

என் வாழ்வின் முதல் தோழனும்
எனக்காய் வாழும் ஜீவனும் நீயே!


கடைசி வரை உன்னோடு வாழ்ந்திடும்
கனவோடே இருந்தேன்!

எனக்கு வரன் தேடி களைத்து
இரவெல்லாம் நீ தூங்காமல் இருப்பாய்!

நான் எப்போதும் சிரித்திடவே
இதுவரை நீ வியர்வை கொட்டி உழைத்தாய்!

இப்போது என்னை கட்டிக் கொடுத்து விட்டு
நீயோ கண்ணீரோடு விலகுகிறாய்!

நெடுந்தீவு முகிலன்



## நலம் பெறுவாய்.. இசை தருவாய்...!

இனிய குரலோனே...
கொரோனாவிற்கும் உன் குரல்மீது ஈர்ப்பு வந்து விட்டதோ..
கோடி ரசிகர்களை ஈர்த்தவன் நீ...
கொரோனா உன்னிலிருந்து நீர்த்து போகட்டும்..

நொந்த உள்ளங்களின் ஔடதம் நீ..
உன்னை கொரோனா தொட்டதேனோ...

இன்று உனக்காக இறைவனை இரஞ்சுகின்றோம்...
இசை மருத்துவன் நீ மீண்டுவர வேண்டும் என்று...

விழி மட்டுமல்ல,
உன் குரலை ரசித்த
செவியும் கூட அழுகின்றது
உன் நிலை அறிந்து...

நலம் பெறுவாய்..
இசை தருவாய்...
இறைவன் என்றும் துணை உனக்கு
ரசிக உலகமே உன் நலத்திற்காய் காத்திருக்கு...

- வி.ரெட்லி ஹெரிசன்



## தேடி வருகிறார்கள்

நாம் தேடிச் சென்றவர்கள்
நமைத்தேடி வருகிறார்கள் !
நாம் சிரித்தால் முறைத்தவர்கள்
நமைக்கண்டு சிரிக்கிறார்கள்!
நாட்கணக்கில் எதிர்பார்த்து
நம்பவைத்து கழுத்தறுத்தோர்
நம்பிக்கை நாணயத்தை
நம்புங்கள் என்றார்கள்!
கால் வலிக்க காத்து நின்றும்
கதவை திறவாதவர்கள்
காலடிக்கு வந்து எங்கள்!
வாக்குகளை கேட்கிறார்கள்
ஏமாற வைத்தவர்கள்
ஏமாற போகிறார்கள்
'காடி'களில் ஓடிவந்து
கதைக்கதையாய் சொல்கிறார்கள்..!
விட்டத் தவறுகளை
விட்டுவிட சொல்கிறார்கள்
தொட்டப்பணி முடிக்க
தொடர்ந்தனுப்ப சொல்கிறார்கள்
தொழில்வாய்ப்புகளை அள்ளி
வழங்க வழி செய்வதென்றும்
பாலங்கள் பாதைகளை
பன்னூறு திட்டங்களை
பரவலாய் ஏற்படுத்தி
பண்ணி முடிப்பதென்றும்
பாமரரின் வாழ்வியலில்
படிந்த துயர் மாறுமென்றும்
பாட்டாளி வர்க்க பேதம்
கூட்டாளி கூட்டமென்றும்
கல்வி கலை கலாசாரம்
கலகலக்கும் இனியென்றும்
வறுமைக்கு மாற்றுவழி
வகுத்தெழிலை செய்வதென்றும்,
விதவை அனாதைகளின்
விதி புதிதாய் அமையுமென்றும்
வீடுவீடாக வந்து
விஞ்ஞாபனங்களை தந்து
பழைய பல்லவியை
பாடி வருகிறார்கள்..!
திருமண நிகழ்வுகளில்
அழைக்காமலேயே கலந்தும்
மரணச் சடங்குகளில்
மறக்காமல் மனம் கசிந்தும்
நோயுற்றோர் நோயற்றோர்
நொம்பலங்கள் கேட்டறிந்தும்
வருவோர் போவோருக்கு
வணக்கம் சலாம் உரைத்தும்
குழந்தைகளை தூக்கி
முத்தமழை பொழிந்தும்
இன்ன பிற புரிந்தும்
இலக்கை மறக்காமல்
இலக்கத்தை சின்னத்தை
விளக்கி வருகிறார்கள்..!
நாம் தேடி சென்றவர்கள்
நமை தேடி வருகிறார்கள்

கலாபூஷணம்
ஏறாவூர் தாஹிர்

## முதல் நீ!

"So, What's on your heart today?"
முகநூல் வினவியது.
நினைவலைகள் கரை புரண்டு ஓட,
கரை ஒதுங்கியது
நம் சமீப சந்திப்பில்.

காபி கடையில்
எதிரெதிர் சீட்.
இடையில் இருப்பதோ
விகல்பம் இல்லா நட்பு
கன்னி கழியாத காதல்.
தோல் உரசா தூரம்
கலாபம் கொண்டாடும் கண்கள்.

மாற்றி பரிமாறிய கோப்பைகளுக்கு
போற்றி புகழ்வேன் சர்வர் சுந்தரனை!

நான் குடித்த தடம் தேடி
இடம் திரும்பியது உன் கோப்பை
இதம் தந்தது காப்பியன்று.
நுரையில் தூக்கலாய் வெட்கம் இன்று.

பேசி அலுக்காத வாய்கள்
காண சலிக்காத கண்கள்

படித்த கவிதைகள் நினைவில்
பல கோடி வந்து போக!
நேரம் உறைந்து போக!
மக்கள் மறைந்து போக!

பிரிவில் இரட்டிக்கும் பிரியம்
இடைவெளி இங்கே கால விரயம்.
தோளில் புதைந்து பரஸ்பரம் செய்தோம்.
என் சட்டையில் உன் வாசம் வீசும் ஆண்மை
உன் சட்டையில் என் கண்ணீர் கலந்த கண் மை!

- அக்ஷயா ஷேகர்



# இவ்வார ராசி பலன்கள் (16.08.2020 - 22.08.2020)



வித்வ கலாபூஷணம்
ஜோதிட திலகம்
சிவஸ்ரீ
வெங்கட சுப்ரமணிய
குருக்கள்

மேஷம்

மேஷ இராசி அன்பர்களே!
எதையும் துணிவுடன் செயலாற்றும் மேஷ இராசியினருக்கு இவ்வாரம் சிறப்பான வாரமாகும். பணவரவு, செய்யும் தொழிலில் அதிக இலாபம், முன்னேற்ற மடைவீர்கள். கை மேல் பலன் கிட்டும். குடும்பத்தாருடன் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். உடல்நலம் திருப்தி தரும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் நன்மையடைவீர்கள். குடும்பத்தில் மங்கள நிகழ்வுகள் இடம்பெறும். சுற்றுலா, தல யாத்திரைகள் மேற்கொள்வீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் மகிழ்ச்சியைத் தரும். வியாபாரிகளுக்கு நன்மை கிட்டும்.
**அதிர்ஷ்ட எண் - 04, 06**
**அதிர்ஷ்ட நாள் - திங்கள்**

ரிஷபம்

இடப இராசி அன்பர்களே!
எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயற்படும் உங்களுக்கு இவ்வாரம் சமபலனைத் தரும். பொதுவாக எடுக்கும் கருமங்களில் அவதானமும் கவனமும் தேவை. மற்றவர்கள் விடயங்களில் தலையிடுவதை தவிர்த்துக்கொள்ளவும். கையிலுள்ள பொருட்களில் கவனம் தேவை. தூர பிரயாணங்களை தவிர்த்துக்கொள்வது நன்மை தரும். வாகனம் செலுத்துவோர் அவதானத்தைக் கடைப்பிடிப்பது மிக மிக அவசியம். மாணவருக்கு கல்வியில் கூடிய அக்கறை தேவை. வியாபாரிகள் சம இலாபமடைவார்கள்.
**அதிர்ஷ்ட எண் - 03, 21**
**அதிர்ஷ்ட நாள் - புதன்**

மிதுனம்

மிதுன இராசி அன்பர்களே!
எதையும் சமாளித்து செயலாற்றும் உங்களுக்கு இவ்வாரம் நற்பலன்கள் கிட்டும். உடல்நிலை உற்சாகத்தை தரும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகமாகும். பண வருவாய் சிறப்பாக அமையும். கொடுக்கல் வாங்கல் விடயங்கள் சீராக அமையும். உத்தியோகத்தர்கள் தொழில் வளர்ச்சி அடைவார்கள். வர்த்தகத்துறையினர் வங்கி மூலமான ஆதரவால் புதிய முதலீடுகளை மேற்கொள்வார்கள். திருமணத்தை எதிர்நோக்கி உள்ளவர்களுக்கு மனம்போல் மங்கல கருமம் அமையும். நண்பர்களால் உதவிகள் கிட்டும். பெரியோரின் நல்லாசிகள் கிடைக்கப்பெறும். மாணவர்களுக்கு கல்வித்துறையில் நன்மதிப்பும் முன்னேற்றமும் தோன்றும்.
**அதிர்ஷ்ட எண் - 21, 24**
**அதிர்ஷ்ட நாள் - செவ்வாய்**

கடகம்

கடக இராசி அன்பர்களே!
எதையும் துடிப்புடன் செயலாற்றும் உங்களுக்கு இவ்வாரம் மத்திம பலன்களே இடம்பெறும். உடல் ஆரோக்கியம் சமநிலையில் இருக்கும். குடும்பத்தில் சுமுகநிலை உருவாகும். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் அவதானம் தேவை. பொருளாதாரத் தேவை பூர்த்திசெய்யக்கூடியதாக இருக்கும். தொழிலை எதிர்பார்த்துள்ளோர் படிப்படியாக நன்மையடைவார்கள். வர்த்தகத்துறையினருக்கு வருமானம் மந்தகதியில் இருக்கும். வாடிக்கையாளரின் ஆதரவின்மையால் வருமானத்தை ஈட்டுவது கடினமாக இருக்கும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் மிக அவதானமாக நடந்துகொள்வது நன்மை தரும். மாணவர்கள் கல்வியில் மிகுந்த அக்கறை கொள்வது நன்மையாகும்.
**அதிர்ஷ்ட எண் - 07, 09**
**அதிர்ஷ்ட நாள் - புதன்**

சிம்மம்

சிம்ம இராசி அன்பர்களே!
கருணை உள்ளம் கொண்ட உங்களுக்கு இவ்வாரம் குரு திருவருளுடன் கணிசமான பலனை எதிர்பார்க்கலாம். தங்கள் பண வருவாயில் மந்தநிலை காணப்படும். மனதில் சஞ்சல நிலை ஏற்படும். நன்மையை செய்ய தீமையில் நிறைவேறும். புது முதலீடுகளை செய்வதில் கவனம் தேவை. வார்த்தைகளை அளந்து நிதானத்துடன் பேசுவது நன்மை தரும். தன் புத்தியுடன் யோசித்து செயற்படுவது நன்மையாகும். உடல்நிலையில் சில சில உபாதைகள் தோன்றும். கவனம் தேவை. குடும்பத்தில் அவ்வப்போது மனக்கசப்பு ஏற்பட்டு சுமுக நிலையைத் தரும். நண்பர்கள், உறவினர்களால் வீண் பழி ஏற்படும். இவ்வாரம் தங்கள் குல தெய்வ வழிபாடு செய்வதால் நன்மை கிட்டும். மாணவர்களுக்கு, வியாபாரிகளுக்கு, உத்தியோகத்தர்களுக்கு மந்த நிலை காணப்படும்.
**அதிர்ஷ்ட எண் - 15, 23**
**அதிர்ஷ்ட நாள் - ஞாயிறு**

கன்னி

கன்னி இராசி அன்பர்களே!
வீரம் மிக்க கன்னி இராசியினரே, குரு 5ஆம் இடத்திலும் சனி 4ஆம் இடத்திலும் சஞ்சரிப்பதால் இவ்வாரம் நற்பலனை எதிர்பார்க்கலாம். தூர தேசங்களிலிருந்து நற்செய்தியை எதிர்பார்க்கலாம். பிரிந்து சென்ற நண்பர்கள், உறவினர்கள் உன்றுசேர வாய்ப்பு காணப்படுகின்றது.எதிர்பார்த்திருந்த அசையும், அசையா சொத்துகள் வந்து சேரும். கணவன் மனைவியிடையே இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சியை தரும். கலைஞர்கள் நல்ல வருவாய் பெறுவார்கள். திருமணத்தை எதிர்நோக்கியுள்ளோர்க்கு தமது மனம் போல் அமைய வாய்ப்புண்டு. வியாபாரிகள் புது மமுதலீடுகளை செய்து அதிக இலாபம் பெறுவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள்.
**அதிர்ஷ்ட எண் - 23, 13**
**அதிர்ஷ்ட நாள் - சனி**

துலாம்

துலா இராசி அன்பர்களே!
எதிலும் முன்னிலை வகிக்கும் துலா ராசியினரே இவ்வாரம் தங்கள் எண்ணம்போல் மனம் நினைத்ததை நடத்தி முடிக்கும் வண்ணம் கைகூடிவரும். பிள்ளைகள் வழியில் நல்ல மாற்றங்களை எதிர்பார்க்கலாம். பொருளாதார பற்றாக்குறை அகலும். எதிர்பாராமல் மனதுக்கு பிடித்தவரை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். அத்துடன், தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். முடிந்தவரை முன்கோபத்தை குறைத்துக்கொள்வது நன்மை தரும். புதுமனை, புது வாகனம், நிலம், பொன், ஆபரணம் போன்றவற்றுக்கு முதலீடு செய்வீர்கள். கணவன் மனைவியிடத்து சுமுக நிலை உருவாகும். அரசியல்துறையில் உள்ளவர்கள் நன்மையடைவார்கள். மாணவர்களின் கல்வி சிறப்புடன் காணப்படும்.
**அதிர்ஷ்ட எண் - 13, 21**
**அதிர்ஷ்ட நாள் - திங்கள், புதன்**

விருச்சிகம்

விருச்சிக இராசி அன்பர்களே!
நல்ல பேச்சுத்திறன் கொண்ட உங்களுக்கு இவ்வாரம் தொழில் முன்னேற்றம் ஏற்படுவதுடன், பணவரவு கஷ்டங்களிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் திட்டமிட்ட யாவும் கைகூடும். அரசியலில் உள்ளவர்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் காரியங்கள் நிறைவேறும். மேலதிகாரிகளின் உதவிகள் தக்க தருணத்தில் கிடைக்கும். திருமணமாக உள்ளவர்களுக்கு சுப காரியங்கள் தடையின்றி நிறைவேறும். தூர தேசத்தில் உள்ளவர்களிடமிருந்து நல்ல செய்திகள், உதவிகள் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த மந்தநிலை மாறும். வியாபாரிகள் அமோக இலாபமடைவார்கள்.
**அதிர்ஷ்ட எண் - 31, 21**
**அதிர்ஷ்ட நாள் - திங்கள்**

தனுசு

தனுசு இராசி அன்பர்களே!
எதிலும் போட்டிபோட்டு வெற்றிகொள்ளும் உங்களுக்கு இவ்வாரம் சமபலனை தரவுள்ளது. செய்யும் தொழிலில் சில கஷ்டங்கள் தோன்றும். இதனால் பணநெருக்கடி பற்றாக்குறை ஏற்படும். நீங்கள் எடுக்கும் எல்லா கருமங்களும் தாமதத்தைக் கொடுக்கும். பொறுமையே மிக முக்கியமாகும். கோபத்தை அடக்குவது நன்மை தரும். புது முயற்சிகளை தவிர்த்துக்கொள்ளவும். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் அவதானம் தேவை. உடல்நலத்தில் கவனம் தேவை. தூர பிரயாணங்களை தவிர்ப்பது நன்மை தரும். நண்பர்களுடன் நெருங்கி பழகுவதை தவிர்க்கவும். குல வழிபாடு செய்யவும். மாணவர்கள் கல்வியில் அக்கறை கொள்ளவும்.
**அதிர்ஷ்ட எண் - 18, 14**
**அதிர்ஷ்ட நாள் - வியாழன்**

மகரம்

மகர இராசி அன்பர்களே!
எதையும் சாதிக்கத் துடிக்கும் உங்களுக்கு இவ்வாரம் மகிழ்ச்சியைத் தரும் வாரமாகும். இதுவரை இருந்துவந்த மனக் கஷ்டங்கள், மன துக்கங்கள் நீங்கும். குடும்பத்தில் சுப விடயங்கள் நிறைவேறும். அரசியலில் ஈடுபட்டோருக்கு புதிய பதவிகள் அல்லது உயர்ச்சி உண்டாக வாய்ப்புண்டு. தொழிலதிபர்கள் அதிக இலாபம் ஈட்டுவார்கள். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு இதுவரை இருந்துவந்த கஷ்டங்கள் குறைந்து நன்மையைத் தரும். புது முதலீடு செய்வோருக்கு நன்மையும் வெற்றியும் தரும். புது பொருட்கள் சேர வாய்ப்புண்டு. காதலருக்கு மகிழ்ச்சியைத் தரும். பிரிந்த குடும்பம் ஒன்றுசேரும். கணவன், மனைவி உறவுநிலை சுகம் தரும். மாணவர்கள் கல்வியில் பாராட்டுகளைப் பெறுவார்கள். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவார்கள்.
**அதிர்ஷ்ட எண் - 04, 06,07**
**அதிர்ஷ்ட நாள் - ஞாயிறு**

கும்பம்

கும்ப இராசி அன்பர்களே!
அனைவரையும் தம் வசமாக்கிக் கொள்ளும் கும்ப இராசியினரே, இவ்வாரம் தொழில் நிலையில் மாற்றங்கள் ஏற்படும். தொழில் மாற்றம், இடமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. எடுக்கும் காரியங்கள் சீராக அமையும். மேலதிகாரிகளுடன் பகைத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் வீண் செலவுகளை கட்டுப்படுத்திக்கொள்வது நன்மை தரும். சுயதொழில் புரிவோர் இலாபம் அடைவார்கள். வங்கி நிலவரம் சீராக அமையும். அரசியலில் உள்ளவர்கள் மிக நிதானத்துடன் செயலாற்றுவது நன்மை தரும். மாணவர்களுக்கு கல்வி நிலை சீராக அமையும். வியாபாரிகள் தகுந்த இலாபம் அடைவார்கள்.
**அதிர்ஷ்ட எண் - 03, 07**
**அதிர்ஷ்ட நாள் - வியாழன், புதன்**

மீனம்

மீன இராசி அன்பர்களே!
எதிலும் முன்னிலை வகிக்கும் மீன இராசியினர் இவ்வாரம் சமபலனை எதிர்பார்க்கலாம். எவ்விடயத்திலும் அவதானத்துடன் கழிப்பது நன்மை தரும். எதிர்பார்த்திருந்த விடயங்கள் யாவும் தாமதத்தைக் கொடுக்கும். காரியங்களை பிறரிடம் கொடுப்பதில் அவதானம் தேவை. மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நன்மை தரும். பணவரவு சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த இலாபம் கிடைப்பது மந்தமாக காணப்படும். சுயதொழில் செய்வோர் சம இலாபம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை.
**அதிர்ஷ்ட எண் - 04, 06, 03**
**அதிர்ஷ்ட நாள் - திங்கள்**



# 11ஆவது தடவை இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்ற பேயர்ன் முனிச்

## இறுதிப்போட்டியில் பேயர்ன் முனிச் – பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் மோதல்

E சம்பியன்ஸ் லீக் காற்பந்து தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பேயர்ன் முனிச் கழகம் லையன் கழகத்தை வீழ்த்தி 11ஆவது தடவையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

ஐரோப்பிய அணிகளுக்கிடையிலான குறித்த காற்பந்து தொடரானது போர்த்துக்கல்லில் நடைபெற்றுவருகிறது. அனைத்து தகுதிப் போட்டிகளும் நிறைவுபெற்றுள்ள நிலையில், சம்பியனை தீர்மானிப்பதற்காக இறுதிப்போட்டி மாத்திரம் எஞ்சியுள்ளது.

இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஐந்து முறை சம்பியனான ஜேர்மனியைச் சேர்ந்த பேயர்ன் முனிச் கழகம் 3-0 என்ற கோல்கள் கணக்கில் பிரான்ஸின் லையன் கழகத்தை வீழ்த்தி 11ஆவது தடவையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

பேயர்ன் முனிச் கழகம் சார்பாக செர்ஜ் ஞாப்ரி 18ஆவது மற்றும் 33 ஆவது நிமிடங்களில் இரு கோல்களையும், ரொபர்ட் லெவன்டவ்ஸ்கி இறுதியில் 88ஆவது நிமிடத்திலும் கோல் பெற்றனர். பேயர்ன் முனிச் கழகமானது இறுதியாக விளையாடிய 29 போட்டிகளில் தோல்வியை சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

E சம்பியன்ஸ் லீக் காற்பந்து தொடரின் இறுதிப்போட்டி திங்கட்கிழமை நடைபெறவுள்ள நிலையில், பேயர்ன் முனிச் - பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி) கழகங்கள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

## உலகக்கிண்ணத்தை வென்றுதந்த தருணம் எப்போதும் நிலைத்திருக்கும்

### - டோனிக்கு மோடி கடிதம்



2011 உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் சிக்ஸர் விளாசி உலகக்கிண்ணத்தை வென்றுதந்த தருணம் இந்தியர்களின் மனதில் எப்போதும் நிலைத்திருக்கும் - என ஓய்வுபெற்ற இந்திய கிரிக்கெட் வீரர் எம்.எஸ். டோனிக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

டோனியின் ஓய்வு அறிவிப்பைத் தொடர்ந்து, அவரின் கிரிக்கெட் வாழ்க்கைக்கும், எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமையவேண்டும் எனவும் அனைத்து தரப்பினர்களும் வாழ்த்துகளைத் தெரிவித்துவருகின்றனர். இந்நிலையில், டோனியை புகழ்ந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடிதமொன்று எழுதியுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

“சிறிய நகரத்தில் பிறந்து தேசிய அடையாளமாக மாறியவர் டோனி. வெற்றியோ தோல்வியோ எந்த நேரத்திலும் அமைதியை கடைப்பிடித்து சிறந்து விளங்கியவர் டோனி. தாங்கள் 15 ஆண்டுகளில் இந்திய அணிக்கு மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளீர்கள். 2011 உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த தருணம் இந்திய மக்களால் என்றும் மறக்கப்படாது.“

“இறுதிப் போட்டியில் சிக்ஸர் விளாசி உலகக்கிண்ணத்தை வென்று தந்த தருணம் இந்தியர்களின் மனதில் எப்போதும் நிலைத்திருக்கும். இராணுவத்தில் கௌரவ பதவியில் பணியாற்றியபோது டோனி மகிழ்ச்சி கரமாக இருந்தார். தங்களின் ஓய்வு 130 கோடி இந்திய மக்களையும் வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. தங்களின் எதிர்கால வாழ்க்கை சிறப் பானதாக அமைய எனது வாழ்த்துகள்’’ என குறிப் பிடப்பட்டுள் ளது.

## FFSL தொடருக்கான காலிறுதிப் போட்டி மோதல் அறிவிப்பு



இலங்கை காற்பந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் எவ்.எவ்.எஸ்.எல். தலைவர் கிண்ணத் தொடரின் அனைத்து குழுநிலை போட்டிகளிலும் நிறைவுபெற்றுள்ள நிலையில், காலிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்ற அணிகளின் அடிப்படையில் காலிறுதிப் போட்டியில் மோதும் அணிகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ள முதலாவது காலிறுதிப் போட்டியில் குழு ‘ஏ’ யில் முதலிடம் பெற்ற ஜாவா லேன் - குழு ‘சி’யில் முதலிடம் பெற்ற டிபண்டர்ஸ் கழகத்தை எதிர்கொள்ளவுள்ளது. அன்றைய தினம் நடைபெறவுள்ள இரண்டாவது காலிறுதிப் போட்டியில் குழு ‘ஈ’யில் முதலிடம் பெற்ற ப்ள10 ஈகில்ஸ் - நியு ஸ்டார் கழகத்தை எதிர்கொள்கிறது.

திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ள மூன்றாவது காலிறுதிப் போட்டியில் கொழும்பு காற்பந்து கழகம் - பொலிஸ் கழகத்தை எதிர்கொள்கிறது. அன்றைய தினம் நடைபெறும் இறுதி காலிறுதிப் போட்டியில் ரெட் ஸ்டார் கழகம் - செரண்டிப் கழகத்தை எதிர்கொள்கிறது.

காலிறுதிப் போட்டிகளின் வெற்றியாளரைக்கொண்டு அரையிறுதிப் போட்டிகள் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. சம்பியனை தெரிவுசெய்யும் இறுதிப் போட்டி ஓகஸ்ட் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது.



## இரு தென்னாபிரிக்க வீரர்களுக்கு கொரோனா உறுதி

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி வீரர்களுக்கு நடத்தப்பட்ட கொரோனா வைரஸ் பரிசோதனையில் இரு வீரர் களுக்கு தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தகவல் வெளியிட்டுள்ளது. ஆனால், குறித்த இரு வீரர்களும் யார் என்ற தகவலை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வெளியிடவில்லை.

எதிர்கால கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பதற்காக நடைபெற வுள்ள பயிற்சி முகாமுக்காக வீரர்கள், அணியின் உதவியாளர்கள், பயிற்சியாளர் உள்ளிட்ட 50 பேருக்கு கொரோனா வைரஸ் பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் இரு வீரர்களுக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

குறித்த இரு வீரர்களும் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டு, சிகிச்சைபெற்று வருவதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. மேலும், இவர்கள் காணொளி மூலமாக பயிற்சிகளில் பங்கேற்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, குறித்த இரு வீரர்களுக்கு மாற்றாக எந்த வீரரும் பயிற்சி முகாமில் இணைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த பயிற்சி முகாமில் எய்டன் மார்க்ரம், அண்டில் பெலுக் வேயோ, அன்ட்ரிச் நார்ட்ஜே, ரீஸா ஹென்ட்ரிக்ஸ், ஜோர்ன் பார்டியுன், டேர்ன் டுபாவிலன், டேவிட் மில்லர், டீன் எல்கர், டுவைன் பிரிடோரியஸ், ஜோர்ஜ் லிண்டே, கிளின்டன் ஸ்டூர்மேன், ஹென்ரிச் கிளாஸன், ஜானாமேன் மலான், ஜொன் ஜொன் ஸ்மட், ஜூனியர் டலா, காகிஸோ ரபாடா, கீகன் பீட்டர்ஸன், கேஸவ் மகராஜ், கைல் வெர்ரியன்னி, லுங்கி இங்கிடி, லுதோ சிபாம்லா, பீட்டல் மலான், பிட் வான் பிஜான், குயின்டன் டீ கொக், ரைஸ் வேன் டர் டூசன், ரீஸா ஹென்ட்ரிக்ஸ், ரூடி செகன்ட், செனருன் முத்துசாமி, சிசான்டா மகாலா, தப்ரிஸ் ஷம்ஸி, தெம்பா பவுமா, ஜுபார் ஹம்ஸா ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.




## ஐக்கிய அரபு இராச்சியம் பறந்தார் மஹேல



13ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடரானது எதிர்வரும் 19ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகவுள்ள நிலையில், தொடரில் பங்கேற்பதற்காக நடப்பு சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளரும், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவருமான மஹேல ஜயவர்தன வெள்ளிக்கிழமை ஐக்கிய அரபு இராச்சியம் நோக்கி புறப்பட்டார்.

2020 மார்ச் மாதம் இந்தியாவின் பல்வேறு மைதானங்களில் நடைபெறவிருந்த இந்தியன் பிரிமியர் லீக் தொடரானது கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், ஒக்டோபரில் நடைபெறவிருந்த ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையானது இந்தியன் பிரிமியர் லீக் தொடரை நடத்த ஏற்பாடு செய்தது.

ஆனால், இந்தியாவில் கொரோனா வைரஸ் குறைவடையாத நிலையில், தொடரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தொடரானது அடுத்த மாதம் 19ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்பதற்காக அனைத்து அணிகளும் ஐக்கிய அரபு இராச்சியம் நோக்கி படையெடுக்கின்ற நிலையில் ரோஹிட் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி நேற்று ஐக்கிய அரபு இராச்சியம் நோக்கி புறப்பட்டது. இதில் மூன்றாவது வருடமாக மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவரும் இலங் கையின் மஹேல ஜயவர்தனவும் இணைந்து பயணித் தார். மஹேல ஜயவர்தனவின் பயிற்சியின் கீழ் மும்பை இந்தியன்ஸ் அணி இதுவரை இரண்டு முறைகள் சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## DREAM 11இற்கு எதிர்ப்பு:

### பி.சி.சி.ஐ. மறுபரிசீலனை செய்யவேண்டுமென கோரிக்கை

இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் பிரதான அனுசரணையாளராக செயற்பட்டுவந்த சீனாவைச் சேர்ந்த தொலைபேசி நிறுவனமான ‘‘விவோ’ நிறுவனம் இந்திய – சீன முறுகல் நிலை காரணமாக அனு சரணையிலிருந்து விலகிய நிலையில், அடுத்த மூன்று ஆண்டு களுக்கான உரிமத்தை இந்தியாவைச் சேர்ந்த ‘ட்ரீம் 11’ நிறுவனம் சராசரியாக ஆண்டுக்கு 234 கோடி ரூபா (இந்திய ரூபா) என்ற தொகைக்கு பெற்றது.

இந்நிலையில், தற்போதைய அனு சரணையாளரான ‘ட்ரீம் 11’ நிறுவனத்தில் 20 முதல் 25 சதவீத பங்கு களை சீன விளையாட்டு நிறுவனமான ‘டென்சென்ட்’ வைத்திருக்கும் தகவல் வெளியாகியுள்ளது. இதைத் தொடர்ந்து இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் பிரதான அனுசரணையாளராக ‘ட்ரீம் 11’ தொடர்வதற்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பீகார் கிரிக்கெட் சங்கத் தின் செயலாளர் ஆதித்ய வர்மா கூறு கையில், “இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் முக்கிய அனுசரணையாளராக ‘ட்ரீம் 11’ தொடர்வது பிரதமர் மோடியின் கனவுத் திட்டங்களுக்கு எதிரானது. எனவே, தனது முடிவை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மறுபரிசீலனை செய்யவேண்டும்’’ - என கோரியுள்ளார்.




13ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் மூடிய மைதானத்தில் நடைபெறவுள்ள நிலையில், குறித்த தொடரில் பங்கேற்கும் அணிகளில் இரு அணிகளான கிங்ஸ் இலவன் பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியினர் கொரோனா வைரஸ் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்குட்பட்டு வியாழக்கிழமை இரவு புதுடில்லியிலிருந்து ஐக்கிய அரபு இராச்சியம் நோக்கி புறப்பட்டனர்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# பொக்கெட் பேனா

## யார் பிரஜை



நீங்கள் இந்த நாட்டின் பிரஜையா? என்று ஒரு கேள்வியை உங்களிடம் கேட்டால், நீங்கள் எவ்வித தயக்கமும் இன்றி ஆம்! நான் இந்த நாட்டின் பிரஜைதான் என்பீர்கள். எந்த அடிப்படையில் அவ்வாறு சொல்கின்றீர்கள் எனக்கேட்டதும், நான் இந்த நாட்டில் பிறந்தவன், எனக்கும் பிறப்புச் சான்றிதழ் உண்டு, தேசிய அடையாள அட்டை உண்டு, எனது பரம்பரையினர் இங்கு அதிகம் குடியிருக்கின்றனர், நான் வாக்களிக்கின்றேன், வரி செலுத்துகின்றேன் என பல்வேறு வகையிலும் நீங்கள் இந்த நாட்டின் பிரஜை என்பதை உறுதிப்படுத்த முயற்சி செய்வீர்கள். உங்கள் கருத்துகளில் பிழையில்லை. ஆனால், ஒரு நாட்டின் பிரஜையாக அல்லது குடிமகனாக உங்கள் பொறுப்புகளையும் கடமைகளையும் சரியாக மேற்கொள்கின்றீர்களா? ஆம்! நாம் சரியான முறையில் வரி செலுத்துகின்றோம். அத்துடன், மறைமுக வரியும் அறவிடப்படுகின்றது. நாங்கள் நியாயமானவர்கள், மற்றவர்களுடன் பிரச்சினைகளுக்கு போவதில்லை, ஊர் வம்புகளுக்கு நாங்கள் போவதில்லை என்பீர்கள். நீங்கள் உண்மையான பிரஜையா? என கேட்டால், ஆம்! நாம் உண்மையானவர்கள் அரசாங்கத்திற்கு நம்பிக்கையாக இருக்கின்றோம். நானும் எனது வேலையுமென இடையூறுகள் இன்றி வாழ்கின்றோம். என்று பதில் தருவீர்கள். உங்களைப்போன்ற நடத்தையும் எண்ணமும் உடைய பலரையும் இங்கு காண்கின்றோம்.

மேற்படி கேள்விகளுக்கு நீங்கள் வழங்கிய பதில் என்னவோ சட்டரீதியான வரையறைகளுக்கமைய உண்மைதான். ஆனால், தத்துவார்த்த அடிப்படையில் அது ஏற்க முடியாது என்பது எனது கருத்து. உண்மையான பிரஜை எப்போதும் பொது நலனாக சிந்திப்பவராக இருப்பார். ஆட்சியில் தம்மை பங்களிக்க செய்து கொள்வார், வெறுமனே பார்வையாளராக மாத்திரம் இருக்காது பங்காளராக செயற்படுவார். சமூக உரிமைகளுக்காக குரல் கொடுப்பார், அரசாங்கத்தை எதிர்த்துக் கேள்வி கேட்பார், நாட்டை சூறையாடும் அரசாங்கங்களுக்கு எதிராக குரல் கொடுப்பார். அரச சொத்துக்களை கொள்ளையடிக்கமாட்டார், எவர் எப்படி போனாலும் எனக்கென்ன என்று வேடிக்கை பார்க்கமாட்டார். இப்படியானவர்களே உண்மையான பிரஜைகள் என வரையறை செய்கின்றேன். இதை கூறியதும் அதற்குத்தானா பல அரச, அரசசாரா கண்காணிப்பு நிறுவனங்களும், ஊடகங்களும் செயற்படுகின்றன. ஆக அவர்கள் அதை செய்வர்கள், நம்ம வேலையை நாம் பார்போம் என்றும் சிலர் தெரிவிப்பர்.

இன்று உண்மையான பிரஜைகள் அரச விரோதிகளாக சித்திரிக்கப்படுகின்றனர். இதில் மறைந்துள்ள உண்மை என்னவென்றால், மக்கள் பார்வையாளர்களாக மட்டும் இருப்பதை அரசு உட்பட பலரும் விரும்புகின்றனர் என்பதே நம்மில் பலரும் அரசு மற்றும் அரசாங்கம் என்பவற்றிற்கிடையிலான வேறுபாட்டை சரியான முறையில் அறிவதில்லை. அரசு என்பது நாமும் நம் தேசமும் என்பது பலர் அறிவதில்லை. அரசு என்பது நம் எல்லைக்கு அப்பாற்பட்டதென பலரும் சிந்திப்பதை இங்கு சாதாரணமாக அறியமுடிகின்றது. உண்மையான பிரஜை எப்போதும் அரசுக்குத் துரோகம் செய்யமாட்டான். அப்படி செய்தால் தன் வீட்டுக்கு தானே தீ வைப்பது போலாகிவிடும்.

அது மட்டுமன்றி ஏனையோரையும் தீங்கிழைக்க விடமாட்டான். அது ஆட்சிசெய்யும் அரசாங்கமாக இருந்தாலும் அவன் தன் நிலைமாறமாட்டான். தான் ஆதரவு வழங்கிய ஆட்சியாளருக்கு எதிராகவும் செயற்படுவான். நாட்டுக்கு உண்மையுள்ள பிரஜையை நாம் நாட்டுப்பற்றுள்ளவர் என்றும் அழைக்கின்றோம். மேற்படி கருதுகோள்களுக்கமைய எமது நாட்டில் உண்மையான பிரஜைகளின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணக்கூடியதாகவே உள்ளதெனும் உண்மையை இப்போது நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். நாம் நாட்டில் உண்மையான பிரஜை ஒருவராராக எமது கடமையை செய்ய முற்பட்டால் எமக்கு இந்த சமூகம் குழப்பக்காரன், அரச விரோதி, சூழ்ச்சிக்காரன் மற்றும் என்.ஜீ.ஓ. காரன், ஜே.வி.பி. காரன் என பட்டமளிக்கும். காரணம், தன் கடமையை என்னவென்று தான் அறியாது வெறுமனே பிறந்தோம் வாழ்ந்தோம் என்றிருப்பதால் அப்படி சிந்தித்திருக்கக் கூடும்.

தேர்தல் நிறைவுற்றது. புதிய அரசாங்கமும் ஆட்சியமைத்துள்ளது. பாரிய மாற்றங்கள் இடம்பெறும் என்பது பலரது நம்பிக்கை. என்னதான் புதிய அரசாங்கத்தின் ஆட்சி இடம்பெற்றாலும் பிரஜைகள் உண்மையான பிரஜையாக மாறாதவரை இங்கு ஏதுவும் பெரிதாக மாறப்போதில்லை. நடந்த, நடக்கவிருக்கும் ஊழல் மோசடிகளை நாம் பெரிதாக கண்டுகொள்வதில்லை. காரணம், அரசாங்க பணம்தானே அது என் பணம் அல்ல என்ற சிந்தனை. அரச பணம் என்றாலும் அது எம்மிடமிருந்து அறவிடப்படும் வரிப்பணம் என்பதை நம்மில் பலர் அறிவதில்லை. அது நமது பணம் என்பதை தொடர்ச்சியாக உங்களுக்கு நினைவூட்ட வேண்டியுள்ளது.

ஆட்சி, ஊழல் மோசடிகள் குறித்து பிரஜைகள் எப்போது கேள்வி எழுப்ப ஆரம்பிக்கின்றோமோ, அன்றுதான் உண்மையான பிரஜைகளை காணமுடியும். எல்லா பிரஜைகளும் ஏன் உண்மையான பிரஜைகளாக உருவாகுவதில்லை? என்ற கேள்வி நம் மத்தியில் பலமாகவே உள்ளது. அனைத்து பிரஜைகளையும் உண்மையான பிரஜைகளாக உருவாக்குவது எளிதான விடயமல்ல. அது அவனுள்ளே இயல்பாக வரவேண்டிய உணர்வாகும். ஒவ்வொரு மனிதனுள்ளும் ஓர் உண்மையான பிரஜை உள்ளான். ஆனால், அவன் உறங்கிக் கொண்டிருக்கிறான். சில நேரங்களில் அவனது சுயநலத்திற்காக பொய்யாக உறங்குவதுமுண்டு. சில பிரஜைகள் வாய்பேச்சில் காட்டும் வீரத்தை செயலில் காட்டுவதில்லை. சில நேரங்களில் பிரஜையின் உரிமை அதிகாரங்களை அவர் அறிந்திருப்பதில்லை. இனி எவரேனும் ஒருவர் நீங்கள் ஒரு பிரஜையா என கேட்கக்கூடும். அல்லது நீங்களே உங்களிடம் கேட்டுப் பாருங்கள். பதில் சற்று வித்தியாசமானதாக இருக்கும்.

இது வரை காலம் இந்த சமூகத்திற்கு நான் என்ன நன்மை செய்துள்ளேன் என்பதை சிந்தித்தோமேயானால் அநேகமானோருக்கு பதில் பூச்சியமாக இருக்கக்கூடும். சுயநலமாக வாழும் பிரஜைகள் மத்தியில் உண்மையான பிரஜைகளின் செயற்பாடுகள் வேடிக்கையாகவே காணப்படுகின்றன. இன்றும் நாம் உண்மையான பிரஜையின் கடமைப் பொறுப்புகளை சரியாக செய்யவில்லை என்பதே நிதர்சனம். நாம் மாறினால் உலகம் மாறும். சுயநலம் தவிர்ப்போம் பொதுநலம் காப்போம்.

**எழுத்தாளர்களே! 'தமிழன்' பத்திரிகையின் ஊர்வலம் பக்கத்துக்கு உங்கள் ஊர்களைப் பற்றியதான சுவாரஸ்யமான தகவல்களை ஒரு பத்தியாக எழுதி எங்களோடு பகிர்ந்துகொள்ள உங்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்கிறான் 'தமிழன்'. நீங்கள் அனுப்பும் பத்தி 300 - 400 சொற்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். உங்களது பத்தியை தட்டச்சு (டைப்) செய்து அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி : thamilanweekly@gmail.com மேலதிக தொடர்புகளுக்கு : 0115886187**

# நறுக்கென்று நாலு சொல்...

தமிழ்மணி தேசத்தின் கண் (மானா மக்கீன்)

## சிரிப்பினால் வாழலாம் பல காலம்

நாம் ஒரு நாளைக்கு எத்தனை தடவை வாய்விட்டுச் சிரிக்கிறோம்? குழந்தைகள் ஒரு நாளைக்கு 400 இற்கும் மேற்பட்ட தடவை சிரிக்கின்றார்களாம். ஆனால், பெற்றோர் வெறும் 12 தடவைகள் தான் சிரிக்கிறார்கள் என ஆய்வு கூறுகிறது. சிரிப்பதால் உடலில் உள்ள தசைகளில் அசைவேற்பட்டு, உடலிலும் மனதிலும் ஏற்பட்டுள்ள அழுத்தம் குறைகிறது. இதனால் மனதிலிருந்து கவலைகள் வெளியேறி புரிந்துணர்வு கிடைக்கிறது.

சிரிப்பதால் ஏற்படும் நன்மைகள் தெரிந்திருந்தும். அதை வெளிகாட்டுவதில் பலருக்குத் தயக்கம் உண்டு. வீடு, அலுவலகம், வீதிகளில் நாம் தினமும் சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்வின்போது இதுபோன்ற பலரை காண்பதுண்டு. அப்போது அவர்களைப் பார்த்து சிலர், சிடுமூஞ்சி என்று கூறுவதுண்டு. வீடு, அலுவலகம் என நாம் இருக்கும் இடத்தில் மன அழுத்தத்துடன் [ஸ்டிரஸ்] இருப்பதை விட்டு, சிரிப்பை வெளிப்படுத்த வேண்டிய வேளையில் பணிக்குப் பாதிப்பில்லாமல் சிரிக்கலாம். இதனால், கவலைகள் நீங்கி, புத்துணர்வு கிடைக்கும். சிரிப்பதால் எதனையும் நாம் இழக்கப்போவதில்லை.

## தனிநாயகம் அடிகளார் நினைவில்

தமிழகத்தில் தமிழ் செழிக்கப் பாடுபடுவதில் முன்னிற்கும் திருநெல்வேலிச் சீமையிலே மாநகராட்சி மன்றம் அமைந்துள்ள இடத்திற்கு எதிரே பொருட் காட்சித்திடலில் நம் சொந்தம் தவத்திரு தனிநாயகம் அடிகளாருக்கு ஒரு நினைவு தூண்!

தமிழுக்குப் பெருமைசேர்த்து, தமிழ்த் தூதரகப் போற்றப்படும் அன்னாருக்கு அற்புதமான காரியத்தைச் செய்து விட்டார்கள் திருநெல்வேலி மக்கள். அவர்கள் செய்தது தமிழகத்திற்கே பெருமை. நிகழ்வு நடந்த நாள் 2014 ஜனவரி 30. இது தான் வரலாறு

உலகில் முதலில் மது ஒழிப்பை செயல்படுத்தியது நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள்.

இந்தியாவில் முதலில் மது விலக்கை அமுல்படுத்தியவர் மாவீரன் திப்பு சுல்தான்.

கேரளாவில் பெண்கள் மார்பை மறைக்க மேல் உடை அணியும் பழக்கத்தை உண்டாக்கியவரும் அவரே!

அல்ஜிப்ரா எனப்படும் கடினமான கணக்கியலை, அரபு விஞ்ஞானி [கி.பி.780-850] கண்டுபிடிக்கவில்லையென்றால் நாம் பெற்றிருக்கும் இன்றைய கணினி இருக்காது.

அமெரிக்காவில் நடந்த கணினி மாநாட்டில் HP Computers, CEO Ms. Carly Florina சபையினருக்குச் சொன்னது.

## 'பெனி' எனும் சிறுவன்

அல்பேனிய எழுத்தாளர் கிகோ புளுசி எழுதி, தமிழில் யூமா வாசுகி வழங்கிய நாவல் 'பெனி எனும் சிறுவன்'. குழந்தைகளின் உலகத்தை மிகத் துல்லியமாக கவித்துவத்துடன் விவரிக்கிறது. பெனி எனும் சிறுவனை முன்வைத்து குழந்தைகளின் ஆளுமை பற்றிய சிந்தனையை யதார்த்தமாக விவரிக்கிறது. பெற்றோர்களிடமிருந்து அவர்களுக்கு திணிக்கப்படும் கருத்துகள். கட்டுப்பாடுகள் சிறாரிடத்தில் எத்தகைய பாதிப்புகளை உருவாக்கும் என்பதற்கான சமூக ஆவணமாகவும் அது விளங்குகிறது. குழந்தைகள் எதையும் அச்சமற்று அணுகுவது குறித்த பிற மனிதருடன் தோழமை கொள்வது குறித்த, ஓர் உரையாடல் நாவலாக!




## மின்சாரம் கண்டது இப்படி...

இத்தாலியில் 1786ஆம் ஆண்டு வாழ்ந்த உடல் இயல் வல்லுனர் லூகி கேல்வனி என்பவர் துண்டிக்கப்பட்ட ஒரு தவளையின் கால்கள் சில உலோகங்களின் மீது பட்டபோது துடித்ததை கண்டார்.

தவளை மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது என்று அறிவித்தார். அதே நாட்டைச் சேர்ந்த மற்றொரு விஞ்ஞானியான அலெக்சாண்ட்ரோ வோல்டா, "தவளையின் கால்கள் அல்ல. அவற்றின் மீது பட்ட உலோகங்களே மின்சாரத்தை உற்பத்தி செய்தன" என்று அறிந்துகொண்டார்.

இதற்கெல்லாம் முன்பாக, முதலாம் நூற்றாண்டில் டார்பிடோ என்ற மீன், மீனவர்களுக்கு மின் அதிர்ச்சியை உண்டாக்கும் என்பதை கண்டுபிடித்து இருந்தனர். விலாங்கு மீனும் மின் அதிர்ச்சியை ஏற்படுத்தும் என்பதும் முன்னரே அறியப்பட்டு இருந்தது.

தொடரும்...

# வரலாற்றில் வினோதமாக நடந்த தற்செயல் நிகழ்வுகள்

### 1. நெப்போலியன் மற்றும் ஹிட்லர்

மாவீரன் நெப்போலியன் மற்றும் சர்வாதிகாரி ஹிட்லர் ஆகிய இருவருக்கும் இடையே உள்ள சில விசித்திரமான எண்ணிக்கை அடிப்படையிலான தற்செயல் நிகழ்வே இப்பதிவாகும்.

நெப்போலியன் 1760 இல் பிறந்தார். ஹிட்லர் 1889 இல் பிறந்தார். இருவருக்கும் இடையேயான வயது வித்தியாசம் 129 ஆண்டுகள். 1804 இல் நெப்போலியன் ஆட்சிக்கு வந்தார். ஹிட்லர் 1933இல் ஆட்சிக்கு வந்தார். ஆட்சிக்கு வரும்போது இவர்களுக்கு இடையேயான கால வித்தியாசம் 129 ஆண்டுகள்.

நெப்போலியன் 1812 இல் வியன்னாவுக்கு வந்தார். இவர் தலைமையில் ரஷ்யா மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ஹிட்லர் 1941 இல் வியன்னாவுக்கு வந்தார். இவர் தலைமையிலும் ரஷ்யா மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அப்பொழுதும் இவர்களுக்கு இடையேயான கால வித்தியாசம் 129 ஆண்டுகள்.

நெப்போலியன் 1816 இல் தன் முழு பலத்தையும் இழந்து போரில் தோல்வி அடைந்தார். அதே போல் ஹிட்லர் 1945 இல் தன் முழு பலத்தையும் இழந்து போரில் தோல்வி அடைந்தார். இருவரும் தோல்வி அடைந்த போது கால வித்தியாசம் 129 ஆண்டுகள்.

44 வயதாக இருந்தபோது ஹிட்லர் மற்றும் நெப்போலியன் இருவரும் ஆட்சிக்கு வந்தனர். 52 வயதாக இருந்தபோது இருவரும் வியன்னாவுக்கு குடிபெயர்ந்து ரஷ்யாவைத் தாக்கினர். 56 வயதாக இருந்தபோது இருவரும் போரில் தோல்வியை தழுவினர். இத்தனை நிகழ்வுகள் இருவருக்கும் ஒத்து போனாலும் மேற்கூறிய அனைத்தும் தற்செயலாக அமைந்தவை என்பது வியக்கவைக்கிறது.



### 2. ஜோசப் பிக்லாப்பும் குழந்தையும்

அமெரிக்காவின் டெட்ராய்ட் என்ற இடத்தில் 1930 இல் ஜோசப் ஃபிக்லாக் என்ற நபருக்கு நடந்த ஒரு தற்செயல் நிகழ்வே இதுவாகும். ஃபிக்லாக் என்பவர் டெட்ராய்டு நகர தெருவில் நடந்து கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக அங்கே ஒரு வீட்டின் ஜன்னலின் வழியாக குழந்தை ஒன்று கீழே விழுந்தது. அதிர்ஷ்டவசமாக அந்த குழந்தை ஃபிக்லாக் மீது விழ அக்குழந்தையை லாவகமாக அவர் பிடித்துக்கொண்டமையால், குழந்தை விபத்திலிருந்து காயமின்றி ஃபிக்லாக்கால் காப்பற்றப்பட்டது.

ஒரு வருடம் கழித்து, அதே குழந்தை அதே ஜன்னலிலிருந்து விழுந்தது. இம்முறையும் அதே ஜோசப் ஃபிக்லாக்கால் ஜன்னலுக்கு அடியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது அக்குழந்தை காப்பாற்றப்பட்டது. இதில் கவனிக்கத்தக்க விடயம் என்னவென்றால் அக்குழந்தை கிட்டதட்ட 20 அடிக்கு மேலான உயரத்திலிருந்து கீழே விழுந்ததுடன், இருமுறையும் பிக்லாக்கால் உயிர் காப்பற்றப்பட்டது என்பதுவே ஆகும்.

### 3. வயலெட் ஜெசப் (Violet Jessop)

நடுக்கடலில் கப்பல் பழுதடைந்து விபத்துக்குள்ளாகும்போது அதிலிருந்து உயிர் பிழைப்பது என்பது இலகுவான காரியமல்ல. ஆனால், ஈரானைச் சேர்ந்த ஜெசப் என்ற பெண்மணி மூன்று முறை மாபெரும் கப்பல் விபத்தில் சிக்கி தற்செயலாக உயிர் பிழைத்துள்ளார்.

இதில் முதலாவது நிகழ்வு ஒயிட் ஸ்டார் லைன் என்ற நிறுவனத்திற்காக ஆர்.எம்.எஸ் ஒலிம்பிக் கப்பலில் செவிலியராக வேலை செய்யும்போது நடைபெற்றது. அதாவது ஆர்.எம்.எஸ். ஒலிம்பிக் கப்பல் அட்லாண்டிக் கடலில் பயணிகளுடன் 1911 ஆம் ஆண்டு செப்டெம்பர் 20ஆம் திகதி பயணித்துக் கொண்டிருந்தபோது எதிரே வந்த பிரிட்டிஷ் போர் கப்பலான எச்.எம்.எஸ் ஹவாக் உடன் மோதி பெரும் விபத்துக்குள்ளானது. கப்பல் மூழ்கும் முன்னரே திரும்பி கரைக்கு செலுத்தப்பட்டதால் பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. இந்த விபத்து தான் வயலெட் ஜெசப்பின் முதல் விபத்து. இரண்டாவதாக ஒரு வருடம் கழித்து 1912 இல் ஆர்.எம்.எஸ். டைட்டானிக் என்ற கப்பலில் செவிலியராக பணிபுரிந்த ஜெசப் அவர்கள் துரதிர்ஷ்ட வசமாக அக்கப்பல் அட்லாண்டிக் கடலில் மிதந்துகொண்டிருந்த பனிப்பாறையின் மீது மோதி விபத்துக்குள்ளாகி கப்பல் மூழ்கியது. இதில் உயிர் பிழைத்தவர்கள் ஒரு சிலரே. அந்த ஒரு சிலரில் வயலெட் ஜெசப்பும் ஒருவர்.

மூன்றாவதாக எச்.எம்.எச்.எஸ். ப்ரட்டானிக் கப்பலில் பணியாற்றிய ஜெசப் அவர்கள் 1916 ஆம் ஆண்டு நவம்பர் 21 அன்று அவர் பயணித்த கப்பல் பாரிய விபத்துக்குள்ளானது. இதில் பலர் இறந்தனர். ஆனால் இந்த விபத்திலும் வயலெட் ஜெசப் உயிர் பிழைத்தது தற்செயலாகவே நிகழ்ந்தது என்ற போதிலும் மும்முறை நடந்த இச்சம்பவங்கள் ஆச்சரியமாகவே கருதப்படுகின்றன. இந்த 3 விபத்துகளும் அவருடைய 23, 24 மற்றும் 28 ஆகிய வயதுகளில் நடந்த போதிலும் தன்னுடைய 83 ஆவது வயதிலேயே வயலெட் ஜெசப் மரணித்தார்.

# இரத்தினக்கற்கள்

# ஊர்வலம்

- அனுஷா மாசிலாமணி

[கடந்த வாரத்தின் தொடர்ச்சி..]

மனதில் உள்ள கெட்ட எண்ணங்களை அகற்றக்கூடிய சக்தியும் இக்கற்களுக்கு உள்ளதாம். பார்ப்பவர் கண்ணைக் கவரக்கூடிய தோற்றமும், வசீகரிக்கும் தன்மையும் இயல்பிலேயே நீலக்கற்களுக்கு உள்ளமை நாம் அறிந்ததே.

நவக்கிரகங்களில் ஒன்றான சனிக்குரிய கல்லாக இந்த நீலம் குறிப்பிடப்படுகிறது. ஜனவரி 13ஆம் திகதிமுதல் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதிக்கிடைப்பட்ட நாட்களில் பிறந்தவர்கள் சனியின் ஆதிக்கத்துக்குட்பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் நீலக்கல்லை தங்கத்தில் பதித்து சுண்டுவிரலில் மோதிரமாக அணிவது நல்ல பலன்களைத்தரும். அதிலும் 4,5,6 கெரட்டில் கல் அணியமுடிந்தால் மிகச்சிறப்பாகும் என சோதிடவியலாளர்கள் கூறுகின்றனர். எனவே சரியான முறையில் சரியான கற்களைத் தெரிவு செய்வதை நாம் உறுதிப்படுத்திக்கொள்வது அவசியம்.

புஷ்பராகம் எனும் இந்த வகை நவரத்தினமானது தங்கத்துக்கொப்பான மஞ்சளை அடிப்படையாக கொண்ட அழகிய வண்ணக்கல்லாகும். எனவே இதனை பெரும்பாலும் *Yellow sapphire* என்று அழைக்கின்றனர். ஆனாலும் *sapphire* வகைகளில் மஞ்சள் மட்டுமன்றி நாம் ஏற்கனவே அறிந்துகொண்ட *blue sapphire* போலவே *green, violet, red* போன்றவையும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இருந்தபோதிலும் இந்த மஞ்சள் வண்ண புஷ்ராகமானது பல சிறப்பம்சங்களோடு தனக்கான தனி இடத்தை பெற்றிருக்கிறது.

அதன் முக்கிய அம்சங்களில் முதலாவதாக கூறக்கூடியது அதன் ஒளி ஊடுருவும் தன்மை ஆகும்.

அதாவது தங்கத்துடன் இணைத்து ஆபரணங்களாக வடிவமைக்கும் போது இந்த புஷ்பராக கல்லானது தங்கத்தின் நிறத்தையும் ஈர்த்து தன் அடிப்படை வண்ணமான மஞ்சளை பொன்னிறமாக மாற்றிக்கொள்கிறது. எனவேதான் ஒளி மிகுந்த ரத்தினமாக நவரத்தினங்களில் இந்த புஷ்பராகம் எனும் *Yellow sapphire* ஐ கூறுகின்றனர்.

மேலும் ஏனைய *sapphire* வகைககளுடன் ஒப்பிடும் போது விலையும் சற்று குறைவாக காணப்படுவதால் சாதாரணமாகவே அனைவராலும் வாங்கக்கூடியதாக உள்ளமை மேலும் ஒரு முக்கிய அம்சமாகும்.

இந்த வகை கற்கள் இலங்கை, வியட்னாம், மடகஸ்கார் போன்ற நாடுகளிலும் ஒருசில ஆபிரிக்க நாடுகளிலும் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மாணிக்கம் [RUBY], நீலம் [blue sapphire] என்பவற்றைப்போன்றே இந்த மஞ்சள் புஷ்பராகமும் அலுமினியம் ஒக்சைட்டினை இரசாயன மூலக்கூறாக கொண்டது.

அடுத்ததாக இதனை சோதிடவியல் ரீதியாக நோக்கினால் இந்த ரத்தினமானது நவக்கிரகங்களில் குருவுக்கு உரியதாக சொல்லப்படுகிறது.

சூரியன் தனுசு ராசியில் சஞ்சரிக்கும் மார்கழி மாதத்தில் அதாவது டிசம்பர் 15ஆம் திகதி முதல் ஜனவரி 13ஆம் திகதிவரையிலான காலப்பகுதியில் பிறந்தவர்கள் குருவின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் என்றும் அவர்களுக்கான அதிர்ஷ்ட கல்லாக புஷ்பராக கல் உள்ளதாகவும் சோதிட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இந்த மாதத்தில் பிறந்தவர்கள் 5,6கரட் அளவிலான கற்களை தங்க மோதிரத்தில் இணைத்து ஆண்கள் வலது கை நடு விரல் அல்லது மோதிர விரலிலும், பெண்கள் இடதுகை மோதிர விரலிலும் அணிவதால் சிறந்த பலனை பெற முடியும்.

நவரத்தினங்களின் தொடர்ச்சியாக தமிழின் பெருமையையும் தமிழரின் வரலாற்றுத் தொன்மையையும் பறைசாற்றிக்கொண்டிருக்கும் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் மூலவிக்கிரகத்தை அலங்கரிக்கும் மரகத பச்சையைப் பற்றி பார்க்கலாம்.

மரகத பச்சை எனும் *Green sapphire* ஆனது கண்களுக்கு குளிர்ச்சியையும் மனதுக்கு அமைதியையும் தரக்கூடிய ஒரு நவரத்தினமாகும். இது தன ஆகர்ஷண சக்தியைக் கொண்ட நிறமுடைய கல்லாக கருதப்படுவதால் செல்வச்செழிப்பை வெளிக்காட்டக்கூடியது.

இலங்கையில் பெரும்பாலும் இந்த கற்கள் கிடைப்பதில்லை. இந்தியா, பாகிஸ்தான், கொலம்பியா போன்ற நாடுகளில் அதிகமாக அகழ்ந்தெடுக்கப்படுகின்றது. இதன் இரசாயன மூலக்கூறுகளாக பெரிலியம் மற்றும் அலுமினியம் என்பன காணப்படுகின்றன.

இந்த வகையான கற்கள் குளிர்ந்த பச்சை வண்ண கதிர்களை எந்நேரமும் வெளிப்படுத்திக்கொண்டிருப்பதால் அணிந்திருப்பவரின் உடலின் மீது ஒரு பாதுகாப்புக்கவசமாக செயற்படுவதோடு நேர்மறை சக்தியையும் வழங்குகிறது. நவக்கிரகங்களில் புதனுக்குரிய இரத்தினமாக இது விளங்குகிறது.

தொடரும்...

தமிழன் சிறுவர் உலா

# சிறுவன்



அடர்ந்த காட்டிலுள்ள புல்வெளியில், தனக்கு சொந்தமான பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்தான் ஆனந்த். பன்றிகள் எல்லாம் கூட்டமாக ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டபடி மேய்ந்துகொண்டிருந்தன. சிறிதுநேரத்தில் அந்தக் காட்டுப் பக்கம் எப்பிராயீம் என்ற சிறுவன் வந்தான். அங்கே ஆனந்த் நிற்பதைக் கூட கவனிக்காத அந்தச் சிறுவன், அடர்ந்து வளர்ந்த செடி, கொடிகளின் மீது தன் பார்வையை செலுத்தினான். தனக்குத் தேவைப்படுகிற மூலிகைச் செடிகளைப் பறிக்கத் தொடங்கினான். அப்போது அவன் பின்னால் நின்று நன்றாக சிரிக்கத் தொடங்கினான் ஆனந்த். சிரிப்பு சத்தம் கேட்டு திடுக்கிட்ட எப்பிராயீம் திரும்பிப் பார்த்தான். அங்கே ஆனந்த் நிற்பதைக் கண்டு அவனைப் பார்த்து இலேசாக சிரித்தான்.

"சிறுவனே! நீ தினமும் இங்கு வந்து மூலிகைகளைப் பறித்துக்கொண்டிருக்கிறாய். இவற்றையெல்லாம் வைத்து நீ என்ன செய்யப் போகிறாய் என்றுதான் தெரியவில்லை" என்று ஆவலோடு கேட்டான். "ஐயா! இவற்றையெல்லாம் நான் மருந்து செய்ய கொண்டுபோகிறேன். இந்தக் காட்டிலுள்ள மூலிகைகளை எல்லாம் பறித்து விதவிதமான மருந்துகளைத் தயார்செய்து வருகிறேன். மேலும், பல அற்புதமான மருந்துகளை எல்லாம் கண்டுபிடிக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

"ஹா ஹா ஹா" என்று காடே அதிரும்படியாக சிரிக்கத் தொடங்கினான் ஆனந்த். "சிறுவனே! உன்னை நினைக்கிறபோது எனக்கு வேடிக்கையாகவே இருக்கிறது. "நீ தினமும் காட்டுக்கு வந்து ஏதோ பெரிய மனிதர் போன்று பச்சிலைகளைப் பறித்துச் செல்கிறாய். உன்னை நீயே பெரிய வைத்தியன் என்று எண்ணி, உன் மனதுக்குள் நீயே உன்னைப் பெருமையாக நினைக்கிறாய். இவை எல்லாம் உன்னிடம் அதிக நாட்கள் தாக்குப் பிடிக்காது" என்று கூறினான்.

"ஐயா! சிறியவர்கள், பெரியவர்களின் செயலை செய்யக்கூடாது என்று யாராவது சட்டம் போட்டிருக்கின்றனரா? அப்படி எதுவும் இல்லையே நான் எனது கடும் முயற்சியால் மருந்துகளைக் கண்டுபிடிக்கும் அரிய முயற்சியை செய்துவருகிறேன். அதைக்கண்டு முடிந்தால் என்னைப் பாராட்டுங்கள். இல்லையென்றால் விட்டுவிடுங்கள்" என்று கூறினான்.

"சிறுவனே! நீ படுசுட்டியாகவே பேசுகிறாய். நீ எப்படித்தான் மருந்தைக் கண்டுபிடிக்கிறாய் என்று நானும்தான் பார்க்கிறேன். எத்தனையோ வைத்தியர்கள், வயதான பின்னும் கூட வைத்தியத்தில் தேர்ச்சிபெறாமல் ஏனோதானோ என்று வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். நீ என்ன அப்படி அற்புதமான மருந்தைக் கண்டுபிடிக்கப் போகிறாய் என்று பார்க்கிறேன்" என்று ஆணவத்தோடு கூறினான். அதைக் கேட்டுக் கோபப்படவோ, ஆத்திரப்படவோ செய்யாமல் எதையும் நாம் செயல் மூலமே காட்டவேண்டும் என்ற எண்ணத்தோடு அமைதியுடன் அங்கிருந்து சென்றான் எப்பிராயீம். அதன்பின் மீண்டும் தன் பன்றிகளை புல்வெளியில் மேய்க்கச் சென்றான் ஆனந்த். அன்றும் அவன் கண்கள் சிறுவனைத் தேடின.

வெகுநேரமாக எப்பிராயீமை தேடியும் அவன் அங்கு வராதது ஆனந்த்க்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. நாட்கள் கடந்து, வாரங்கள் கடந்து, சில மாதங்களும் கடந்தன. எப்பிராயீம் அதன்பின் ஆனந்த் கண்களுக்குத் தென்படவேயில்லை. ஒருநாள் தன் பன்றிகளை எல்லாம் காட்டின் மேடான பகுதிக்கு ஓட்டிச்சென்றான் ஆனந்த். அங்கு அவன் சற்று மேடான பகுதியில் நடந்து சென்றுகொண்டிருந்தான். அது மழை காலமானதால், மழை நீர் எல்லா இடங்களிலும் வடிந்து சேறாகக் காணப்பட்டது.

அதை கவனிக்காமல் பன்றிகளை விரட்டியபடி வேகமாக ஓடினான். அப்போது அவன் கால் சேற்றில் பட்டு புரண்டுவிட்டது. அடுத்த நிமிடம், சரிவான மேட்டுப் பகுதியிலிருந்து வேகமாகப் புரண்டபடி பள்ளத்தில் பொத்தென்று விழுந்தான் ஆனந்த். அவன் தலையில் பலமாக அடிபட்டு இரத்தம் கசிந்தது. கை, கால்கள் எல்லாம் உராய்ந்து இரத்தம் வழிந்தது. கண்கள் இருட்ட, உடல் சோர்வடைய அப்படியே தரையில் படுத்தபடி மயக்க நிலையை அடைந்தான்.

சிறிதுநேரத்தில் தன் மீது மென்மையான காற்று படுவதை உணர்ந்தான். மெல்லத் தன் கண்களைத் திறந்து பார்த்ததும், தான் ஒரு குடிசையில் கயிற்றுக்கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தான்.

தன் தலையில் மருந்து வைத்துக் கட்டப்பட்டிருப்பதையும் உணர்ந்தான். அவனுக்கு அவன் கண்களையே நம்பமுடியவில்லை. காட்டில் மேடான இடத்திலிருந்து கால் இடறி பள்ளத்தில் விழுந்ததும் அப்படியே தன் உயிர் பிரிந்துவிடும் என்று நினைத்தவனுக்கு, இப்போது தான் உயிரோடு காப்பாற்றப்பட்டிருப்பதை நினைத்துப் பார்க்கிறபோது சற்று ஆச்சரியமாகத்தான் இருந்தது.

தன்னைக் காப்பாற்றியவர் யாரென்று காணும் ஆவலில் தன் பார்வையை சற்றுத் திருப்பினான். அங்கே சிறுவன் எப்பிராயீம் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு ஆச்சர்யமடைந்தான். "ஐயா! என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? நான் கண்டுபிடித்த மருந்தை வைத்துதான் உங்கள் தலையில் ஏற்பட்ட காயத்தின் இரத்தப்போக்கை கட்டுப்படுத்தினேன். நான் கொடுத்த மருந்தை சாப்பிட்டுத்தான் உங்களுக்குப் புதிய உற்சாகம் பிறந்து மயக்கம் எல்லாம் தெளிந்துவிட்டது" என்றான்.


அதைக் கேட்டு வியப்புற்றான் ஆனந்த். "தம்பி! உன்னை நான் சாதாரணமாக நினைத்தேன். நீயோ மிகச் சிறந்த அறிவாளியாக இருக்கிறாய். நீ கண்டுபிடித்த மருந்துதான் இன்று என் உயிரையே காப்பாற்றியிருக்கிறது. உனது திறமையை இன்று நான் நன்றாகவே புரிந்துகொண்டேன். நான் உன்னை எவ்வளவோ ஏளனம் செய்தும் கூட நீ அதைப் பொருட்படுத்தாது என் உயிரையே காப்பாற்றிவிட்டாய். அதோடு நீ கண்டுபிடித்த மருந்துகளுக்கும் உயிர் இருக்கிறது" என்று கூறினான்.

"ஐயா! செயற்கரிய செயலைச் செய்து சாதனை படைக்க முயற்சித்தால், கேலியும், ஏளனமும், வசை சொற்களும் போட்டி போட்டுக்கொண்டு தேடி வரத்தான் செய்யும். அவற்றையெல்லாம் முறியடித்து வாழ்க்கையில வெற்றிபெற்றால்தான் சாதனையாளராகத் திகழ முடியும். அதனால் உங்கள் வசைச் சொற்கள் என்னை ஒன்றும் பாதித்துவிடவில்லை. இனி நான் கண்டுபிடித்த இந்த மருந்துகளை உலகத்திலுள்ள ஏழை மக்கள் எல்லாம் பயன்படுத்தும்படியாக செய்யப் பாடுபடுவேன்" என்று கூறினான்.

அதைக் கேட்டு ஆனந்த் கண்ணீர் வடித்தான். "தம்பி! உன் செயலை நான் எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. நீ சாதாரணமான ஏழைக் குடும்பத்தில் பிறந்தாலும், உன்னுடைய இலட்சியங்கள் எல்லாம் உயர்ந்த இலட்சியங்களாக இருக்கின்றன. நிச்சயமாக வாழ்க்கையில் நீ உயர்ந்த நிலையை அடைவாய். நீ சிறுவயதிலேயே செயற்கரிய செயலை செய்துவிட்டாய். உன் செயலில் நீ வெற்றிபெற உன்னை வாழ்த்துகிறேன்" என்று கூறினான்.

அந்த வாழ்த்தை புன்சிரிப்போடு ஏற்றுக்கொண்டான் எப்பிராயீம்.

## கண்டுபிடியுங்கள்...



**கடந்த வார கண்டுபிடியுங்கள் பகுதிக்கான சரியான விடையை அனுப்பிய மாணவர்கள்...**

**ஜே.எவ்.சஹாதா**
தரம்-06
மத்திய கல்லூரி, அட்டாளைச்சேனை.

**சம்ரிஷ்**
தரம்-01
புனித ஜோசப் கல்லூரி, கொழும்பு.

## வாழ்வியலின் இழுக்குகள்

★ உரிய பொருட்களைப் பெறவும், அனுபவித்து நிறைவுபெறவும் முடியாத ஆசைகளை சேர்த்துக்கொண்டே இருத்தல்.
★ பிறர் மனம் வருந்தத்தக்க செயல்களைச் செய்து அவர்களின் வருத்த அலைகளை சாபமாக ஏற்றுக்கொள்ளுதல்.
★ பொறாமை போன்ற தீய குணங்களால் பிறருக்கு தீங்கிழைக்க நினைத்தல்.
★ உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் இவற்றில் அளவுமுறை மீறி அனுபவித்தல் அல்லது அலட்சியம் செய்தல்.
★ உடலாலும், அறிவாலும் உயர்வும் நலமும் இருந்தபோதும் அவற்றை பிறரின் நலனுக்கு பயன்படுத்தாமை.
★ பிறர் வளம் பரிந்துண்டு வாழ்தல்.

**சோ.வினோஜ்குமார்,
தொழில்நுட்பப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம், கிளிநொச்சி.**

## ஸ்டோன் ஹேஞ்ச்



இங்கிலாந்தில் ஸ்டோன் ஹேஞ்ச் என்ற பகுதி உள்ளது. இது வட்ட வடிவ கற்களால் அமைக்கப்பட்ட தூண் போன்ற பகுதிகளாகும். கி.மு 8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இது அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதில் இருக்கும் மர்மம் இது எப்படிக் கட்டப்பட்டது என்பது இல்லை. எதற்காகக் கட்டப்பட்டது என்பது தான். இவ்வளவு பெரிய கல் தூண்கள் நடப்பட்டாலும் அது எதற்காக நடப்பட்டது என்ற தகவல்கள் எங்கும் இல்லை. இன்று ஆராய்ச்சியாளர்கள் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

## குறள் அறிவோம்




தன் உயிர் நீப்பினும் செய்யற்க, தான் பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

**தனது உயிர் போனாலும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். பிறிது உயிரை நீக்கிடும் பிழையைச் செய்யக்கூடாது. தனது உயிர் போகாமல் தடுப்பதற்காய் இன்னுயிர் கொல்லும் செயலைச் செய்யாதே கொடிய பாவச் செயல் அதுவே ஆகும்.**

## பொன்மொழிகள்

★ அரிய செயல்கள் அனைத்தும் விடாமுயற்சியாலேயே அடையப்பெற்றிருக்கின்றன் வெறும் வலிமையால் மட்டும் அல்ல **- சாமுவேல் ஜோன்சன்**
★ பொதுவாக, வெற்றி என்பது மற்றவர்கள் கைவிட்டுவிட்ட பின்பும் அயராமல் தொடர்வதாலேயே கிட்டுவதாகும். **-வில்லியம் பெதர்**
★ நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர, வேறு யாராலும் தடுக்க முடியாது **-ப்ரெமர்**
★ உன்னிடம் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணரும் வழி விடாமுயற்சியும், தொடர்ந்த உழைப்புமே ஆகும். வலிமையோ, புத்திசாலித்தனமோ அல்ல **- சர் வின்ஸ்டன் சர்ச்சில்**
★ நான் மெதுவாக நடப்பவன்தான்; ஆனால், ஒருபோதும் பின்வாங்குவதில்லை. **-ஆபிரஹாம் லிங்கன்**
★ தளராத இதயம் உள்ளவனுக்கு, இவ்வுலகில் முடியாதது என்று எதுவுமே இல்லை **- புக்கன்ஸ்**
★ உன்னால் முடியும் என்று எண்ணுவதையோ அல்லது முடியும் என்று கனவு காண்பதையோ துணிந்து தொடங்கு. உனது துணிவிலேயே அறிவும், ஆற்றலும், மந்திரமும் அடங்கியுள்ளன **-கோதே**
★ நம்பிக்கையோடு உன் முதலடியை எடுத்து வை. முழுப் படிக்கட்டையும் நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை. முதல் படியில் ஏறு **- மார்ட்டின் லூதர்**
★ செய்யமுடியும் என்று நம்பு. ஒன்றைச் செய்யமுடியும் என்று நீ முழுதாய் நம்பும்போது, உன் மனம் அதைச் செய்து முடிக்கும் வழிகளைக் கண்டறியும். ஒரு காரியத்தில் வைக்கும் நம்பிக்கை, அந்தக் காரியத்தை முடிக்கும் வழியையும் காட்டுகிறது **- டொக்டர் டேவிட் ஸ்சுவட்**
★ நம்பிக்கையுள்ள மனிதனுக்கு, எப்போதும் ரோஜாதான் கண்ணில் படும். முட்கள் இல்லை..

**-டிக்கன்ஸன்**



## தொடர் வண்டி

நீண்ட வண்டி தொடர் வண்டி
நீண்ட தூரம் போகும் வண்டி

தண்டவாளத்தில் அது போகும்
தட தட வென்று விரைந்தோடும்

கூ..... என ஒலிப்பது புகை வண்டி
பாம்.... என ஒலிப்பது மின் வண்டி

பச்சை, சிவப்பு கொடி இரண்டை
நிலையத் தலைவர் காட்டிடுவார்

சிவப்பைக் காட்டினால் நின்றுவிடும்
பச்சையைக் காட்டினால் பாய்ந்தோடும்

## நூல்களிலிருந்து...

**நான்மணிக்கடிகை**

**பாடல் – 4 :**

**கள்ளி வயிற்றி இன் அகில் பிறக்கும்; மான் வயிற்று
ஒள் அரிதாரம் பிறக்கும்; பெருங் கடலுள்
பல் விலைய முத்தம் பிறக்கும்; அறிவார் யார்,
நல் ஆள் பிறக்கும் குடி?**

**பொருள்:**


**கள்ளிச்செடியில் அகில் பிறக்கும். மான் வயிற்றில் ஒளி பொருந்திய அரிதாரம் பிறக்கும். மிக்க விலையுடைய முத்துக்கள் பெரிய கடலுள் பிறக்கும். அவ்வாறே நல்லியல்பு கொண்டோர் பிறக்கும் குடியையும் எவராலும் அறிய முடியாது.**

## "கண்டதைப் படித்தால், பண்டிதன் ஆகலாம்"

"கண்டதைப் படித்தால், பண்டிதன் ஆகலாம்" என்ற பழமொழியை கேட்கும்போது கண்ணில் தென்படுவதை எல்லாம் படித்தால் பண்டிதனாகலாம் என்று நினைப்போம் நல்லது தான்.

ஆனால், இப்பழமொழி உண்மையில் கண்டு அதைப் படித்தால், பண்டிதன் ஆக லாம் என்றே சொல்லப்பட்டது. இதன் உண்மை யான பொருள் நல்லது என்று கண்டு அதைப் படித்தால் பண்டிதனாகலாம். அதாவது, ஆத்திசூடி, திருக்குறள், மூதுரை, நாலடியார் மற்றும் பல நல்ல நூல்களை உள்ளன. கண்டு அதைப் படிக்கவேண்டும் என்பதுதான்.



**எம்.எவ்.ஏ.ஷீமா**
நதா ஆரம்ப பாடசாலை



**எஸ்.எவ்.ஷிப்லா**
தரம்-10
எம்.ஆர்./அல்மினா மகா வித்தியாலயம்

உங்களது ஆக்கங்களையும், சிறார்களின் பிறந்த தின வாழ்த்துகளையும் (புகைப்படத்துடன்) பகிர்ந்துகொள்ள களம் அமைத்துத் தருகிறது 'தமிழன்' பத்திரிகை. உங்களது விபரங்களுடன் எங்களுக்கு அனுப்பிவைக்கலாம்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு. 07**
**மின்னஞ்சல் முகவரி: thamilansiruvarula@yahoo.com**

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.





# வாழைக்காய் மிளகு வறுவல்

**தேவையான பொருட்கள் :**

வாழைக்காய் – 1
மஞ்சள் தூள் – 1 சிட்டிகை
மிளகாய்த் தூள் – அரை டீஸ்பூன்
உப்பு – தேவையான அளவு
எண்ணெய் – 1 மேசைக் கரண்டி
பெருங்காயத் தூள் – 1 சிட்டிகை
கடுகு – 1 தேக்கரண்டி

அரைப்பதற்கு:
தேங்காய்ப்பூ – 2 மேசைக் கரண்டி
இஞ்சி – ஒரு துண்டு
பூண்டு – 5
மிளகு – 3 தேக்கரண்டி

**செய்முறை :**

வாழைக்காயின் தோலை நீக்கிவிட்டு, வேண்டிய வடிவில் வெட்டிக்கொள்ளவும். வெட்டிய வாழைக்காயை பாதியளவு வேகவைத்துக் கொள்ளவும். வேகவைத்த வாழைக்காயை ஒரு பௌலில் போட்டு, அதில் உப்பு, மிளகாய்த்தூள், மஞ்சள் தூள் ஆகியவற்றை சேர்த்து பிரட்டி 20 நிமிடம் ஊறவைத்துக்கொள்ள வேண்டும்.

பிறகு அரைப்பதற்கு கொடுத்துள்ள பொருட்களை மிக்ஸியில் போட்டு, தண்ணீர் சேர்த்து பேஸ்ட் செய்துகொள்ள வேண்டும். அடுத்து ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, பெருங்காயத்தூள் சேர்த்து தாளித்த பின், ஊறவைத்துள்ள வாழைக்காயை சேர்த்து 5 நிமிடம் கிளறவும்.

அடுப்பை மிதமான தீயில் வைத்து அரைத்து வைத்துள்ள மசாலா மற்றும் உப்பு சேர்த்து நன்கு பிரட்டி விடவேண்டும். பின் அதில் இலேசாக தண்ணீர் தெளித்து, மூடி வைத்து 2 நிமிடம் வாழைக்காயை வேகவைத்து இறக்கினால், வாழைக்காய் மிளகு வறுவல் ரெடி!

# சமையலறைக் குறிப்புகள்



மிக்சருக்காக அவல் பொரிக்கும்போது சிதறிப் போகும். இதைத் தவிர்க்க கைப்பிடியோடு கூடிய வடிகட்டியில் அவலைப் போட்டு, கொதிக்கும் எண்ணெயில் முக்கிப் பொரிக்க வேண்டும்.

ரவை உருண்டை, பயத்தம் மாவு உருண்டை செய்யும்போது பொடித்த சர்க்கரையையும் நெய்யையும் நன்றாகக் குழைத்து ஒரு தட்டில் தடவுங்கள். பின் மாவை அதில் போட்டுக் கலந்து உருண்டை பிடித்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

தயிர் புளிக்காமல் இருக்க அதில் சிறு துண்டு தேங்காயைப் போட்டுவைக்கலாம்.

அவியல் செய்யும்போது அரைத்த தேங்காய் விழுதைத் தயிரில் கலக்காமல் வேகவைத்த கறிகாய்களுடன் சேர்த்துப் பிறகு தயிர் சேர்த்தால் அவியல் நீர்த்துப் போகாது.

கருணைக்கிழங்கைப் புளித்த தயிரில் ஊறவைத்துச் சமைத்தால் சாப்பிடும்போது அரிப்பு இருக்காது.

அவரைக்காய், கொத்தவரங்காய், வெண்டைக்காய், சுண்டைக்காய், மிளகாய் ஆகியவற்றில் வற்றல் போடும்போது காய்ந்த பிறகு புளித்த தயிரில் ஊறவைத்து மீண்டும் காயவைத்தால் ருசி கூடும்.

சூடான பாலில் வாழைப்பட்டையைப் போட்டு ஒரு டீஸ்பூன் தயிர் ஊற்றினால் விரைவாக தயிராகிவிடும்.

பட்சணம் செய்யும்போது எண்ணெய் பொங்காமல் இருக்க ஒரு சொட்டு வினிகர் விட வேண்டும்.

# ஹேண்ட்பேக் பயன்பாடும் அதன் பாதிப்புகளும்



ஆடை ஆபரணங்கள் மட்டுமல்ல, தாங்கள் பயன்படுத்தும் ஹேண்ட் பேக்கைக் கூடப் பார்த்துப் பார்த்து வாங்குவார்கள் பெண்கள். பேக்கின் உள்ளே எத்தனை அடுக்குகள் இருக்கின்றன, எதையெல்லாம் எங்கெல்லாம் வைக்கலாம் என்று பார்ப்பார்கள்.

வாங்கிய சில நாட்களுக்குப் பிறகு கையில் வைத்திருக்கும் பொருட்களையெல்லாம் பையில் அடைத்துவிடுவார்கள். பொருட்கள் சேரச் சேர, பையின் எடையும் அதிகரிக்கத் தொடங்கும். இப்படி அதிக எடையுள்ள பையைத் தொடர்ந்து உபயோகப்படுத்துவதால், தோள்பட்டை வலி தொடங்கி முதுகுத்தண்டுவட பாதிப்புவரை எக்கச்சக்க பிரச்சினைகள் ஏற்படலாம் என மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.

"ஹேண்ட்பேக்கில் எதை வைக்கவேண்டும் என்றில்லாமல், அதிக எடையுள்ள பொருட்களை உள்ளே திணித்து, அவற்றை தினமும் சுமப்பது ஆரோக்கியமின்மைக்கான திறவுகோல். குறிப்பாக, ஒரு பக்கமாகப் பயன்படுத்தும் ஹேண்ட்பேக்கில் கனமான பொருட்களை வைத்து சுமப்பது ஆபத்தானது. இதுபோல தினமும் அதிக எடையைச் சுமக்கும் பெண்களுக்கு முதுமையைத் தொடும் முன்னரே எலும்புத் தேய்மானம் ஏற்படத் தொடங்கிவிடும்" என எச்சரிக்கிறார்கள் எலும்பு மூட்டு அறுவைசிகிச்சை மருத்துவர்கள்.

ஹேண்ட்பேக் மற்றும் அதன் உள்ளே வைக்கப்பட்டிருக்கும் பொருட்களின் எடை மற்றும் அளவு, பட்டியின் நீளம் போன்றவைதான் சம்பந்தப்பட்டவருக்கு உடல் சார்ந்த பிரச்சினைகளை ஏற்படுத்தும். எனவே, அவற்றில் அதிக கவனம் செலுத்தவேண்டும். நீளம் அதிகமுள்ள, தடிமனான பட்டியுடன் பேக்கை தெரிவுசெய்ய வேண்டும்.

பை தயாரிக்க எந்த வகைத் துணி பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதுகூட பிரச்சினையைத் தீர்மானிக்கும். தடிமனான தோல் அல்லது ரெக்ஸினால் செய்யப்பட்டிருந்தால், தசைகளில் அழுத்தமாகப் பதிந்து அந்தப் பகுதியில் வலியை ஏற்படுத்தும். பிரச்சினை அதிகரிக்கும்போது, நரம்புகள் பாதிப்படைந்து அவை சார்ந்த பிரச்சினைகளும் ஏற்படலாம். எனவே, தரமான மற்றும் எடை அதிகமில்லாத துணிகளில் தயாரித்த பைகளை மட்டுமே வாங்கவும்.

ஒருபக்கமாக ஹேண்ட்பேக்கை மாட்டிக்கொண்டு சென்றால், தோள்பட்டையில் வலி ஏற்படுவதுடன், உடலின் அமைப்பிலும் மாற்றம் ஏற்படும். உதாரணமாக, வலதுபக்கம் ஹேண்ட்பேக் தொங்கவிடுபவர்களுக்கு, காலப் போக்கில் வலது தோள்பட்டை சற்று கீழ்நோக்கியும், இடது தோள்பட்டை சற்று மேல்நோக்கி யும் மாறும். இதன் காரணமாக, பின்முதுகுவலி, கழுத்துவலி, மூட்டுவலி போன்றவை ஏற்படலாம்.



அதிக எடையுள்ள ஹேண்ட்பேக்கைச் சுமப்பதுதான் எல்லா பிரச்சினைகளுக்குமான அடிப்படை. எனவே, தினமும் ஹேண்ட்பேக்கைச் சுத்தப்படுத்தவும். முடிந்தவரை வாரம் ஒரு முறையாவது சுத்தப்படுத்தி, தேவையில்லாத பொருட்களை அகற்றவும்.

பஸ், ரயிலில் உட்கார இடமில்லாமல் தோள்களில் பையைத் தொங்கவிட்டபடி, நின்றுகொண்டே பயணிப்பவர்கள் தோளில் ஒருபக்கமாகச் சுமந்துசெல்வது ஆபத்தானது. வருடக்கணக்கில் இப்படிச் சுமைகளுடன் பயணப்பட்டால், தசைகளில் பிரச்சினை ஏற்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக வலி எடுக்கத் தொடங்கும். இதனால் காலப்போக்கில் தசைப் பிடிப்பு, பின்முதுகுவலி, இடுப்புவலி, மூட்டுத் தேய்மானம், குடலிறக்கம், டிஸ்க் தேய்மானம் போன்றவை ஏற்படக்கூடும். தீவிரமான தலைவலி ஏற்படுவது இவற்றின் முதல்நிலை. அதைத் தொடர்ந்து, தேவையில்லாத மனஉளைச்சல் ஏற்படக்கூடும்.

25 - 30 வயதைத் தொடும் இளம்பெண்கள்கூட தாங்கமுடியாத கழுத்துவலியால் அவதிப்பட இதுவும் ஒரு காரணம்.

கழுத்து வலியோ, தோள்பட்டை வலியோ எதுவாக இருந்தாலும், அதை உதாசீனப்படுத்த வேண்டாம். இவற்றில் மூட்டு சார்ந்த பிரச்சினைகளைக் குணப்படுத்த முடியாது; கட்டுப்படுத்த மட்டுமே முடியும். அந்தவகையில், முதல்நிலையிலேயே கண்டறிந்து கட்டுப்படுத்தும் வேலையைத் தொடங்குவதே நல்லது.

### ஹேண்ட்பேக் நிர்வாகம் தெரியுமா?

முதலில் தேவையானவை, தேவையில்லாதவை என உங்களிடம் உள்ளவற்றைப் பிரித்து வைக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.



உங்கள் பையை இரண்டாகப் பிரித்துக்கொள்ளுங்கள். ஒருபுறம் அத்தியா வசியத் தேவைகளையும், மற்றொருபுறம் ஆடம்பரத் தேவைகளையும் வைப்பது நல்லது. இங்கு ஆடம்பரப் பொருட்கள் என்பவை தற்காலிகமாகவோ குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமோ வைத்திருக்கும் பொருட்கள்.

# காரிகை களம்

இது ஒவ்வொருவரின் தேவையைப் பொறுத்து மாறுபடும். உதாரணமாக, சிலருக்கு சன்கிளாஸ் அத்தியாவசியம், அது சிலருக்கு ஆடம்பரம். எனவே, தனிநபர் விருப்பத்தைப் பொறுத்து பொருட்களைப் பிரித்துக்கொள்ளுங்கள். அத்தியாவசியப் பொருட்களின் அளவைப் பொறுத்து, அதற்கேற்ற பை வாங்கிக்கொள்ளுங்கள். தற்காலிகமாக இருக்கும் பொருட்களை அவ்வப்போது சுத்தப்படுத்துங்கள். வேண்டாமென்பதை தாமதிக்காமல் நீக்கிவிடுங்கள்.

### ஹேண்ட்பேக் தேர்ந்தெடுக்கும்போது...

முடிந்தவரை இரண்டு கைகளுக்கும் பொருந்தும் பைகளைப் பயன்படுத்தவும். ஒருபக்கப் பை என்றால், நீளமான பைகளாக வாங்கிக்கொள்ளவும். அதை வலமிருந்து இடமாகவோ, இடமிருந்து வலமாகவோ மாட்டிக் கொள்ளவும்.



ஒருபக்கப் பைகளை இரண்டு பக்கமும் மாற்றி மாற்றி, சமமான நேரம் தொங்கவிட வேண்டும். ஒவ்வொரு 20 நிமிடத்துக்கும் கைகளை மாற்றிக்கொள்வது சிறப்பு. பை இருக்கும் தோள் பட்டையில் வலி ஏற்படுவது போன்ற உணர்வு ஏற்பட்டால், உடனடியாகக் கையை மாற்றிக் கொள்ளவும்.

ஒருபக்க ஹேண்ட்பேக்கில், இடுப்புக்கு அருகே பையின் அடிப் பகுதி வருமாறு இருக்கவேண்டும். அந்தளவுக்கு நீளம் அவசியம். எடை அதிகமுள்ள பொருட்களை பையின் அடிப்பகுதியில் வைத்துக்கொள்ளவும். எடை குறைவான பொருட்கள் மேலே இருக்கவேண்டும்.

### வலியைப் போக்கும் பயிற்சிகள்!

வலி ஏற்படாமலிருக்க, கழுத்துப் பகுதிக்கான கீழ்க்காணும் உடற்பயிற்சிகளைச் செய்துவரவும்.

வலமிருந்து இடம், இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என 30 விநாடிகளுக்குக் கழுத்தை மெதுவாகச் சுழற்றி பயிற்சி செய்யவும். பயிற்சி செய்யும்போது நன்றாக மூச்சை உள்ளிழுத்து வெளியே விடவும்.

முதுகுத்தண்டு நிமிர்ந்தபடி, கால்கள் தரையில் பதியுமாறு அமரவும். வலது கன்னத்தில் வலது கையை வைத்துக்கொண்டு, மெதுவாக இடதுபக்கம் கழுத்தைத் திருப்பவும். ஐந்து நொடிகளில் பழையநிலைக்குத் திரும்பவேண்டும். இப்படி வலது, இடது என இரண்டு பக்கமும் செய்யவும்.

முதுகுத்தண்டு நிமிர்ந்து, கால்கள் பதியும்படி நாற்காலியில் அமர்ந்து, இரு கைகளையும் கோர்த்துக் கொள்ளவும். கட்டை விரல்களைத் தாடையின் அடியில் வைக்கவேண்டும். தாடையில் கைவைத்தபடியே கழுத்தை மெதுவாக மேலே தூக்கவேண்டும். பிறகு, பழையநிலைக்கு வரவேண்டும். இதேபோல, தலையின் பின்புறம் கைகளைக் கோர்த்து, கழுத்தை மெல்லக் கீழே அழுத்தவேண்டும்; பழையநிலைக்கு வரவேண்டும்.

### எலும்புகளை கவனியுங்கள்!

நம் எலும்புகளுக்குத் தேவையான அன்றாட கல்சியத்தைப் பெற ஒரு கிளாஸ் பால் அல்லது ஒரு கப் தயிர் போதுமானது. 30 வயதுக்குப் பிறகு நம் எலும்புகளின் அடர்த்தி மெல்ல மெல்லக் குறைய ஆரம்பிக்கும். எனவே, தினமும் 1,000 மி.கிராம் கல்சியம் எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியம்.

# பெண்களின் அழகில் வெந்தயத்தின் பங்கு

தினமும் வெந்தயத்தை பால் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி மென்மையாக 15 நிமிடம் மசாஜ் செய்து பின் கழுவவேண்டும். இதனைக்கொண்டு சருமத்தைப் பராமரித்தால், சருமத்துளைகளில் ஏற்பட்டுள்ள அடைப்புகள் அனைத்தும் நீங்கி சருமம் சுத்தமாக இருக்கும். இதனை தினமும் செய்துவரலாம்.

வெந்தயத்தை நீரில் ஊறவைத்து பேஸ்ட் செய்து, பால் சேர்த்து கலந்து முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து பின் குளிர்ந்த நீரில் கழுவவேண்டும். இதனை வாரம் இருமுறை செய்துவரலாம். வெயில் காலத்தில் வெளியில் சென்று வந்தபின் இந்த பேஸ்பேக் போட்டு கொண்டால் சருமம் கருமை அடைவதை தடுக்கலாம்.



வெந்தயப்பொடியை தயிர் சேர்த்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி சிறிதுநேரம் ஊறவைத்து பின் கழுவவேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், முகத்தின் நிறம் அதிகரிக்கும். ஆனால், வெந்தயம் குளிர்ச்சிமிக்கது என்பதால், சுவாசப் பிரச்சினைகள் இருப்பவர்கள் இதனை வாரம் 2 முறை போடுவது நல்லது.

வெந்தயத்தை பொடிசெய்து அதனை தேன் சேர்த்து கலந்து முகத்தில் தடவி ஸ்கரப் செய்து பின் கழுவவேண்டும். பருக்கள் வருவது தடுக்கப்படும்.

அரை கப் வெந்தயத்தை நீரில் போட்டு கொதிக்க விட்டு, அந்நீரை குளிர வைத்து பின் அதனைக் கொண்டு தினமும் இரவில் படுக்கும் முன் முகம் கை, கால்களில் தடவி, மறுநாள் காலையில் கழுவவேண்டும். வெயிலில் சருமத்தின் நிறம் கருமை நிறத்தில் மாற்றமடைந்திருந்தால் இதன்மூலம் சரிசெய்யலாம்.

# பெண்கள் எந்த மாதிரியான கொலுசு அணியலாம்?



பெண்களின் கால்களுக்கு இயற்கை அழகு கொடுப்பது எதுவென்றால் அது கொலுசுதான். கால்களில் கொலுசை அணிந்திருக்கும் பெண்கள், நடந்து வருகையில் அந்த முத்துக்கள் எழுப்பும் ஓசையை இரசித்துக் கேட்கலாம்.

கால்களுக்கு கொலுசு அணியும்போது புதுவித அழகு தரும்.

பொதுவாக வீட்டிலிருக்கும் பெண்கள், பணிக்குச் செல்லும் பெண்கள் என அனைத்துப் பெண்களும் கொலுசு அணிந்திருப்பார்கள். சுடிதார், சேலை, தாவணி போன்ற ஆடைகளுக்கு கொலுசு கூடுதல் அழகைத் தரும். ஆனால், ஜீன்ஸ் மற்றும் அரை ஜீன்ஸ் அணிந்து வெளியில் சென்றால், கொலுசு அணியவேண்டாம். ஏனெனில், மொடர்ன் ஆடைகளுக்கு கொலுசு நன்றாக இருக்காது, அதுமட்டுமன்றி ஆடை அலங்காரத்தை கெடுத்துவிடும்.

கொலுசுகள் பல்வேறு வடிவங்களில் வடிவமைக்கப்படும். 5 முத்துகள் கொண்டது, 3 முத்துகள் கொண்டது. மெல்லிய பட்டையிலான கொலுசு மற்றும் தடிமனான வகை, இரண்டிற்கும் இடைப்பட்ட வகை என பல்வேறு வகைகள் இருக்கும். இதில் பெண்கள் கவனிக்கவேண்டியது, தங்கள் கால்களுக்கு எந்த மாதிரியான கொலுசு அழகாக இருக்கும் என்பதை பார்த்து அணியவேண்டும்.

கால்கள் கொஞ்சம் தடிமனாக இருக்கும் பெண்கள் மெல்லிய கொலுசு போட்டால், அவ்வளவு எடுப்பாக தெரியாது, எனவே, கொஞ்சம் தடிமனான கொலுசை அணியுங்கள். சற்று சிவப்பான நிறம் மற்றும் மெல்லிய கால்களைக்கொண்ட பெண்கள், 3 முத்துகள் கொண்ட மெல்லிய பட்டையிலான கொலுசை அணியுங்கள்.



அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# ரசிகர்களின் வேண்டுதலில் மீண்டு வருவார் என நம்புகிறோம் - எஸ்.பி.சரண்



உலகெங்கும் இசை ரசிகர்களின் உள்ளம் கவர்ந்த பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைபெற்று வருகிறார். தற்போது கவலைக்கிடமான நிலையிலுள்ள அவருக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டுவருகிறது. இந்நிலையில், எஸ்.பி.பாலசுப்பிரமணியனுக்கு வெளிநாட்டு மருத்துவ நிபுணர்கள் உதவியுடன் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. தொடக்கத்தில் அவரது உடல்நிலையில் முன்னேற்றம் இருப்பதாக கூறப்பட்டது. ஆனால், கடந்த சில நாட்களாக அவரது உடல்நிலை மோசமான நிலையில் இருப்பதாக மருத்துவ அறிக்கை கூறுகிறது. வென்டிலேட்டர் மற்றும் எக்மோ ஆகிய உயிர் காக்கும் கருவிகள் உதவியுடன் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் உடல்நிலை முன்னேற்றம் அடையவேண்டி கூட்டுப் பிரார்த்தனைக்கு இயக்குநர் பாரதிராஜா அழைப்பு விடுத்திருந்தார். ரஜினிகாந்த் உள்ளிட்ட பிரபலங்கள் பலரும் இதற்கு ஆதரவு கொடுத்தனர்.

அவரது மகன் எஸ்.பி.பி.சரண் தொடர்ந்து எஸ்.பி.பியின் உடல்நிலை குறித்து தகவல் வெளியிட்டுவரும் நிலையில், தற்போது வெளியிட்டுள்ள வீடியோவில் எஸ்.பி.பி.யின் உடல்நிலையில் முன்னேற்றம் இல்லையென்றாலும் ரசிகர்களின் வேண்டுதல் எஸ்.பி.பி.யை மீட்கும். அவருக்காக தமிழ்த் திரையுலகம் மற்றும் ரசிகர்களின் கூட்டுப்பிரார்த்தனையில் அவர் மீண்டு வருவார் என நம்பிக்கையோடு இருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்.

# நான் பணத்துக்கு முக்கியத்துவம் தரமாட்டேன் - ராஷிகண்ணா



இந்திய சினிமாவின் ரசிகர்கள் அனைவரையும் கவரும் தன்மையுள்ள நடிகையாக வலம் வருகிறார் நடிகை ராஷி கண்ணா.

தமிழில் 'இமைக்கா நொடிகள்', 'அடங்க மறு', 'அயோக்யா', 'சங்கத்தமிழன்' ஆகிய வெற்றிப்படங்களைத் தொடர்ந்து அடுத்ததாக 'அரண்மனை 3', 'அருவா' போன்ற படங்களில் நடிக்கவுள்ளார். இதேபோல் தெலுங்கிலும் முன்னணி நடிகர்களுடன் நடித்துவருகிறார்.

அவர் அளித்த பேட்டி வருமாறு:


"நான் பணத்துக்கு முக்கியத்துவம் தரமாட்டேன். கதை பிடிக்காமல் போனால் அந்தப் படத்துக்கு பத்து கோடி ரூபா சம்பளம் கொடுப்பதாக சொன்னால்கூட நிச்சயமாக நடிக்க மாட்டேன். அதேநேரம், கதை பிடித்திருந்தால் தயாரிப்பாளர் எவ்வளவு குறைவாக சம்பளம் தருவதாக சொன்னாலும் ஒப்புக்கொண்டு நடித்து விடுவேன். நடிகைக்கு ஆத்ம திருப்திதான் முக்கியம். பணம் முக்கியமல்ல. நான் பணத்துக்கு இரண்டாவது இடம்தான் கொடுப்பேன். கதை தேர்வில் இவ்வளவு எச்சரிக்கையாக இருக்கும் உங்களுக்கு ஏன் தோல்விகள் வருகின்றன என்று நீங்கள் கேட்கலாம். சில கதைகள் கேட்கும்போது மிகவும் நன்றாக இருக்கும்.

இது பெரிய வெற்றிபெறும் என்ற நம்பிக்கையில் நடிப்போம். ஆனால், அது திரையில் வரும்போது வேறுமாதிரி மாறிப் போய்விடுகிறது. வெற்றி, தோல்வி என்பது நமது கையில் இல்லை. ஆனாலும் கதை தெரிவுசெய்வதை மட்டும் நம் கையில் வைத்துக்கொள்ள வேண்டும்."

இவ்வாறு ராஷி கண்ணா கூறியுள்ளார்.

- தொகுப்பு: சசி



படம் : டாக்டர்
இசையமைப்பாளர் : அனிருத் ரவிசந்தர்
பாடலாசிரியர் : சிவகார்த்திகேயன்
பாடகர்கள் : அனிருத், ஜோனிடா காந்தி

பெண்: இனிமே டிக் டாக் எல்லாம் இங்க ஃபேன்ம்மா
நேரா டூயட் பாட வாயேன்ம்மா
ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா இருந்ததெல்லாம் போதும்மா
கொஞ்சம் ஸ்வீட்டா சிரிச்சு பேசேம்மா

ஆண்: செல்லம்மா செல்லம்மா
அங்கம் மின்னும் தங்கம்மா
பொன்னம்மா மெல்லம்மா கட்டி கிள்ளேன்மா
கண்ணம்மா கண்ணம்மா
கண்ணு ரெண்டும் கன் அம்மா
கொஞ்சம்மா கொஞ்சிம்மா சுட்டு தள்ளேன்மா

பெண்: பொல்லாத வயச சீண்டித்தான் போனாயே
தடுத்தாலும் உனக்கே விழுவேன் நானே
ஆண்: கண்ணாடி மனச கல் வீசி பார்த்தாயே
ஒடஞ்சாலும் காட்டுவேன் உன்ன நானே

ஆண்: மெழுகு டால்லு நீ அழகு ஸ்கூல்லு நீ
எனக்கு ஏத்தவ நீதான்டி
பெண்: ஹன்ட்சம் ஆளு நீ சுப்பர்கூலு நீ
நானும் நீயும்தான் செம ஜோடி

ஆண்: பொதுவா தோனி போல நானும் காம் மும்மா
இன்னைக்கு எக்ஸ்சைட்மென்ட் ஆனேன்ம்மா
கண்ணால் வளைய வீசி என்ன தூக்குமா
லைப் டைம் செட்டில்மென்ட் நான்தான்ம்மா

பெண்: இனிமே டிக் டாக் எல்லாம் இங்க ஃபேன்ம்மா
நேரா டூயட் பாட வாயேன்ம்மா
ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா இருந்ததெல்லாம் போதும்மா
கொஞ்சம் ஸ்வீட்டா சிரிச்சு பேசேம்மா

பெண்: அய்யயோ குடையிலா நேரம்
வந்தாயே மலையென்ன நீயும்

ஆண்: நெஞ்சோடு இழுக்குற செல்லோடு ஒரசுர
ஹார்மோனில் கலக்குற சிலிர்க்க வைக்கிறியே
பெண்: கல்லாண மனசத்தான் சில்லான சிரிப்புல
நல்லாவே கரைக்கிற வசியம் வைக்கிறியே

ஆண்: கொஞ்சலா கேக்கும் உன் வார்த்த
அத கோர்ப்பேனே கவிதை வார்ப்பேனே
மின்னலா தாக்கும் உன் கண்ணுல மைய
விழுவேனே அழக தொழுவேனே

பெண்: பொல்லாத வயச சீண்டித்தான் போனாயே
தடுத்தாலும் உனக்கே விழுவேன் நானே
ஆண்: கண்ணாடி மனச கல் வீசி பார்த்தாயே
ஒடஞ்சாலும் காட்டுவேன் உன்ன நானே


ஆண்: செல்லம்மா மெழுகு டால்லு நீ அழகு ஸ்கூல்லு நீ
எனக்கு ஏத்தவ நீதான்டி
பெண்: ஹன்ட்சம் ஆளு நீ சுப்பர் கூலு நீ
நானும் நீயும்தான் செம ஜோடி

ஆண்: பொதுவா தோனி போல நானும் காம் மும்மா
இன்னைக்கு எக்ஸ்சைட்மென்ட் ஆனேன்ம்மா
கண்ணால் வளைய வீசி என்ன தூக்குமா
லைப் டைம் செட்டில்மென்ட் நான்தான்ம்மா

பெண்: இனிமே டிக் டாக் எல்லாம் இங்க ஃபேன்ம்மா
நேரா டூயட் பாட வாயேன்ம்மா
ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா இருந்ததெல்லாம் போதுமா
கொஞ்சம் ஸ்வீட்டா சிரிச்சு பேசேம்மா

ஆண்: செல்லம்மா செல்லம்மா
அங்கம் மின்னும் தங்கம்மா
பொன்னம்மா மெல்லம்மா கட்டி கிள்ளேன்மா
கண்ணம்மா கண்ணம்மா
கண்ணு ரெண்டும் கன் அம்மா
கொஞ்சம்மா கொஞ்சிம்மா சுட்டு தள்ளேன்மா

# 'பிக்பொஸ்' நிகழ்ச்சிக்கு தயாராகும் கமல்...



தமிழ் தொலைக்காட்சிகளில் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப்பெற்ற நிகழ்ச்சி பிக்பொஸ். கமல்ஹாசன் தொகுத்து வழங்கிய இந்நிகழ்ச்சி இதுவரை மூன்று சீசன்கள் முடிந்துள்ளன. வழக்கமாக ஜூன், ஜூலை மாதங்களில் ஆரம்பிக்கப்படும் இந்நிகழ்ச்சி இந்தாண்டு கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இன்னும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது.

விரைவில் பிக்பொஸ் 4ஆவது சீசனுக்கான பணிகள் தொடங்கும் எனக் கூறப்படுகிறது. தற்போது இதற்கான படப்பிடிப்பு அரங்குகள் அமைக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறதாம்.

இந்நிலையில், இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் கமல்ஹாசனின் புதிய தோற்றம் சமூக வலைத்தளங்களில் வைரலாகிவருகிறது. முறுக்கு மீசை, வெள்ளை தாடியுடன் வித்தியாசமான தோற்றத்திலிருக்கும் அவரை பிக்பொஸ் நிகழ்ச்சியில் பார்க்க ரசிகர்கள் மத்தியில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

பிக்பொஸ் 4ஆவது சீசனிலும் சர்ச்சைக்கும், பரபரப்புக்கும் பஞ்சம் இருக்காது எனக் கூறப்படுகிறது. ஏனெனில், இதில் வனிதாவின் 3ஆவது திருமணத்தை எதிர்த்து பரபரப்பாக பேசப்பட்ட சூர்யாதேவி மற்றும் நடிகைகள் சனம் ஷெட்டி உள்ளிட்ட சிலர் தெரிவாகியிருப்பதாக பேசப்படுகிறது.



# வண்ணம் கொண்ட வெண்ணிலவே!

இந்த மனசு எவ்ளோ பொல்லாத வன்மம் புடிச்சது?! ஒரே ஒரு கசப்பான சண்டை போதும், ஒரு வருஷ நல்ல நினைவுகளை எரி(றி)க்க.
ஏதோ சண்டை, மனஸ்தாபம் மனசுல புகைந்து கொண்டிருந்த இரவில் இந்த பாடல் எத்தனை ஆறுதல். கண்ணுல வேர்த்து காது வரை வழியும். **earphones**ல "வண்ணம் கொண்ட வெண்ணிலவே" பாட்டு ஓடினா போதும்.

**பக்கத்தில் நீயுமில்லை, பார்வையில் ஈரமில்லை**
**சொந்தத்தில் பாஷையில்லை, சுவாசிக்க ஆசையில்லை**

தவிப்புக்கு வடிவம் இருந்தால் கண்ணீராகுமோ? ஊடலுக்கு குரல் இருந்து ஒலிநாடாவாக்கினால் இந்த பாடல் மட்டும் தான் இடம்பெறும்.

**நீலத்தை பிரித்துவிட்டால், வானத்தில் ஏதுமில்லை**
**தள்ளித்தள்ளி நீயிருந்தால், சொல்லிக்கொள்ள வாழ்க்கை இல்லை**

எஸ்.பி.பி.யை, ராஜா குத்தகைக்கு எடுத்திருந்த காலம் தான் பொற்காலம்.
காதலின் குரல் இவர். மொழிக்கு சொந்தக்காரர் வைரமே.
லயித்தல் ஒரு உச்சநிலை.
லேசுல அந்த வார்த்தையை
பயன்படுத்திட முடியாது.
ரொம்ப உன்னதம் நிறைந்தது.
**Bliss**. அதுதான் இவரின் குரல்.
காத்திரம் நிறைந்தது.
இதில் சுவாரஸ்யமே, இந்த "சிகரம்"
படத்திற்கு இசையமைத்தது எஸ்.பி.பி.

இந்த இசை சகாப்தத்திற்காய்
செவிகள் இன்னும் காத்திருக்கு...

**உன்னைத்தொட ஏணியில்லை!**



- அக்ஷயா ஷேகர்

# இரண்டு கிராமங்களை தத்தெடுத்த ஜாக்குலின்

இலங்கையைச் சேர்ந்த பிரபல பொலிவூட் நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸ் மராட்டி மாநிலத்தில் இரண்டு கிராமங்களை தத்தெடுத்துள்ளார்.

சல்மான்கானின் நெருங்கிய தோழியான இவர், அவருடன் இணைந்து பல சமூக பணிகளை செய்துவருகிறார். இந்நிலையில், கடந்த 11ஆம் திகதி பிறந்தநாளை கொண்டாடிய ஜாக்குலின், தனது பிறந்தநாளை முன்னிட்டு கொரோனா வைரஸால் கடுமையாக பாதிக்கப்பட்ட 2 கிராமங்களை தத்தெடுத்த தகவலை இப்போது வெளியிட்டிருக்கிறார். பதார்த்தி, சக்கூர் என்ற இந்த கிராமங்கள் மராட்டிய மாநிலத்தில் உள்ளன.

இதுகுறித்து ஜாக்குலின் கூறியிருப்பதாவது:

கொரோனா தொற்றால் மக்கள் பலர் பாதித்துள்ளனர். இது அனைவருக்கும் கஷ்டமான காலம். பலர் அடிப்படைத் தேவைகளுக்காக போராடுகிறார்கள். மக்களுக்கு நம்மால் ஏதேனும் உதவிகள் செய்யவேண்டும் என்ற நோக்கில் இரண்டு கிராமங்களை தத்தெடுத்துள்ளேன். இந்தக் கிராமங்களில் வசிப்பவர்களுக்கு ஊட்டச்சத்து உணவுகள் வழங்குதல், வேலைவாய்ப்பு பயிற்சி, மருத்துவ சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பல பணிகளை செய்யவிருக்கிறேன் - என்கிறார்.

# வைரலாகும் யாஷிகாவின் புகைப்படங்கள்


கோலிவூட்டின் இளம் ஸ்டைல் நடிகையாக வலம் வருகிறார் நம்ம யாஷிகா ஆனந்த். புசுபுசுன்னு இருந்த போதும், ஸ்லிம் ஃபிட் மொடல் ஆனபோதும், இளைஞர்களை கவரும் விதமாக எப்படி கவர்ச்சியாக புகைப்படங்களை வெளியிடுவது என்பதை பக்காவாக அறிந்து வைத்திருக்கிறார் இவர்.

'பிக்பொஸ் 2'ஆவது சீசனில் கலந்துகொண்டு, குட்டி டிரெஸ் அணிந்துகொண்டு, இளைஞர்களையும் ரி.வி. சீரியல் பார்ப்பதுபோல அந்த நிகழ்ச்சியை பார்க்கவைத்த பெருமை யாஷிகாவையும் தாராளமாக சேரும். குண்டா இருக்கீங்க என்ற கமெண்ட்டை மாற்றவேண்டும் என நினைத்த அவர், இந்த லொக்டவுனில் மூன்று மாதங்கள் கடினமாக வோர்க்கவுட் செய்து தனது தோற்றத்தை தற்போது மாற்றியுள்ளார்.



கோலிவூட்டின் இளம் ஹொட் பியூட்டியான யாஷிகா ஆனந்த் வெளியிடும் ஒவ்வொரு புகைப்படங்களும் வேற லெவலில் வைரலாகிவருகிறது. யாஷிகா ஆனந்த் தற்போது ஒரு போட்டோஷூட் நடத்தி அந்த போட்டோக்களை வெளியிட்டுள்ளார். வழமைபோல் அதுவும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று சமூக வலைத்தளங்களில் வைரலாகிவருகிறது.

தற்போது நடிகை யாஷிகா வெளியிட்டுள்ள புகைப்படத்தைப் பார்த்த ரசிகர்கள், என்னடா யாஷிகா இப்படி ஹாட்டா இருக்காரே என ஆச்சரியப்பட்டுள்ளனர். ஸ்லிம் பியுட்டியான பிறகு அவர் வெளியிட்ட புகைப்படங்களை பார்த்து கலாய்த்தவர்களும் இந்த புகைப்படத்தை பார்த்து ரசித்து வருகின்றனர்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7